# பவாநந்தரின்

# அபூர்வ சாமர்த்தியங்கள்.

12618

[ ஒரு துப்பறியும் நவீனம். ]

RAJAGOPAL PILLAI
492
BIKSHANDAR

சென்னை லக்ஷ்மிவிலாஸ் புஸ்தகசாலை
சொந்தக்காரர் பி. வைத்திநாதய்யரால்

சென்னை திருவல்லிக்கேணி
"வாணீபூஷணம்" அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1909.

விலை அணா 8.

நூல் நிலையம்,
சென்னை - 600

[All Rights Reserved.]

BF
0-13 A6507
27

# நூன்முகம்.

ஒரு நூல் எழுதப்படுவதின் அவசியமும் அதனால் விளையக்கூடும் பனும் கூறவேண்டுவது நூலாசிரியரின் பொறுப்பாகும். 'பவா ந்தரின் அபூர்வசாமர்த்தியங்கள்' என்னும் இச்சிறிய புஸ்தகம் சனநாட்களில் தப்பறியும் நவீனங்கள் இனத்தைச் சேர்ந்தது. த்தகைய புத்தகங்கள் மேனாட்டுப் பாஷைகளாகிய இங்கிலீஷ், ரஞ்சு, ஜெர்மன், முதலிய பாஷைகளில் நாடோறும் எண்ணிறந்தன வெளியாகின்றன. நம்தமிழ்பாஷையில் இவைகளை நம்முன்னோ கள் எழுதினார்களில்லை. ஏனெனில், அவர்களின் எண்ணமும் நாக்கமும இம்மையைச்சார்ந்ததான இதைக்கேவலமாய்க்கருதி ர்தமான மறுமை மார்க்கங்களில் சென்றன. இந்நாட்டாராகிய ம் சரித்திரத்தை பிரமாதமாகக் கருதுபவரல்ல. நமக்கு வீட்டு ம்பிராஜ்யத்தைப் போதிப்பனவான நூல்களே முக்கியமானவை. ற்றவை எவையுமே நமக்கு இலட்சியமில்லை. மேனாட்டாரோ வ்விஷயத்தில் நமக்கு நேர்விரோதம். ஆகையினாலேயே தான் 'கிழ ; கிழக்குத்தான்' மேற்கு மேற்குத்தான், இவைகள் என்றும் திக்கா, 'என்று சாதரணமாய் பழமொழி ஒன்று வழங்குகிறது. மனாட்டார் எதையும் எழுதிவைக்கும் சுபாவமுடையவர்கள். ம்மவர்கள் சிலர் நம்மிடம் இச்சுபாவமில்லாததை தக்குறையாக பா யாமல் இதை நமக்கியல்பாயுள்ள அடக்கமாகக் கருதுவார்கள். பந்திரிபாரக்கற்றன்றி எழுத முன்வருவதில் யாது பயனென்பார் r. மேனாட்டார் எழுதாமலே தேர்ச்சிபெறமுயல்வது தண்ணீ ல் இறங்காது கரைமீது நின்று நீந்தக்கற்க முயல்வ தொப்ப தமென்று இழிவுபடுத்திக் கூறுவார்கள்.

இது நிற்க ஒவ்வொரு நாட்டிலும் குற்றங்கள் நவீனமாக ாபுத்திசாலிகளை பிரமிக்கசெய்யும் படியாக நடந்தேயிருக்கி றன, நடக்கவும் செய்கின்றன. இவைகளைச் செய்தவர்களும்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாத...

மிக்கயுக்தி புத்தி சாதுர்யர்களால் பிடிக்கப்படுகிறார்கள். நம் நாடு இதற்கு விலக்கல்ல. ஆனால் ஒரு விஷயம். அவர் மார்க்கங்கள் எழுதப்படவில்லை. மிக்கசாமர்த்தியமுள்ளவர்கள் வெகுசிலரே இருத்தல் கூடும். அவர்களால் பலர் கற்பிக்கப்படவேண்டும். இதற்குப் புஸ்தகங்கள் போல் சாதகமான காவி பிறிதொன்றுமில்லை. குற்றங்களைக்கண்டு பிடிப்பதற்காக இண்டலிஜன்ஸ் டிபார்ட்மெண்டார் என்று போலீஸார்களில் இருக்கிறார்கள். போலீசில் துப்பறியும் வழிகளை சரியாகக்கற்காதவர்களும், முன் யோசனையில்லாதவர்களும், தீர ஆராயும் பொறுமை யில்லாதவர்களும் ஒன்றிரண்டுபேரல்ல. ஆகையால் வீண்சிரமங்கள் ஏற்படுகின்றன. குற்றமற்ற நிரபராதிகள் குற்றவாளிகளென்று இத்தகையார்களால் அனுமானிக்கப்படுவதால் அன்னார் அடையும் இன்னலுக்கு கங்குகரை கிடையாது. இது நூதனவிஷயமொன்றன்று. கற்பித்துக் கூறப்பட்டதுமன்று. அனேக கேஸ்களில் நூற்றுக்கணக்காய் ஜனங்களை போலீசார் கைதுசெய்திருக்கிறார்கள். கடைசியில் பார்க்கும் பொழுது குற்றவாளிகளெனத் தீர்மானிக்கப்பட்டு தண்டனை பெற்றவர்களை ஒரு கைவிரலால் எண்ணலாம். இதற்கெல்லாம் காரணமென்ன? நம் நாட்டில் போலீஸ் டிபார்ட்மெண்டிலிருப்பவர்களின் படிப்புக்குறைவே. மேலும் அவர்கள் சரியான வழியில் பழக்கப்படாமையே. இத்தகையார்களுக்கு இப்புஸ்தகம் ஏதாவது பிரயோஜனத்தை விளைவிக்குமாயின் இதுவே இப்புத்தக மெழுதியவருக்கு பெரிய கைம்மாறாகும்.

ஒரு விஷயம். இந்தப்புஸ்தகம் துப்பறியும் நவீனத்தில் நூதனமாக முதல் முதலில் எழுதப்பட்டதல்ல. காலஞ் சென்ற பண்டித நடேச சாஸ்திரியார் பொது ஜன நன்மையை முன்னிட்டு 'தானவன் என்னும் போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள்' என்று ஒருபுஸ்தகம் வெளியிட்டார். இதற்குப்பின் காலஞ்சென்ற பி. எ. பிராணநாத்தி ஹரசிவா என்பவர் 'அனுமான்சிங் அல்லது கொலைகளவுத்திறவுகோல்' என்றபுஸ்தகமெழுதினர். ஆதலால் இப்புத்தகமும் முன்னாசிரியரின் வழிமுறை பற்றி வரையப்பட்டதாகும். நற்புலமை வாய்ந்தோரும் ஆய்ந்தறி

யும் வண்ணம் வனப்பேற வரையும் ஆற்றலுள்ளவ னல்ல
ஆயினும் ஸ்ரீராமர், சேதுபந்தனம் செய்தபொழுது வானரவீரர்
யாவரும் மலைகள் மலைகளாய்த் கொணர்ந்து கடலிலே போட
ஒரு சிறு அணில் தன்னாலியன்ற சிறுமணற் பொடிகளை கடலிலி
ட்டுதவியபெருமையைக் கண்டானந்தித்ததுபோல, என் சிற்ற
றிவுக் கெட்டியவாறு, முயற்சி திருவினையாக்கும் என்னும் கருத்
துக்கொண்டு எழுதிய இந்நூலை இகழ்ச்சி புரியாது குற்றந்தள்ளி
குணங்கொள்ளுமாறு பெரியோரை வேண்டுகிறேன்.

இந்நூலை பிழைதிருத்தங்கள்செய்து சீர்படுத்தி வெளிப்படு
த்திய ம-௱-௱-ஸ்ரீ வைத்தியநாத ஐயரவர்களுக்கு நான் மிகவும்
கடமைப்பட்டவனாகின்றேன்.

சென்னை
ஆகஸ்டு 20-1909

நூலாசிரியர்.

## காப்பு.

வாளுட்டும் வண்புகழ்சார் வண்ணக்கான் மான்பங்சர்
பேளுட்டு மெண்ணத்தான் பேவிபே—மேளுட்
டணிநூற்பவாநந்தர் ஆற்ற லரையப்
பணிவேன் பரமன்பதம்.

# பவாநந்தரின்

## அபூர்வ சாமர்த்தியங்கள்.

### தற்கொலையோ?

பவாநந்தர் பிரயாணத்துக்கு சித்தமாயிருக்கிறாரென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் டிரங்குப் பெட்டியும் கைத்தோல் பையும், ஒருகைபிடி தடியும், படுக்கையும் தயாராய் வைக்கப்பெற்றிருக்கின்றன. அவைகளை வண்டியில் ஏற்றிவைக்க வேண்டியதுதான் வேலை. வண்டிக்கும் சேவகன் போயிருக்கிறான் போலும்.

பவாநந்தர் மேஜை பக்கத்துட்கார்ந்து கடிதம் அவசரமாய் எழுதிக்கொண்டிருந்தார். சாமான்களை சரியாக வைத்துக்கொண்டிருந்த இரங்கசாமியைப் பார்த்து, "காபிகொண்டுவா" வென்றார்.

"இதோ வந்துவிட்டேன்" என்று இரங்கசாமி ஓடினான்.

இதற்குள்ளாக டெலிபோன்மணி அடித்தது. 'இரங்கசாமி' என்றார். இரங்கசாமி திரும்பிவந்து டெலிபோனிடம் போனான்.

"யாராயிருந்தாலும் சரி, நான் ஊருக்குப் போய்விட்டதாகச் சொல்லிவிடு. இது பொய்யொன்றுமில்லை. ஏனென்றால் இரண்டுநிமிஷத்தில் புறப்படப்போகிறேன்" என்றார் பவாநந்தர்.

"அப்படியே ஐயா" என்றான் இரங்கசாமி.

"யார் நீங்கள்? யார் நீங்கள்? பவாநந்தர்தானே" என்று கேட்கப்பட்டது.

"ஆம், இல்லை—ஊருக்குப் போய்விட்டார்—விலாசம் தெரியாது. முடியாது. அது அசாத்தியம்" என்று இரங்கசாமி சொல்வதை பவாநந்தர் கேட்டுக்கொண்டிருந்தார்.

"என்ன?" என்றார் பவாநந்தர்.

இர:—"தங்களைப் பார்க்கவேண்டுமாம். நான் தங்களுடைய விலாசம் தெரியாதென்றேன். யாரோ ஒருவருக்காவது விலாசம் தெரிந்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறார். மிகவும் முக்கியமான விஷயமாம்."

பவ:—"என்னவோ மூட்டைக்காரண்டி திருட்டுப்போயிற்றும். முக்கியவிஷயம்!"

இர:—அது மிகவும் முக்கிய விஷயம் என்கிறாள்.

"யார்? அவள்" என்று சொல்லிக்கொண்டு பவாநந்தர் எழுந்தார்.

"ஆம் ஐயா! ஸ்திரீயின் குரல், தடையில்லை, எவ்வளவு பரிஷ்காரமாயிருக்கிறது."

டெலிபோனிடம் பவாநந்தர் வந்ததும் இரங்கசாமி புன்சிரிப்புச்சிரித்து விலகிக்கொண்டான்.

ஒரு ஸ்திரீயின் குரல். பேசுங்கருவியின் நாராசமான சப்தத்துக்கு அவள் குரல் எவ்வளவு இனிமையாயிருக்கிறது.

"பவாநந்தர்! உண்மைதானா! ஐயா, மிகவும் சந்தோஷம் நீரிருப்பீரென்பது எனக்கு உறுதி. உடனே நீர் இங்கு வரவேண்டும். தாமதிக்கக்கூடாது. பத்மவிலாசம். ஆம், உமக்கு இராதாகிருஷ்ணனைத் தெரியும். இரண்டுநாளாயிற்று. அவரைக்

...ரேணும். நான் அவரின் ஒரேமகள். ஜயலட்சுமிதயவுசெய்து வாரும். நமஸ்காரம் கோடி ஐயா, உங்களுக்கு.

"இரங்கசாமி மூட்டையை அவிழ்" என்றார் பவாநந்தர்.

இர:—"ஐயாநான் நினைத்தேன்—"

பவா:—"பரவாயில்லை. வண்டிவந்துவிட்டதா?"

முக்கியமானகேஸ். இராதாகிருஷ்ணர் ஐயோ! குபேரனவர். இராஜபோகத்திலிருந்தார். எத்தகைய மாளிகை சுற்றிலும் தோட்டம் எவ்வளவு நேர்த்தியானது. எப்படி அவ்வளவு சேவகர்களிருந்தும் காணமல் போனது? இருக்கட்டும் என்று மாடிவிட்டுக் கீழிறங்கி வண்டியிலேறி உட்கார்ந்துகொண்டார். வண்டியும் தண்டையார் பேட்டைக்குப் புறப்பட்டது.

"இதை அறியவேண்டியதவசியம்" என்றார்.

பெண்ணென்றால் பேயும்மனமிரங்குமென்றால் பவாநந்தர் அந்தஸ்திரீயின் குரலால் மனங்கசிந்தாரென்று சொல்லவும்வேண்டுமோ?

சற்று தூரத்திலிருந்தே பத்மவிலாசம் தெரிந்தது. அதன் வைபவத்தைக் கண்டு மனமகிழ்ச்சி யடைந்தார். சிறு கட்டப்படும் முன் பாழாய்க்கிடந்தது. கட்டடம் கட்டினவன் இராதாகிருஷ்ணரின் அதிஷ்டம், மகாபுத்திசாலி; யுக்திசாலி; இராஜமாளிகையாக கட்டிவிட்டான். சுற்றிலிருக்கும் தோட்டத்துக்கு நடுவே கட்டடமிருப்பது இந்திரலோகம் போலிருக்கிறது.

பவாநந்தர் வண்டி பங்களாவுக்குள் பிரவேசித்தது வண்டி சப்தத்தைக் கேட்டு ஆவலுடன் ஜயலட்சுமி தயாராய் எதிர்கொண்டழைக்க நின்றிருந்தாள். அவள் சுந்தரத்தைக்கண்டால் வன கன்னிகைபோலிருந்தது. அவள் கருங்கூந்

தனும் சந்திரபிம்பமுகமும் வியஸனத்தால் அலங்கோலமா யிருந்தன. இவைகளும் அவளழகை நன்கு புலப்படுத்தியன.

"ரொம்பசந்தோஷம் ஐயா! வாருங்கள்" என்று அவரை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு சென்றாள். இருவரும் ஒரு அறைக்குள் பிரவேசித்தார்கள். இதில் சிலமேஜைக ளும் நாற்காலிகளுமிருந்தன. ஒருபுறத்தில் புஸ்தக பீரோக் களிருந்தன. சுவரில் டென்னிஸ், பாட்மிண்டன் பாட்டுகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அறை பார்க்கவும் மிகவும் சுத் தமாயிருந்தது.

"உட்காரவேண்டுமையா" என்று ஒரு நாற்காலியைத் தூக்கிப்போட்டுவிட்டு தூரமாய் நின்றுகொண்டு, மிக்கபணி வாயும், மரியாதையாயும்,

"ஐயா," நான்தான் டெலிபோனில் உம்மை அழைத் தவள். உம்மைப்பற்றி என்தந்தை சொல்ல வெகுவாய்க்கே ள்விப்பட்டிருக்கிறேன்" என்றாள்.

பவாநந்தர் புன்சிரிப்புச் சிரித்தார். அறையைச்சுற்றி லும் பார்த்தார். இதற்குள்ளாக இவரைத் தேடிக்கொண்டு போன ஜயலட்சுமியின் காதலன் இரங்கநாதன் வந்தான்.

ஜயலட்சுமி "ஐயா! இவர்தான் என்நாயகன்" என்று சொல்லி தலைகுனிந்து கொண்டாள்.

பவாநந்தரும் இரங்கநாதரும் கைகுலுக்கி உட்கார்ந்து கொண்டார்கள். இரங்கநாதன் உயரமாயும் மாநிறமாயு மிரு ப்பான். அவன் முகத்தைப்பார்த்தால் மகா புத்திசாலியெ ன்றும் எதில் மனஞ் செலுத்துகிறனோ அதை கைகூடச்செ ய்யும் மனவுறுதி கொண்டவன் என்றும் தெரியும். இரங்க நாதனும் பவாநந்தரை முன் பார்த்ததில்லையாதலால் அவ ரைக் குறிப்பாய்ப் பார்த்தான்.

ஜயலட்சுமி:—ஐயா, இவர் என் பாலியத்திலிருந்து நேசமூர். நாங்களிருவரும்பந்து விளையாடுவோம். இவர் எங்களைப்போல், பணக்காரரல்லவென்பது உண்மையே என்றாலும், அவரின்மேல் என் மனம் சென்றுவிட்டது. என் தந்தைக்கு பிரியமில்லாதிருந்தும் கல்யாணம் முடித்துவைத்தார். எனக்கு எவ்வளவு இவர்மேல் பிரியமோ, அவ்வளவு என் தந்தைக்கு இவர்மேல் வெறுப்பு. ஆகையினாலே என்மேலும் சற்று வெறுப்புத்தான். இதற்காக அவர் ஒரு ஸ்திரீயை எனக்கு துணையாயிருப்பதற்கென்றுசொல்லி ஒரு மாதத்துக்கு முன் அழைத்துவந்தார். அந்த அம்மாளுமிங்கேயிருக்கிறாள். நான் அவளைப்பற்றி அனுவசியமாகச் சொல்லப் பிரியமில்லை. எனக்கு அவளைப் பிடிக்கவில்லை. என் தந்தை வரவர அவள் மேல் அதிகப்பிரியம் காட்டிவந்தார். இந்த சொல்பகாலத்துக்குள் அவள் அவரின் மனதை கவர்ந்துவிட்டாள். அவளைக்கேட்காமல் யாதொரு காரியமும் செய்கிறதில்லை. அவள் சொல்வதற்கு மாறுபட்டு நடக்கிறதில்லை.

இரங்:— ஐயா! முன்பின்னறியாத இந்தஸ்திரீதான் அவர் காணாமலிருப்பதற்கு காரணமென்று நான் உறுதியாய்ச் சொல்வேன்.

பவா:—இதென்ன யார் காணோம்?

ஜய:—சொல்வதற்கென்னவிருக்கிறது? இவர்கள் திருவெற்றியூருக்குசுவாமி தரிசனத்துக்கு போய்விட்டுவெள்ளிக்கிழமை வந்தார்கள். சனி சாயந்திரம் என்தந்தையைநான் பார்த்தேன். அப்பொழுது காரியக்காரவிநாயகமும் கூடவிருந்தார். அவர் வெளியில்போய்விட்டு வந்து பார்த்தாராம். தந்தையைக்காணோமாம்.

"காரியக்காரர் எஜமான் தோட்டத்தைச்சுற்றி பார்க்கப்போயிருக்கிறாரென்றுநினைத்துசும்மாயிருந்து விட்டாராம்

சாப்பாட்டுக்கு குண்டுபோட்டும் அவர் திரும்பவில்லை. தோட்டமெல்லாம் உடனே தேட ஆரம்பித்தோம். காண வில்லை. என்ன செய்வோம்? உடனே டாணாக்காரரிடமும் செய்திசொல்லிவர அனுப்பியிருந்தோம், அவர்களாலும் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. நாங்கள் விசனப்பட்டுக்கொண்டிருக்கையில், இந்தம்மாள் சகல சொத்தையும் தன்பேரில் அவர் உயில் எழுதிவைத்ததாய்ச் சொன்னாள்.

பலா:—நீ என்னை அழைத்தாய்? இவ்வளவுதானே.

ஜப:—முக்கியமான விஷயமொன்றிருக்கிறது. நேற்று சாயுந்திரம் இவர் இங்கிருந்ததால், ஏதோ குசுகுசு என்று பேச்சிருக்கிறது.

இர:—ஒளிவு மறைவென்ன? விசிதமாய்ச் சொல்லேன். ஐயா, அவரை நான் கொன்றதாக சம்சயம் பலமாயிருக்கிறது.

ஜப:—தந்தை இறந்துபோகவில்லை. கொல்வதாயிருந்தால் அவளைத் தவிர கொல்பவர்கள் கிடையா. அவள் இஷ்டப்பட்டாலும் முடியாது. ஐயா, தயவுசெய்து அவரிருக்குமிடம் கண்டுபிடிக்கவேண்டும்.

பல:—நம்மால் கூடியவரை முயன்று பார்ப்போம்.

ஜப:—நீர் அவரிருக்கும் அறையைப் பார்க்க வருகிறீரா?

பலா:—தடையென்ன? இதோ போகலாம் இருக்கட்டும். என்ன காரியக்காரரிருக்கிறாரே அவர் யோக்கியர் தானே? ருக்மணியைப்பற்றி நீ என்ன நினைக்கிறாயென்பது எனக்குத்தெரியும். விநாயகம் எப்படிப்பட்டவர்?

ஜப:—கூடியவரையில் நல்லவர்தான். மிகவும் சாமர்த்தியசாலியல்ல. யோக்கியர், நேரானவர். அவள் வந்த சில தினங்களில் இவர் அவள் மீது ஒருவித ஆசைகொண்

டிருக்கிருளென்று நினைக்க ஏது விருந்தது. அவர் அவ ளின் சுபாவத்தை அறிந்துகொண்டார். பின் தந்தையின் பேதமையை எவ்வளவு அநுகூலமாகக் கொண்டிருக்கிரு ளென்று தெரிந்தபின், அவரும் என்னைப்போல் அவளை வெறுக்க வாரம்பித்தார். இதைத் தந்தையிடம் முறையிட் டும், அவர் இவரை 'காரியத்தைப்பார்' என்று சொல்லிக் கண்டித்து விட்டார். இவர்தான் டெலிபோனில்பேசி உம் மைவரவழைக்க எனக்கு சொன்னது.

இர:— நீ என்ன சொன்னாலும் சரி. நான்மட்டும் நம்பமாட்டேன். அவன் மகாகிராதகன். நாளை வட்டத்தில் தெரியவரும். (மிகவும் மரியாதையாய்) ஐயா! உம்மைப்ப ற்றி வேண்டிய அளவு கேள்விப்பட்டிருக்கிறேன். நீர் வந்த விஷயத்தில் எனக்கு அத்தியந்த திருப்தி. இந்த விபரீத விநோதத்தை யாராலாவது கண்டுபிடிக்க முடியுமானால் உம் மால்தான்முடியும். நான்போய்வருகிறேன். என்னால் ஏதா வது ஆகவேண்டுமானால் எந்த நிமிஷத்தில் வேண்டுமானா லும்தயார்.

இரங்கநாதன் பின்ஜயம்போய் அனுப்பிவிட்டுத் திரும் பினன். பவாநந்தர் இந்தசமயம் நோட்புஸ்தகத்தில் ஏதோ எழுதிக்கொண் டிருந்தார். ஜயம்பேசினபின், தலைநிமிர்ந்து பார்த்தார்.

காதலன் சென்றதும் இவள் சஞ்சலமடைந்தவளாகத் தோற்றினள்.

'தாங்கள் வாசிப்புஸ்தல அறையைப் பார்க்கவேண்டா மா, என்ருள்.

வாசிப்பு ஸ்தலம் பெரியஹால். சுவரில் ரவிவர்மாவின் படங்கள் பெமாட்டப்பெற்றிருந்தன. நடுவில்ரவுண்டுமேஜை யும் சுற்றுப்புறம் நாற்காலிகளும் போடப்பெற்றிருந்தன.

ஜன்னல்களில் காற்று சுகமாய் வந்துகொண்டிருந்தது. ஒரு சுவரில் இராதாகிருஷ்ணரின் புல்சைஸ்படம் தொங்கவிடப் பெற்றிருந்தது. மற்றொரு பக்கத்தில் பெரிய நிலைக்கண்ணாடியிருந்தது. 'ஒருமூலையில் போனகிராப் வாத்தியம் வைக்கப்பெற்றிருந்தது. பங்கா மேஜைக்குமேல் கட்டப்பட்டிருந்தது.

ஒருகதவு உட்கட்டடத்துக்குப்போகும்வாசல். மற்றொன்று சிறியகதவு. அதன் வழியாய்ப் போனால் தோட்டத்துக்குள் போகலாம்.

இச்சிறியவாசல் பவாநந்தரின் நோக்கத்தைக் கவர்ந்தது. அதனிடம் எழுந்துபோனார். திறக்கப்பார்த்தார்.

ஜய:—ஐயா, பூட்டியிருக்கிறது. என்தந்தையிடம் அச்சாவி இருக்கும். ஆ! நீங்களா மாமா! என்னமெதுவாய் வருகிறீர்கள்! ஐயா, இவர்தான் என்பிதாவின் காரியக்காரர், இவர்தான் உம்மை வரவழைக்கும்படியாய் எனக்கு சொன்னது.

பவாநந்தர் சிரித்துக்கொண்டு விநாயகத்தை உற்றுப் பார்த்தார்.

"பார்வைக்கு அவர் வலுவுள்ளவர். தேகக்கட்டுள்ளவர், அழகான உருவத்தினர். சாமர்த்தியசாலியல்ல. 30 வயதிருக்கும்"

இவர் பவாநந்தர் கையைப் பிடித்துக்கொண்டு, 'ஐயா உம்மைக்கண்டதேபெரும் பாக்கியம்,இப்பெண்ணுக்காகவும் எல்லாருக்காகவும் தாங்கள் வந்ததற்காக சந்தோஷப்படுகிறேன்'

ஜயலட்சுமி சற்றுசும்மாயிருந்தாள். 'நான் அப்புறம் சென்றுவரட்டுமா' என்றாள். பவாநந்தர்'சரி'என்றார். போய்க்கொண்டு 'வேண்டுமென்றால் ஒரு குரல் கூப்பிடுங்கள் வந்துவிடுகிறேன்' என்றாள்.

பவாநந்தர் 'தங்கமான பெண்' என்றார். விநாயகம் 'பத்தரைமாத்துத் தங்கம். அவள் நிலைமைக்காக மிகவும்வருந்துகிறேன்' என்றான்.

மெதுவாய்க் கதவு இடிக்கப்பட்டது. கதவு திறக்கப்பட்டதும் மிகவும்மரியாதையாய் விநாயகம், 'அம்மா நான் தங்களிடம் எவ்வளவோ முறை சொல்லியிருக்கிறேனே. மகா நிபுணரென்று இவர்தான் அவர்' என்றான்.

பவாநந்தர் ருக்மணியைப் பார்த்தார். அவள்வனப்பை வர்ணிக்ககம்பர்தான் வரவேண்டும். பவளம் போன்ற இதழ்களும் குவலயம் போன்ற நயனங்களும் மேகம்போன்ற கருங்கூந்தலும், பார்க்க பார்க்க ரம்மியமாயிருந்தன. அவள் நல்லகருப்பான புடைவைத்தரித்திருந்தது அழகைசிறப்பித்தது.

சற்று மௌனமாயிருந்து, 'என்னவிசேஷம்சேதியென்ன' என்றாள். அவள் இக்கேள்விகளை விநாயகத்தைகேட்டாளானாலும் பவாநந்தரையும் நீக்கிக்கேட்டயாதிரியிருந்தது.

வி:—ஒன்றுமில்லை, நாம் ஏக்கமடைய வேண்டுவதில்லை நாம் உயிரோடிருக்கும் வரை நம்பிக்கை யிழக்கக் கூடாது தங்களுடைய கணவனை யாராவது கண்டுபிடிக்க முடியுமானால் இவரால்தான் முடியும்.

ரு :—ஐயா, எனக்குமிகவும் சந்தோஷம். உங்களுக்குத் தான். நான் அவர் கிழவராயிருப்பதால் அவரிடத்தில் பிரியமில்லாதவளாம். நான் பணத்துக்காக பிரியமுள்ளவள்போல் நடிக்கிறேனும். இது என்ன பழி? அவர் சகலத்தையும் எனக்கு எழுதிவைத்தால், நான் கூடாது என்றுஎப்படி நடித்துச் சொல்வது? நான்மிகவும்பட்சமாயிருந்துவந்தேன். அவரைக் காணாததால் என் உயிர் தவித்துக்கொண்டிருக்கிறது. (கண்ணீர் பெருக்கினாள்.) நேற்று காலை சிறிய மனஸ்தாபத்து

க்கிட முண்டாயது. ஐய லட்சுமிக்குப் பரிந்து பேசினேன், வேறொருகாரணமுமில்லை. அவருடனே எழுந்துபோனவர் தான். அவரை எப்பொழுது இனி பார்ப்பேனோ ? (தேம்பித் தேம்பி அழுதாள்) அவர் கிடைத்துவிட்டால் போதும் என்ன வேண்டுமானாலும் கொடுத்துவிடுகிறேன்.

பவாநந்தர் ஒரு ஸ்திரி துக்கத்தால் பரிதபிக்கும் பொழுது மிகவும் மனம்வருந்துவார். மிகவும் பட்சமுடன் 'அம்மா ! என்னால் கூடுமானால் எப்படியும் அவரைக்கண்டு பிடித்துவிடுகிறேன். நீர் கொடுப்பது ஒரு பெரியகாரியமே யல்ல, என்றார். ஆனால் உமக்காக— உன்மட்டும் சொல்லவில்லை' (அவர் சொன்னமாதிரியில் அவருடைய கருத்து அது என்று தெரியும்.)

ருக்மணி இதை அறிந்துகொண்டாள். உடனே தேறுதலுண்டாயிற்று. முகமலர்ச்சியுடன் 'ஐயா ! காரியத்தை கவனியுங்கள் கடவுள் உங்களுக்கு சகாயம்செய்யப் பிரார்த்திக்கிறேன்' என்று பணிவுடன் சொன்னாள்.

விநாயகம் அவள் உட் புகும்பொழுது கதவண்டை நின்று கொண்டிருந்தான்.

பவாநந்தர் குறிப்பாய் விநாயகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். 'இவர் அவளிடம் காதல் கொண்டிரா விட்டால், இவர் மிகசாமர்த்திய நடி' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார்.

கதவு சாத்தப்பட்டதும் பவாநந்தர், 'வேலையைத் துவக்குவோம், ஏது நிரம்பத்தாமதமாய்விட்டது' என்றார்.

வி :—தாங்கள் சாப்பிடவேண்டாமா ?

ப :—முதல் காரியம்; அப்புறம் மற்றவைகள். அவர் போனபின் எவ்வளவுகாலம் நீர் இங்கிருந்தீர் !

வி:—ஐந்து நிமிஷத்துக்குமே லிருக்காது.

ப:—நீர்வெளியேபோன கதவுவழியாய்த் தானே அவர் போயிருக்கக்கூடும்.

வி:—ஏது' அவர் நான் ரிகார்ட்டுதேடிக்கொண்டிருந்த அறை வழியாய்த்தான் போயிருக்கவேண்டும். அதுவும் இல்லை.

ப:—கண்ணாடிக்கதவு வழியாய்ப்போயிருக்கவேண்டும்.

வி: இப்படி மேலே போகாமல் போனால் அப்படித் தான் போயிருக்கவேண்டும்.

ப:— இது விசதமாயிருக்கிறதாயினும், நான் அப்படியே தீர்மானித்துவிடக்கூடாது.

பவாநந்தர் கதவைத்திறந்து பார்த்தார். கால் மைல் தூரம் வரையில் நன்றாய்த்தெரிந்தது. தனக்குப் பின்னின்றுபார்த்துக்கொண்டிருக்கும் விநாயகரைப்பார்த்து, 'இந்த வழியாய் அவர்போயிருந்தால், நீர் வரும்பொழுது அவரைப்பார்த்திருக்கவேண்டும்.'

வி:—அவர் கிழக்கே திரும்பி மரங்களிடையில்மறைந்திருந்தாலோ ?

ப:—முழுவதும். சரி நீர் இப்படி சொல்வீரென்றுஎதிர் பார்த்தேன். நாம் ஏதாவது குறிப்புகள் காணமுடியாதா ? பார்ப்போம் வாரும்.

இருவரும் போனார்கள். பவாநந்தர் ஓரத்தை நுட்பமாய் குனிந்துபார்த்துக்கொண்டே சென்றார். ஒரு பக்க ஓரத்தில் ஒழுங்காயிருந்த புல்லில் மிதிப்பைக்கண்டார். புற்றரையில் செருப்படி மிதிகண்டார். அங்கிருந்தபுல்வாடியிருந்தது. மிதிவைத்த இடம் அழுந்தி அமுங்கியிருந்தது.

ப:—இராதாகிருஷ்ணர் காலில் செருப்பு போட்டுக் கொண்டிருந்தாரா?

விநாயகர் தலையசைத்தார், உடனே பவாநந்தர் கீழ் உட்கார்ந்து கையில் பூதக்கண்ணாடி பிடித்து புல்லை நீக்கிப் பார்த்தார்.

ப.—இராதாகிருஷ்ணர் பாரியாசாமியோ?

இது விநாயகர் காதில் விழவில்லை. மறுபடியும் கேள்வி கேட்டார்.

வி.—சரி - இல்லை ஒல்லியான சாதாரண மனிதன். அவர் கால்கள் பாரியான கால்கள்தான்' இதுதானே நீர் கேட்டது?

ப: சரியையா, முழுக்காலடி இங்கிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு கால்சுவடு பிடித்துக்கொண்டேபோனார். இவ்வழி ஒரு பாழுங்கிணற்றுக்கு கொண்டுபோய்விட்டது. கிணற்றைச்சுற்றி சுற்றிப்பார்த்தார். ஜலத்தையும் பார்த்தார் ஜலத்தில் எண்ணெவிட்டதுபோல் தோன்றியது. பவாநந்தர் மெதுவாய் 'இராதாகிருஷ்ணர் இஜ்ஜலத்திலிருக்கின்றார்' என்றார்.

விநாயகர் பெருமூச்சுவிட்டார். அவர் முகத்திலிருந்த ஒளி மங்கியது. பவாநந்தரின் முகத்தைப் பார்த்துகொண்டு மௌனமாய் நின்றார்.

சற்றுப்பின்பயந்தவர்போல் 'உறுதிதானா!' என்றார்.

ப: நீரும் நானும் இங்கிருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு அவர் இதிலிருக்கிறதுண்மை. இனி தர்சமயம் நாம் ஒன்றும் செய்ய இயலாது, வீட்டுக்குத் திரும்பி சாப்பிட்டுவிட்டு வருவோம். மத்தியானம் ஆட்களை விட்டு ஜலத்தை இறைத்து சவத்தை மேலேயெடுப்போம்.

இருவரும் மௌனமாய்த் திரும்பினார்கள். அவர்கள் திரும்புகையில் அவர்களின் எண்ணமெல்லாம் கிணற்றின் மேலேயிருந்தது. வீட்டிற்குள் பிரவேசிக்கும் முன் விநாயகம் 'ஐயா, இது உறுதிப்படும் வரையிலும் ஸ்திரீகளிடம் இதை பிரஸ்தாபிக்கவேண்டாம்', என்றார்.

ப. சந்தேகமேயில்லை. நான் ஒன்றும் செய்வதில்லை. நீர் சொன்னபடியே யாகட்டும்.

சாப்பாடாயிற்று கூலியாட்களுடன் கிணற்றண்டை போனார்கள். சவம் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப் பட்டது,

புற்றரைமேல் போடப்பட்டதும் பிரேதம் மிக்க அலங் கோலமாயிருந்தது. பக்ஷிகள் இதைப்பார்த்து கூக்குரலிட்டன. அவர் இடுப்பில் ஒரு கல் கட்டப்பட்டிருந்தது.

விநாயகம் ஸ்திரீகளைப்பற்றித் தான் நினைத்தான்.

'இதை வீட்டிற்கு கொண்டுபோவோம்' என்றான்.

ப.—மாஜிஸ்டிரேட்டுக்கு சொல்லி அனுப்புங்கள். மரணவிசாரணை உடனே நடந்தேறவேண்டும்.

பிரேதத்தை வீடுகொண்டுசேர்த்தார்கள். பவாநந்தர்ஸ்திரீகள் தனித்தனியேவந்து அவர்கள் நடந்துகொள்ளும்மாதிரியைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

ஜயம் ஓலமிட்டழுது ஆரவாரம் ஒன்றும் செய்யவில்லை. சற்றுப்பக்கத்தில் உட்கார்ந்து உடம்பைத் தடவிப்பார்த்து நீர் சிந்தி அப்புறம் போனாள்.

ருக்மணியோ ஆரவாரம் செய்தாள். 'நான் என்ன செய்வேன் அநாதியாய் விட்டுவிட்டாரே! என்னிடத்தில் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லையே. நான் தான் பாவி. நான்

ஏன் அப்படி பரிந்து பேசினேன். நானே என் தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்டேன்' என்று கதறினாள்.

முதலிலிருந்து அவள் அவர் தற்கொலை செய்துகொண்டதாக நினைத்தவள்போல் பேசிவந்தாள்.

வேண்டியமரணசடங்குகள்நடந்தேறின. இரண்டு மூன்று நாள் பவாநந்தர் அங்கே தங்கியிருந்தார். ருக்மணியின் துக்கம் மாறிவிட்டது. பவாநந்தரைப் பார்த்து,'ஐயா! நான் உங்களை தெய்வமென்றே நினைக்கிறேன். நீரில்லாவிட்டால் இக்காரியமுடியுமா? உங்களுக்கு இதற்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்?' என்றாள்.

பவாநந்தர் சாமர்த்தியத்தைப் பற்றிப் புகழாதவர்கள் கிடையாது. எல்லாரும் பவாநந்தரை ஆசீர்வதித்தார்கள். பலர்பல உபசாரமொழிகள் பொழிந்தார்கள்.

ஜய லட்சுமி சற்றும் சந்தோஷமடைந்தவளாயில்லை. பவாநந்தருக்குச் சொல்லி அனுப்பித்தாள். இவர் அவள் பல உபசாரமொழிகள் சொல்வாளென்றிருந்தார். பவாநந்தர் அவள் முகம் அழுதழுது வாடிக் களையிழந்திருந்ததைப் பார்த்தார். இவர் உட்பிரவேசித்ததை அவள் கவனிக்கவேயில்லை. ஜன்னல்வழியாய் எங்கேயோ வெளியில்பார்த்துக் கொண்டிருந்தாள். கண்ணீர் தாரைதாரையாய் வழிந்து ஓடிக்கொண்டிருந்தது. சரேலெனத் திரும்பி,

'உட்காரும். நான் உமக்கு வந்தனம் செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறேனாயினும் உமக்கு வந்தனம் செலுத்துவதில்லை. நீர் செய்தகாரியம் அபூர்வமானதும் சாதுரியமானதும்தான். அதனால் என்னபயன்! பிரேதத்தைக் கண்டெடுத்தீர். மரணத்தின் காரணத்தை இன்னதென்று சொல்லவில்லையே! என்றாள்.

ஒன்றுமறியாத பேதைபோல் பவாநந்தர் 'என்னம்மா! அவர்கள் தற்கொலையென்றுதான் தீர்மானம் செய்தார்களே ! என்றார்.

ஐய: 'நான் நம்பவேமாட்டேன் லவலேசமும் நம்பமாட்டேன், நீர் நம்புகிறீரா ?, என்று சொல்லி பவாநந்தரைக்கண்கொட்டாது பார்த்தாள்.

பவாநந்தரும் அப்படியே இமையசையாதிருந்தார். மெதுவாய், 'அம்மா ! வேறென்ன தீர்மானத்துக்கு வரமுடியுமோ தெரியவில்லை. பிரேதம் ஜலத்திலிருந்தது கிணற்றுக்குப் போகிறவழியில் செருப்புச்சுவடிருந்தது. டாக்டர் மூச்சடைப்பால் பிராணம்போயிற்றென்று தீர்மானித்தார். மேலொருகாயமும்' காணோம் என்றார்.

ஐய: கைநகங்கள் பிரிட்டிருக்கின்றனவே ஏன்?

பவா: எனக்கென்ன தெரியும் ? மாஜிஸ்டிரேட்டே சொல்லமுடியாததை நான் எப்படி சொல்லக்கூடும்?

ஐய. 'ஐயா சகலமும் உம்போன்றவர்களுக்குத் தெரியுமென்று நினைத்தேன்'

பவாநந்தர் கையை விரித்து அம்மம்மா ! நான்கெட்டிக்காரனென்று பெருமைபாராட்டினேனா? இல்லையே! துப்பறியும் நாங்கள் எழுத்துகற்றுக்கொள்ளும் குழந்தைகள் போன்றவர்கள். குழந்தைகள் இங்கொரு எழுத்து அங்கொருஎழுத்தைச்சேர்த்து வார்த்தையைச்சொல்வதுபோல நாங்கள் இங்கொரு விஷயம் அங்கொரு விஷயம் சேர்த்து யூகித்தறிகிறோம், நான் சரியாய்ச்சொல்லாமல் போனால் என்னைப்பழிக்கவேண்டாம். என் சக்தியன்றதை செய்கிறேன்'என்றார்.
இவர்ஒன்றும் தெரியாதவர்போல் பேசுகிறாரென்பதை ஐயம் அறிந்து கொண்டாள், உடனே புன்சிரிப்புச் சிரித்து அவ

ள் 'என்னை மன்னியுங்கள் ஐயா! நான் சுயநயப்புலி. நீர் செய்த அளவு வேறொருவரும் செய்யமுடியாதென்பதுநா னறியாதவளல்ல. எனக்கு மனவருத்தம் மிகுதி இருக்கிறது. அதை நீர் பொருட்படுத்தவேண்டாம். அவர் இறக்கு முன் எல்லாவற்றையும் இவளுக்கு உயிலெழுதிவிட்டாரென் று கேள்விப்படவில்லையா? இதை எழுதியது விநாயகர். சாட் சியும் போட்டிருக்கிறார். அவர்என்மேல் மிக்கஉருக்கமுள் ளவர் போல் பேசுகிறார். அவள்தான் இவ்வளவுக்கும் ஆஸ்ப தம்' என்றாள்.

பவாநந்தர் :— அம்மா ! இங்கேயே தானே இருப்பீர் கள்.

ஜய :—இங்கிருக்கிறதா? அவளுடன் நான் கூட இருக் கிறதா? பட்டினியாயிருந்திறப்பதா யிருந்தாலும் சரி. அவள் வீட்டில் கைநனைக்கமாட்டேன்.

பவா:—இதென்ன! அவள் உம்மைப்பற்றி எவ்வளவோ பட்சமாய்ப் பேசுகிறாளே!

ஜய:—என்னபக்ஷம்! பாம்புபார்வைக்கு எவ்வளவுஅழ காயிருக்கிறது. அவள் அழுது கொண்டு என்னை வந்துதழு விக்கொண்டாள். நாம் சகோதரிகள் போலிருப்போமென் றாள். நான் ஒளிவு மறைவு ஒன்றும் செய்யவில்லை. எல்லா வற்றையும் உடைத்துவிட்டேன்.

பவா:—(தாழ்ந்தகுரலாய்) நீர் அப்படி. செய்தீர்.

ஜய; நான் அவளை வருத்தக்கூடாது. நான்சொல்வ தொன்றும் அவளுக்கு வருத்தத்தைக் கொடுக்காது. கடைசி வரை மிகவும் பட்சமாயிருந்தாள். அவள் என்னைக்கட்டி க்கொண்டாள்.

இது சொல்லும் பொழுது அவள் நெஞ்சில் துக்கமடைத்துக்கொள்ள விட்டுவிட்டுப் பேசினுள். பவாநந்தருக்கு இது துக்கமோ சந்தோஷமோ ஒன்றும்தெரியவில்லை. 'நான் 13ம்நாள் என் கணவனுடன் போய்விடுவேன்' என்றுள்.

ப:—13 நாளிருப்பீரல்லவா ?

ஜ:—உமக்கிஷ்டமானுல் இருக்கிறேன்.

பவாநந்தர் பேசாதிருக்கும்படி சைகைசெய்தார், கதவைக்காட்டினர்

இவர் கதவு சப்தத்தை உடனே கேட்டுவிட்டார். உடனே பவாநந்தர் கதவண்டை போய்திறந்தார். ருக்மணி உட்புகுந்தாள்.

'அம்மா வந்துவிட்டேன்' என்று ருக்மணிமிக்க உருக்கமுடையவள் போல்கையை விரித்துக்கொண்டு ஜயந்திடம் போனுள். ஜயம் இவள் சுபாவத்தை உணர்ந்தவளாகையால் உடனே'எனக்குத்தெரிகிறது என்னவிசேஷகாரியம்' என்று வினவினுள். ருக்மணிமிக்கபயமாய், 'ஜயம் கண்மணிஎன்னை இப்படி அலக்ஷியம் செய்கிறுய். நாமிருவரும் சகோதரிகள் போலிருப்பமம்மா, என்றுள்.

ஜயம்:—ஒருவிஷயம் நான்நீசொல்வதை கொஞ்சமேனும் நம்புவதில்லை என்பதை நீ அறிந்திருந்தும் இப்பொய்மொழிகளை மொழிவதின் பயன் யாது. உன்னைக்கண்டால் எனக்காவதில்லையென்பதும் என்னைக்கண்டால் உனக்காவதில்லை யென்பதும் நம்மிருவருக்கும் நன்றுய்த்தெரிந்திருக்கிறது. உன்சாமர்த்தியம் எந்த ஸ்திரீக்கு இவ்வுலகத்திலிருக்கிறது? என் தந்தையை ஒருமாதத்திற்குள் உன்கைப்பதுமையாக்கி விட்டாய். உன்னைப்பற்றி உச்சந்தலையிலிருந்து

உள்ளங்கால் வரை எனக்கு தெரிந்தாயிற்று. எனக்கு ஒரு செல்லிகூட விடாமல் உன்பேருக்கு உயில் எழுதிக்கொண்டு விட்டாய். என்னை ஓட்டையாண்டியாய்ச்செய்து ஓட்டிவிட்டாய். இவ்வளவும் உன் மனதுக்கு திருப்தி யுண்டாக்கவில்லையா? இன்னம் என்னசெய்தால்தான் மனதாருமோ!

ருக் :—என்னது இப்படிக் கடூரமாய் நீபேசக்காரணமென்ன?

ஜய :—உன்னிஷ்டம் என்னைத் தொலைத்துவிட்டு சுகமாயிருக்கவேண்டுமென்பது. அம்மனோரதம் நிறைவேறவில்லையா? நான் 13ஆம் நாள் பிரயாணம்.

ருக் :—எங்கே நாளைக்கே போய் விடுவாயோ என்றிருந்தேன்

ஜய :— அப்படியும் நினைத்தேன் பவாநந்தருக்காக சில தினங்களிருக்கப்போகிறேன்.

ருக் :—மிகவும் சந்தோஷம். உன் மனது நல்ல ஸ்திதிக்கு வந்திருக்கிறது. நாலு தினத்துக்குள்ளாக இன்னும் நல்ல ஸ்திதிக்கு வாராதா? ஐயா உமக்கு மிகவும் வந்தனம். உமக்கு மிகவும் நன்றியுள்ளவளாயிருக்கிறேன்.

ருக்மணி விடைபெற்றுக் கொண்டு சென்றவுடன் பவாநந்தர்,

"காரணமில்லாமலா! சும்மா ஆடுமா சோழியன் குடுமி!" என்றார். மேலும்,

"ஜயலட்சுமி! நாளைக்கு அவர் இங்கிருக்கவேண்டும். நாளைக்கு ஒருவிசேஷ செய்தியிருக்கிறது. இருக்கட்டும் அலாரம் கடிகாரம் ஒன்று வேண்டுமே! இருக்கிறதா." என்றார்.

பவாநந்தர் இராக்கால மெல்லாம் இராதா கிருஷ்ண ரின் வாசிப்பறையிலேயே கழித்தார். கதவைத்தாளிட்டுக் கொண்டு படங்களையும், இருப்புப்பெட்டியையும், போனு கிராப்புகளையும் நன்கு சோதித்துப்பார்த்தார்.

விநாயக மென்பவர் ஏதோ பேரிரைச்சல்கேட்ட தாக நினைத்து அதையறிந்து செல்ல பவாநந்தர் இருந்த அறைக்கு வந்து கதவைத்தட்டினார். பவாநந்தர் திறந்தார்.

விநாயகம், ஐயா நானிங்கு பேரிரைச்சல் கேட்டேன் அதை நீர் கேட்டீரா!

பவாநந்தர் சிரித்துக்கொண்டு "என் குரலன்றி வேறொ ன்றையும் கேட்கவில்லையே!"

விநாயகம்:—இதென்னையா! இன்னுமா தூங்கவில்லை. என்ன செய்துகொண்டிருக்கிறீர்!

பவாநந்தர்:—"ஆலோசனைசெய்துகொண்டிருக்கிறேன். ஏறக்குறைய முடிவுக்கு வந்துவிட்டேன்"

விநாயகம்:—"நல்லது போய்வருகிறேன்"

மறுநாட்காலையில் அவர்கள் உண்டியுண்ணும்பொழுது விநாயகம்விளையாட்டாய்நகைத்துக்கொண்டு, "பவாநந்தரே! நேற்று இராத்திரி ஆலோசனைக்கு இரண்டணாத் தருகிறேன் தருகிறீரா? என்னயோசனை?"

பவாநந்தர்:—இராதாகிருஷ்ணரின் கொலையைப்பற்றி.

சிலநிமிஷங்கள் இதைக்கேட்டதும் விநாயகம்வாய்பொ திந்து மௌனமாயிருந்தார். அவர்இத்தகையமறுமொழியை எதிர்பார்க்கவேயில்லை;

சற்றுப்பொறுத்து, 'அதுதான் ஒழிந்ததே! நீர்தான் அதைக்கண்டு பிடித்தாயிற்றே. சாதாரணமாய்நடக்கும் தற் கொலை பின்னென்ன?

பவாநந்தர்:—எனக்கென்னவோ உம் மளவு உறுதியில்லை. அவர் கிணற்றண்டை போனவிதம் தெரியவில்லை.

விநாயகம் :—ஏன் ? கிணற்றடிவரையில் அவரின் கால் சுவடுகளிருந்தனவே. ”

பவாநந்தர் :—“ அவ்வளவு மெல்லிய மனிதனின்காலடிகள் அவ்வளவு பூமியில் பதிந்திருக்க நியாயமில்லை. ஒரு அடிக்கு சமீபத்தில் ஸ்டாகிங்ஸ்போட்டமெல்லிய காலடி கண்டேன். கொலை பாதகன் அவரைக்கொன்று அவர் பாதரக்ஷையை காலில் மாட்டிக்கொண்டு அவரைத்தூக்கிச்சென்றுமறுபடியும் பாதரக்ஷையை காலில்மாட்டி கிணற்றில் போட்டிருக்கக்கூடாதா ?

இதைக்கேட்டதும் விநாயகத்தின் முகம்மிக்கமாறுபாடடைந்தது. ‘அவர்கிணற்றில் வீழ்ந்து மூச்சடைப் பாலிறந்துபோனார்’ என்று குளறினான் விநாயகம்.

பவாநந்தர் :—மூச்சடைப் பாலிறந்து போயிருக்கலாம். ஜலத்தில் மூழ்கியிறந்தாரா? அவர் சரீரலை பரிசோதித்ததில் ஜலம் ஒன்று மிருக்கவில்லையே· ஏதோ ஒன்றில் அடைபட்டு வெளியில் வரயியலாது கைகால்களை அடித்துக்கொண்டிறந்து போயிருக்கவேண்டும்.

இதைச்சொல்லும்போது பவாநந்தர்குரல்முகமெல்லாம் அக்கொலையின் கொடுமையை ஊகிப்பதால் விகாரமடைந்தது. விநாயகத்தின் முகம் பயங்கரமாய்விட்டது. கண்கள் விழித்தபடியேயிருந்தன. தன்தலையைக்கையால் தேய்த்துக்கொண்டிருந்தார். அவர் அடைந்த அலங்கோலத்தை என்னசொல்வது? ஏதோ ஆபத்தானகுரலைக் கேட்டு நடுங்குவது போலிருந்தது.

அக்குரலுண்டாயிற்று. திடீரென ஒரு ஓசையுண்டாயிற்று.

பெரிய யிரும்புப்பெட்டியின் உள்ளிருந்து யாரோ அதை அடித்துக்கொண்டிருக்கும் சப்தமுண்டாயிற்று. யாருமில்லையா? உதவிசெய்வாரில்லையா என்ற குரல் கேட்டது, சற்று நேரத்திற்கெல்லாம் மெலிந்து மெலிந்து அடங்கிப்போயிற்று.

விநாயகம் மெய்மறந்துவிட்டான்.

"இறந்தவர் பேசுகிறார். அவர்பேசுகிறார். நான் உள்ளதைச் சொல்லிவிடுகிறேன். நானே அவரைக் கொன்றேன். அவர் அப்பெட்டியண்டை நின்றுகொண்டிருந்தபோது அவரை அதில்பிடித்தடைத்தேன். கதவைச்சாத்தினேன். பூட்டினேன். நானே கொன்றேன். என்னைச்செய்யத் தூண்டினது அவள். அவள் அவரைப் பணத்துக்காகவே நேசித்தாள். வஞ்சகி. மாபாதகி. அவர் இறந்தபின் என்னை நாயகனாக வைத்துக்கொள்வதாகச் சொல்லி என்னை ஏமாற்றினாள். என்று கதறிக்கொண்டு தேம்பித்தேம்பிச் சொன்னான்.

உடனே கதவுதிறந்தது. அத்துடன் விநாயகம்நிறுத்தினார். ருக்மணி உக்கிராவேசத்துடன் உட்பிரவேசித்தாள். அவள் கண்களில் நெருப்புப் பொறிகள் சிதறின.

"பொய்யா! பேடி! பேடிப்பதரே! என்நாயகனைக் கொன்றதற்காக நீ தூக்குப்போடப்பட்டு உயிரிழப்பாய். எனக்கென்னத்திற்கு?" என்று அலறினாள். அவள் குரலைக் கண்டு இராக்ஷஸியோ என்று கலங்கினார் பவாநந்தரும்.

விநாயகரும் சாமானியரா? "என்ன நீ என்னைச் செய்யும்படி தூரிதம் செய்யவில்லையா?" என்றார்.

"யாரைப்பார்த்தென்ன சொல்கிறாய். பழிபாதகா, கொலைபாதகா?" என்றாள்.

"அவரைக் கொன்றொழித்தால் என்னை நாயகனாகக் கொள்வதாக நீ ஸத்தியமாய் சொல்லவில்லையா? சண்டாளி! வஞ்சகி! நீலி"

என்ன! நான் உன்னை நாயகனாகக்கொள்வது? உன்சுந்தரத்தைக்கண்டு மகிழ்ந்தா. உன் ஆஸ்தியைக்கண்டு மோகித்தா? மதிகெட்டமோழியே, ஏன் பிதற்றுகிறாய்?

இப்படிக் கேவலமாய் விநாயகரை ருக்மணி பேசினது அவர் மனதைப்புண்ணாக்கி விட்டது.

"நான் போகிறது நிச்சயம். உன்னை இலேசில் விடுவதில்லை."

"உன்னால் என்னசெய்ய முடியுமென்று நினைக்கிறாய்? என்ன சாட்சியம் உனக்கிருக்கிறது? நீதான் கொலைபாதகன் உன் பொய்யை யாரும் மதியார்கள். சட்டமுமில்லை. பயித்தியம்பிடித்தவனே" என்று ஏசி நகைத்தாள். "மகாநிபுணரான உமக்கும்தான் ஐயா! அந்தப் பெண்ணிருக்கிறாளே அவளுக்குந்தான். என்னை என்னவாவது செய்யசாட்சியமிருக்கிறதா? ஐயா! நீர் அவளை தூக்கவாவது வீக்கவாவது, நீக்கவாவது செய்யும். அதைப்பற்றி எனக்கென்ன? உயில் என் பேரிலிருக்கிறது. சகலசொத்தும் என்னுடையது." என்றாள்.

இதைக்கேட்டதும் விநாயகர் மனதாரநகைத்து?

"அடிசதிகாரி! என்னைக் கெடுக்கநினைத்த நீயும் கெடுத்துக்கொண்டாய். உயிலிலென்ன எழுதியிருக்கிறது? எனக்கு

சட்டம் தெரியும். அது எழுதியிருக்கும் கடிதத்தின் விலை கூடப்பெறுமானதல்ல."

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்ததும் ருக்மணி ஆவேசங்கொண்ட புலிபோல் குதித்தாள்.

"என்னையா? உயில்பிரயோஜனமில்லையா? "என்றாள்.

"இல்லை" யென்றார் பவாநந்தரும்

புலிபோல் குதித்துக்கொண்டு விநாயகன்மேல் பாய்ந்து அவனை இரண்டுகுத்தில் நமனுலகு தான் வரப்போகிறதைத் தெரிவிக்க அனுப்பினாள். பவாநந்தர் மனதிடஞ்செய்துகொண்டுதடுக்க எழுமுன், தானே குத்திக்கொண்டு அவன் பக்கமே வீழ்ந்துயிரிழந்தாள்.

இதற்குள்ளாக சோமசுந்தரமும் வந்து

கதவையிடித்தான். "என்னை நீ அழைத்தீரா பே! இதோ வந்தேன்" என்றான்.

உள்வந்ததும் 'ஐயோ தங்கை!' என்று திடுக்கிட்டு மூர்ச்சையானான்.

பவாநந்தர் அவனை மூர்ச்சைதெளிவிக்கச் செய்தார். "இரகசியம் புலப்பட்டதா" என்றார். ஜனங்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் கூடினார்கள். ஒவ்வொருவரும் கொலைகண்டு பிடிக்கப் பட்ட விதத்தைக் கண்டு ஆச்சரியப் பட்டார்கள்.

ஜயலட்சுமி:— எனக்கு கொலைபாதகி அவளென்று தெரியும் அப்பொழுதே! அந்தோபாவம் விநாயகபாபா.!"

சோமசுந்தரம்:—அவன் தான் நன்றிகெட்டானி அவனுக்குவேண்டியதே தா ! என்றான்.

ஜயலட்சுமி:— "ஐயா! எங்கிருந்து அக்குரலுண்டா யிற்று அதை இறந்தவரின் குரலென்று நம்பும்படி என்ன செய்தீர்? தயவுசெய்து சொல்லவேண்டும்" என்றாள்.

"முன்னிரவில் நான்போனகிராமபோனை இரும்புப் பெட்டியில் வைத்துவிட்டேன், ஒரு கம்பியால் தகுந்த சமயத்தில் அதைப் பேசச்செய்ய வேண்டுமென்றிருந்தேன். பேசிக் கொண்டிருக்கையில் அதைத்திருப்பினேன். இப்படி செய்வதால் உண்மை வெளிப்படலாமென்று நான் நினைத்தது சரியாய் முடிந்தது" என்றார் பவாநந்தர்.

பவாநந்தர் சோமசுந்தரத்தை சகல சொத்துக்களையும் பார்த்துக்கொள்ள ஏற்படுத்திவிட்டார். அவர்கள் பவாநந்தரை தகப்பனாரகவே பாவித்து இன்னும் நடந்து வருகிறார்கள்.

2.

## ரயில் கொலை.

ரயில்வண்டியின் வேகம் மெல்ல மெல்ல குறைந்தது. ஜோலார்பேட்டை ஜங்கஷனில் வண்டி நின்றது. டிக்கட்டுகள், டிக்கட்டுகள் ,எடுத்துக் கையில் வைத்துக்கொள்ளுங்கள். தயவு செய்து டிக்கட்டுகள் என்று டிக்கட் கலெக்டர்கள் ஸ்டேஷன் பிளாட்பாரம் குறுக்கும் நெடுக்குமாய் தீவிரமாய் ஒவ்வொரு அறையைத்திறந்து டிக்கட் சோதனைசெய்து மூடிப்பூட்டி விட்டு தங்கள் வேலையில் 'கவனமாயிருந்தார்கள்.

டிக்கட்டுகள் தயவு செய்து ஐயா! 'அந்தோ இறைவா இதென்ன காட்சி!

டிக்கட்கலெக்டர் அறைக் கதவைத் திறந்ததும் அவரின் சாதாரணக்குரல் கூக்குரலாய் மாறிவிட்டது. ஏனென்றாலோ, ஒரு மனிதன் உருண்டு செத்துக் கிடந்தான்.

நிஸ்ஸந்தேகமாய் இறந்தேகிடந்தான். அக்கோலத்தில் உயிரிருக்கும் உடல் இருக்காது. வெளிர்த்த முகத்தில் இரத்தக்கறைகளிருந்தன. டிக்கட்கலெக்டர் குனிந்து பார்த்த பொழுது மண்டை உடைபட்டுக்கிடந்தது கண்டு திகிலடைந்தார். வண்டியில் சகிக்கமுடியாத துர்நாற்றமிருந்தது.

இப்பரிதாபக்காட்சியும் துர்க்கந்தமும் அவருக்கு மயக்கத்தை உண்டாக்கியது. ஆனால் அவர் பொறுமையுள்ளவர் யுக்திசாலி. அவசரக்காரரல்ல. கதவைப் பூட்டிவிட்டு ஒரே ஓட்டமாய் ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஓடினார். வண்டி மெதுவாய் ஊர ஆரம்பித்தாயிற்று. ஸ்டேஷன் மாஸ்டர் உடனே பிளாட்பாரத்துக்கு துரிதமாய் வந்து சைகை செய்து வண்டியை நிறுத்தினார்.

வண்டியிலிருந்த பிரயாணிகள் இதற்குக் காரணந் தெரியாதவர்களாகி பலமாதிரி சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். சில காலத்துக்கு முன் ரயிலில் ஒரு கொலை நடந்தேறியதானது ஜனங்களின் மனதில் பீதியையுண்டாக்கியிருந்தது. இன்னும் மாறினபாடில்லை.

எப்படியோ மாயமாய் "ஒரு வண்டியில் யாரோ சொலையுண்டுகிடக்கிறார்" என்ற செய்திபரவிவிட்டது. ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் மிக்க ஆவலுடன் கூடினார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் வண்டியின் கதவின் குறுக்கே நின்று கொண்டே எல்லோரையும் அப்புறம் விலக்கிக் கொண்டிருந்தார்

"அவரவர்கள் வண்டிக்குப் போங்கள். இடத்தில்உட்காருங்கள், இல்லையோ வண்டிபோய்விடும், இந்த வண்டியைப் பிரித்து விட்டு வண்டியை விட்டுவிடுகிறேன்" என்றுகூவினார்.

இருந்தாலும் ஜனங்கள் நெருங்கி நெருங்கி அந்த வண்டிக்குள் பார்க்க ஆவல் காட்டினார்கள். ஸ்திரீகள் குழந்தைகள் கூட வண்டியினிடம் போனார்கள். அநேகரின் மூக்குகள் கூட்டத்தில் கதவில் உறைந்து அமுங்கின. கூட்டத்தில் நசுக்கப்பட்டுப் பலர் கூக்குரலிட்டார்கள்.

திடசரீரியும், வாலிபரும், உயர்ந்தவருமான ஒருவர் பக்கத்திலிருந்த வண்டியிலிருந்து சுருட்டுப் பிடித்துக் கொண்டு வந்தார். அவர்பார்வைக்கு யோக்கியமுள்ளவர் போலிருந்தார். அவர் மீசையும், ஒளிக்கும் கண்களும் எல்லோர் பார்வையையும் கவர்ந்தன. அவர்கூட்டத்தில்கலக்காமல்கையில் மூக்குக்கண்ணாடி பிடித்துக்கொண்டு ஸ்டேஷன் மாஸ்டரிடம் மெதுவாய் நடந்து சென்றார்.

"என்னை மன்னிக்கவேண்டும்." என்று மரியாதையாய்ச் சொல்லி, "என் பெயர் மகாதேவன். ஒருவேளை என் சிறிய தகப்பனாராயிருக்கலாம். நான் பார்க்கட்டுமா" என்று ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்டார் ஸ்டேஷன் மாஸ்டர் உத்திரவு செய்ததும், போர்டர் ஜனங்களை விலக்கவும் மகாதேவன் ஜன்னலண்டை போனார்.

பார்த்தார் அவ்வளவுதான். மூக்குக்கண்ணாடி நழுவிற்று. முகத்தைத் திருப்பியதும், அவர் முகம் வாட்டமாயிருந்தது. அவர் ஒன்றும் பேசவேயில்லை.

நான் சந்தேகித்ததுசரியாய் முடிந்தது. என் சிறியதகப்பனார்தான். நான் இங்கு தங்குகிறேன்.

சற்றும் படபடப்பில்லாமல் பிளாட்பாரத்திலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். அவர் விரல்கள் விதிர்த்தன. சிகரட்டை எடுத்து பற்றவைத்தார்.

பிரேதமிருந்த வண்டி தொடரிலிருந்து பிரிக்கப்பெற்றது. வழிப்போக்கர்கள் வண்டியிலேறி உட்கார்ந்து வண்டி புறப்பட அரைமணிசாவகாசமாயிற்று.

டிரெயினுக்கு முன்பே வழிப்போக்கர்களின் டிக்கட் நெம்பர்கள் முதலிய குறிப்புகள் தந்தியில் சென்னைக்கு சொல்லப்பட்டன. போலீஸ் இன்ஸ்பெக்டர்களில் பிரசித்தி பெற்ற இரண்டொருவரைத்தருவித்து எல்லோரையும் விசாரித்தார்கள்.

உயர்ந்து அழகாயிருந்த ஒரு ஸ்ரீதிஜோடைப்பேட்டை ஜங்கஷனில் ஜன்னலண்டை ஓடினவள் தற்செயலாயோ நல்ல சமயத்திலோ ஸ்டேஷனிலிருந்து வெளியேறிவிட்டாள்.

டிரெயின் ஜோலார்பேட்டை விடு முன்னமேயே சென்னையிலிருந்து 15 நிமிஷங்களுக்குள்ளாக பவாநந்தர் அடுத்த டிரெயினில் இந்த கேசுக்குப்புறப் படுகிறார்" என்ற செய்தி வந்தது.

ஸ்டேஷன் மாஸ்டர் பவாநந்தரைப் பற்றிக் கேள்விப் பட்டதில்லை. மகாதேவன் கேள்விப்பட்டிருக்கிறார்.

'நான் ஒரு முறைபார்த்திருக்கிறேன். எல்லாரும் குற்றங்கண்டுபிடிப்பதில் மகாசூரனென்கிறார்கள். ஆனாலோ எனக்கு பிரமாதமான மனிதனாகத்தோற்றவில்லை,, என்றார். மகாதேவன்.

'ஐயோபாவம்! என்ன துக்ககரமான கொலை, என்றார் ஸ்டேஷன்மாஸ்டர்.

'உண்மைதான், மிகவும் விசனகரமானது. என்னிடம் பக்ஷமாயிருந்த அவரிடம் மிகவும் அனுதாபப்படுகிறேன். ஆயினும் எனக்கு ஆறுதலிருக்கிறதென்பதை நான் மறுதலிக்கமுடியாது. அவர் சகலத்தையும் எனக்கு விட்டுச் சென்றிருக்கிறார்." என்றான் மகாதேவன்.

விசனம் மனதார வில்லாதிருப்பதுபற்றி ஸ்டேஷன் மாஸ்டர் மகாதேவனை ஏறெடுத்துப்பார்த்தார். இவர் தான் சிற்றப்பனைக் கொன்றவனென்றறிந்து கொள்ள பவாநந்தரின் கூர்மையும் ஆராய்ச்சியுள்ளபார்வையும் அவசியமில்லை.

'என்ன வியாகூலம்! சிற்றப்பனை நீர் கொன்றதாக சந்தேகமில்லை. அவர் இறந்ததால் உமக்கு மெத்தலாப மென்பது மக்குத் தெரியும்."

'அது எனக்கு இலக்ஷயமில்லை. ஜனங்கள் என்மீது ஆசங்கை கொள்வார்களாயின் தடையின்றிகொள்ளட்டும்"

பவாநந்தர் வந்துவிட்டார். அவரும் இரண்டுபெயரும் வண்டியண்டை வந்தார்கள். வண்டிக் கதவைத் திறந்ததும் பவாநந்தர் துப்பினார்.

நார்க்கந்தமான வாசனை வண்டியிலிருந்துகுப்பென்று வெளிரேயறிற்று.

ஐயோ டாபாரம் இதென்ன? ஐயோ டாபாரம் வாசனை. யென்ன? என்று பவாநந்தர் கேட்டார்

மெலிந்த இருதயத்துக்காக அவர் அடிக்கடி டபயோகிப்பதுண்டு என்று உடனே மகாதேவன் சொன்னான். என்னமோ, இந்த வாசனை அவருக்குப்பிரியம். அவருக்கு சுருட்டுப் பிடித்தலாகாது. ஆகையினால் தான் நான் தனிவண்டிக்குப்போனேன். ”

பவாநந்தர் இதைக் கேட்காதவர்போலிருந்தார். அவர் கண்ணாடியையும் பலகைக்கதவுகளையும் உற்றுப்பார்த்து சோதித்துக் கொண்டிருந்தார். ஏதாவதொன்றைக்கண்டால் குறிப்பொன்றுஞ் செய்யாமல், அப்படியே சோதித்துக்கொண்டிருந்தார்.

வண்டியில்இறந்தவரின் பிரேதம் கிடந்தது. அவர் தலையில் கொடூரமான காயமிருந்தது. காயம் கூர்மையில்லாத ஏதோ கருவியால் அடிபட்டதென்பதுவி சியமாயிருந்தது. முட்டை உடைபடுவதுபோல் மண்டையோடு உடைபட்டுக்கிடந்தது.

‘அவர் வண்டியில் தனியே யிருந்தார் என்று சொன்னீரல்லவா. ? ”

“ஆம் வேறொருவருமில்லை. அவர்வீழ்ந்துகிடப்பதைக் கண்ட டிக்கட் கலெக்டர் இதோ இருக்கிறார் ” என்றார ஸ்டேஷன்மாஸ்டர்.

அந்த டிக்கட்கலெக்டர் நடுங்கிக்கொண்டு வந்தார் ஏனென்றால், அவருக்கு பவாநந்தரிடம்மிக்கபயம். அவர்கேள்விகளின் அர்த்தம் என்னவோ?

ஐயா! நீர் பெஞ்சியின்கீழ் பார்த்தீரா!"

"ஆம், ஐயா! வண்டியில் ஒரு எலிக்குஞ்சுகூட இல்லை."

அப்புறக் கதவு சாற்றப் பெற்றிருந்தது. இருஜன்னல்களும் திறந்திருந்தன. வண்டிவந்ததும் இவரைக் கதவண்டை இருக்கச்செய்தேன் எல்லாம் அப்படியேயிருக்கின்றன என்றார். ஸ்டேஷன் மாஸ்டர்

பவாநந்தர் தலையசைத்தார். சகிக்கமுடியாத துர்க்கந்தத்தைப் பொறுத்துகொண்டு அவர் வண்டியை நுட்பமாய் சோதித்துப்பார்த்தார். மூக்கை கைகுட்டையால் மூடிக்கொண்டார் தோல் சைப்பை ஒன்றிருந்தது. ஒருபுஸ்தகம் கவிழ்ந்து வீழ்ந்துகிடந்தது. இவைகளையும் பிரேதத்தையும் தவிர வண்டியில் வேறொன்றும் காணோம்.

மிகவும் பக்ஷமாய் பயங்கரமாய் விழித்திருந்த கண்களைமூடிவிட்டு பிரேதத்தை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்.

சுயகௌரவமும் வீண்பெருமையுமுள்ள ஸ்டேஷன்மாஸ்டர் பவாநந்தர் பேசாது தம் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதைகண்டு சகிக்க முடியவில்லை.

அவர் மயக்கத்தாலோ பயத்தாலோ, கீழ்விழுந்தபொழுது மண்டை உடைபட்டிருக்கவேண்டும்என்று மகாதேவனிடம்மெல்லச் சொன்னார். பவாநந்தர் இதைக்கேட்டதும் ரணகாயத்தை அவர்களுக்குக் காட்டினார்.

"வீழ்ச்சியாலுண்டானதல்ல. சாதாரண வலுவுள்ள மனிதன் அப்படி அடிக்கமுடியாது. யாராயிருந்தாலும் சரி, அடி சாதாரண பலமோடுபட்ட அடி." என்றார் பவாநந்தர்.

"அதெப்படி? வண்டி காலியாயிருந்தது. அடிக்க ஒருவருமில்லையே" என்றார் மகாதேவன்.

பவா:—"யாரென்றுதான் நான் கண்டுபிடிக்கவேண்டும்"

மகா:—தொந்திரவான புதர் இதைக்கண்டுபிடிப்பதில் உமக்கு அதிஷ்டம் பலிப்பதாக"

பவா:— "வந்தனமையா!"

மகாதேவன் சாதாரணமாய்ப் பேசினாராயினும், அவர் குரலில் அவர் உள்ளூற உணர்ச்சியை பவாநந்தர் ஊகித்தார்.

சற்றுப்பொறுத்து, மகாதேவன் "நானும் அவருமெப்பொழுதும் நேசமாயிருந்தோம்"என்றான். சோர்ந்தபார்வை அவர் முகத்திலிருந்து போய்முகம்மாறிவிட்டது. அவர் ஜன்னலிலிருந்து திரும்பி பிளாட் பாரத்தில் நடக்க ஆரம்பிக்கையில் அவர் மிக்க வியாகூலமடைந்ததாக முகம் காட்டிற்று.

இக்குற்றத்தின்நோக்கம்வழிப்பறியல்ல.கிழவரின் பணம்ஜேப்பிலிருந்தது. மோதிரம்கைவிரல்களிலிருந்தது.தங்க கைகெடியாரமும் இருந்தது.

பவாநந்தர் தம் கவனத்தை கைகெடியாரத்தின் மேல் செலுத்தினர்.அதிருந்த ஜேப்பி பிரேதத்தின் கீழிருந்தது. பவாநந்தர் அதைப்பார்க்க பிரேதத்தை திருப்பவேண்டியிருந்தது. கைகடியாரம் தரையில் பலமாய் பட்டிருக்கவேண்டும், ஏனெனில் மெயின்ஸ்பிரிங் சின்னபின்னமாய் போயிருந்தது. கடியாரம் நின்றிருந்தது. ஆனால் பவாநந்தர் சமா

சாரங்கள் இப்படித்தானிருக்குமென்று விட்டுவிடுபவரல்ல. மறுபடியும் சற்று சோதித்து வீழ்ச்சியே மெயின்ஸ்பிரிங்கை உடைத்ததென்றும் சடியாரம் நின்றதற்குக்காரணமென்றும் ஊர்ஜிதப்படுத்தி கொண்டார்.

"என் அதிஷ்டமே அதிஷ்டம்." என்றார் ஸ்டேஷன் மாஸ்டரைப்பார்த்து.

உலாவிக்கொண்டிருந்த மகாதேவன் "மர்மங்கிடைத்து விட்டதா? "என்றான்.

"ஒன்று? அனேகம் இங்கு நான் கண்டுபிடிக்கக் கூடியதெல்லாம் நான் கண்டுபிடித்தாயிற்று." என்று முகமலர்ச்சியோடு பவாநந்தர் சொன்னார்.

மகாதேவன்:— "மரணவிசாரணை அவசியமென்று எண்ணுகிறீரோ? ஐயா! இவ்விஷயங்களில் நானோ ஒன்றுமறியாதவன் எங்கள் குடும்பத்தில் இதற்கு முன் கொலை நடந்ததே கிடையாது"

பவா:— "சந்தேகமென்ன? மரணவிசாரணை எங்கு நடக்கவேண்டுமென்கிறீர்? சென்னையிலா?"

மகா. சென்னையிலல்ல. கூடுமானால் அவரூராகிய சேலத்தில் நடத்தகூடாதோ? அவர்கள் மாதிகாரியங்களுக்கு மிகவும்சௌகரியமாயிருக்கும். மேலும் இச்செய்தி பத்திரிகைகளுக்கு பரவக்கூடாதென்று மிகவும்ஆவலுடையவனாயிருக்கிறேன்"

"அதில் எனக்கொரு ஆக்ஷேபமுமில்லை" என்றுசற்று தாமதித்து பவாநந்தர் சொன்னார். ஸ்டேஷன் மாஸ்டரைநோக்கி "நீர் தனி வண்டியில் பிரேதத்தை அனுப்பிவிடலாம்," என்றார்.

ஸ்டேஷன் மாஸ்டர் தலையசைத்தார். அப்படியே செய்கிறேன். சாட்சியம் சொல்ல நான் அவசியமென்று நினைக்கிறேன். அதற்குக்கூட தயாராயிருக்கிறேன்''

''நிச்சயமாய் நிச்சயமாயா ? ''என்றார் பவாநந்தர். அவருக்கு ஸ்டேஷன் மாஸ்டர் ஒரு சாட்சியமும் சொல்லமுடியாதென்று தெரியும். ஆயினும் அவர் தாமதமின்றிஇதைக் கொண்டது ஸ்டேஷன் மாஸ்டரை நெருங்கிய சிநேகிதனாகபாவிக்க வழிஏற்பட்டது.

மகாதேவன் '' ஆயின் நாளை இரண்டுமணிக்கு அது சரியா?

பவா. '' எது? சரிப்படாது. கவனிக்கவேண்டிய சடங்குகளிருக்கின்றன. நாம் மேஜிஸ்திரேட்டுக்குச் சொல்லியனுப்ப வேண்டும். நாளையன்றைக்குமுடிக்கலாம்''

மகா. ஆனால் நிரம்பசரி நாளையன்றைக்கு காரியம் முடித்துவிடநான் ஆவலுடையவனாயிருக்கிறேன்.

பவா.'' காரியம் முற்றிலும் முடிந்து ஒழிந்துவிடாது நான் கொலைபாதகனை கண்டுபிடிக்கும் வரையிலும் காரியம் முடியாது.

மகா. நீரெப்பொழுதாவது கண்டுபிடித்தால்''

பவா. '' நான் கண்டுபிடிப்பேனென்ற எண்ணமிருக்கிறது.

மகா. ''அதுநிரப்ப சரி இதன் மத்தியில் நாம் போகலாமே''

அரைமணிக்குள் பவாநந்தரும், மகாதேவனும் சேலத்துக்குப்போகும் டிரெயினிலேறினார்கள். மிராஸ்தார்பிரேதமும் டிரெயினில் கொண்டு போகப்பட்டது.

மகாதேவன்சதா சுருட்டு பிடித்துக் கொண்டேயிருந்தான். அதிஆச்சரியத்துடன் மரணசம்பவத்தை பற்றிப் பேசிக்கொண்டே வந்தான்.

மகா. "உண்மையில் தற்கொலையாயிருக்காது"

பவா. தற்கொலையல்ல வண்டியில் எவ்விதமான கருவியும் காணேம். அடி உடனே கொன்றுவிட்டது. இந்த அடி கிழவன் கைவிரித்து ஓங்கி கையில் பளுவான கருவிபிடித் தடித்தாலும்அடிக்கமுடியாத பலத்தவடி. கருமானின் சுத்தியால் கருமானடித்தால் இந்த அடிபடும். இது தற்கொலையா? மகாதேவா?"

"நமதூர் ஸ்டேஷன். நான் வண்டிக்காக தந்திகொடுத்திருக்கிறேன்."

வண்டி காத்துக்கொண்டு தயாராயிருந்தது. இருவரும் சேலம் பட்டணத்துக்குள் பிரவேசித்தார்கள். மகாதேவன் அதிவேகமாய் குதிரையை ஓட்டினன். வண்டி சேலத்தில் சேர்ந்தபொழுது மாலைக் காற்று சுகமாய் வீசிக்கொண்டிருந்தது வழியிலிருந்த சோலைகள் ரம்மியமாயிருந்தன பவாநந்தர் செடி மரங்களைப் பார்த்து பேரானந்தமடைந்து கொண்டிருந்தார். மகாதேவனே தான் வண்டி ஓட்டிக் கொண்டிருப்பதையாவது, தன்பக்கத்திலிருந்ததுப் பறியும் இன்ஸ்பெக்டரையாவது, அவர்கள் போய்க்கொண்டிருந்த பிரதேசத்தையாவது, தான் சம்பந்தப்பட்டுள்ள அசம்பாவிதமான கொலையையாவது கருதாதவனய் சுருட்டுப்பிடித்துக் கொண்டேயிருந்தான்.

அவர்கள் கால்மணிநேரம் ஒருவார்த்தையும் பேசாமலேயிருந்தார்கள். கால்மைல் தூரம் வந்தாயிருக்கும் பவாநந்தர் பேசவாரம்பித்தார்.

ப. "நான் சென்னையில் நாளை யிருக்கவேண்டும். முக்கியமானகாரியம். நாளையன்றைக்கு மரணவிசாரணைக்கு இங்குவந்து விடுகிறேன்."

மகாதேவன் தலையசைத்தார்.

ப. "எப்பொழுது ரயில் புறப்படுகிறது?"

ம. "காலையில் காபி சாப்பிட்டுவிட்டு காலைவண்டியில் போகலாம். இந்தவண்டியில்தான் இன்று நானும் சிற்றப்பாவும் போனோம். சென்னையிலிருந்து பாஸ்ட் டிரெயின் இங்கு இரவு 12மணிக்குவந்து சேருகிறது. மரணவிசாரணை காலையில் வைத்துக்கொள்வோமா?"

ப. "அதுமிகவும் சரி" என்று சந்தோஷமாய் ஏதோ விருந்துக்கு நாளும் காலமும் குறித்ததுபோல் சம்மதித்தார்.

ரோட்வந்தது இரும்புகேட் வைத்தபங்களாதெரிந்தது. வண்டியும் நின்றது.

கேட்டிலிருந்த சேவகன் வண்டி உட்செல்லமுடியிருந்தகதவைத்திறந்தான். பவாநந்தர் பங்களா காம்பவுண்டின் விசாலத்தையும், தோட்டச்சிறப்பையும் பார்த்து ஆச்சரியப்பட்டார். மாமரங்கள் சோலை மிகவும் நேர்த்தியாயிருந்தது. மான்களும் நாய்களும் ஓடிவிளையாடிக் கொண்டிருந்தன. மான்கள் மனிதரைப்பார்த்து பயந்து பதுங்கஓடின குதிரை வண்டி தோட்டத்தை யெல்லாம் தாண்டி பங்களா எதிரில் நின்றது.

கொலைசெய்தி இவர்கள் வந்து சேர்வதற்குமுன்னமே வந்து சேர்ந்துவிட்டது. ஒவ்வொன்றும் துக்கம் கொண்டாடுவது போலிருந்தது. ஆட்களின் முகம் ஒளிநீங்கி வாட்டமாயிருந்தது. ஒருதடித்த மனிதனின் முகம் துக்கசெய்தியால் வெளிர்த்து ஓய்ந்திருந்தது.

இந்தமுகம் பவாநந்தருக்கு ஏதோஒன்றைக் ஞியாபகத் துக்குக் கொண்டுவந்தது. அதன்காரணம் அவருக்குத்தெரி யும். தெரியவுமில்லை. அந்த விழிப்புக்குக் காரணம் ஒருநொ டியில் அறிந்து கொண்டார். ரயிலில் கொலையுண்டமனித னின் முகச்சாயலாயிருந்தது.மகாதேவன் பவாநந்தர் பார்க் கும் குறிப்பைக்கண்டு ஜயராமன் குடும்பசகிதமாய் அநேகவ ருஷங்களாக இக்குடும்பத்தில் சமையல் காரனாயிருந்து வருகிறான்' பழம்பெருச்சாளி எனக்கு அவனைப்பிடிக்கவில் லை."

பவாநந்தர் ஜயராமன் புதிய எஜமானைப்பார்த்து கீழ் நோக்காய்ப்பார்த்ததைக்கண்டு கொண்டார் இவர்களுக்குள் மனஸ்தாபமொன்று மில்லையென்று கண்டுகொண்டார். உட னேபவாநந்தர்,

"காலதாமத மிருக்குமெனின் அவருடன் நான்கொஞ் சம் பேசவிரும்புகிறேன். "என்றார்.

ம "நேரம் எதேஷ்டமாயிருக்கிறது. ஒருமணி நேரத்தி ல்சரப்பிடலாம்"

பவாநந்தர் ஜயராமன் ஜாக்கிரதையாயும் விசனமாயு மிருக்கிறதைக் கண்டார். இவரின் ஆராயும் கண்களுக்கு இம்மனிதனிடம் விசனமும் கோபமுமாகிய இரு உணர்ச்சி கள் துவந்தித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. ஜயராமன் தன் உணர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாத சுபாவ முடையவன். அவன் தான் அநேககாலம் நெருங்கிப்பழ கிய எஜமானனிறந்ததற்காக விசனப்பட்டானாயினும், அவ னிடம் விசனக்குறியொன்றும் காட்டாமலிருந்தான். பவா நந்தரின் வற்புறுத்தலை நிராகரிக்கும் சாமர்த்தியம் வாய்ந் தவர்கள் மிக்க அபூர்வம்.

"ஏன் உட்காரலாமே" என்று பவாநந்தர் ஜயராமனைப் பார்த்துச் சொன்னார். அவர்களிருவருமட்டு மிருக்கும்பொழுது பவாநந்தர் "உம் எஜமானை கொலைசெய்தவராரென்று கண்டுபிடிப்பதில் நான் கவனமாயிருக்கிறே னென்பதுஉமக்குத் தெரியுமா:" என்றார்.

ஜயராமன் உட்கார்ந்தானாயினும் ஒன்றும் பேசாமல் சும்மாவிருந்தான், பவாநந்தர் பொருமையுட னிருந்தார்.

கடைசியில் ஜயராமன், உம்முடையவேலை அப்படியிருக்கட்டும், அந்தக்கொலை செய்தவன் சிக்கிக்கொள்ள மாட்டான்."

ப. உம்முடைய உதவிவேண்டும். நீர் உம் எஜமானிடம் மிக்க பக்ஷமுள்ளவரா யிருந்தீரென்பது நான் அறியாததல்ல. மேலும் உம்மால் கூடுமாயின் எனக்கு வேண்டிய உதவிசெய்வீரென்றும் நான் அறிவேன்.

ஜயராமன் வெறும் தலையைமட்டும் அசைத்தான் அவன் முகம் ஒன்றையும் காட்டவில்லை.

ப. "எஜமான் இன்று சென்னையிலிருக்க வேண்டுமென்று அவரின் உத்தேசமல்லவா?"

ஜ. "ஐயா அதென்னவோ அறியேன். அப்படி யிருந்தால் சொல்லியிருப்பார்."

ப. "எதற்காகப்போனார்?"

ஜ. காபி சாப்பிடும்பொழுது ஒருகடிதம் வந்தது. அது யாரோ பெண்பிள்ளை எழுதியதுபோலிருந்தது. அந்த யெழுத்தை அறியாதவர்போல் கடிதத்தை உடைத்துப்பார்த்தார். முதல் வாக்கியமே அவர் கவனத்தைக் கவர்ந்தது. அவர் முகம் மிகவும்சிவந்தது. படிக்கப்படிக்க வெளிர்த்தது. கண்களில் நீர்ததும்பிற்று, கையில் கடிதம் பிடித்தபடியே யோசி

த்துக்கொண்டு சற்று உட்கார்ந்தார். பிறகு தீர்மானத்திற்கு வந்தவர்போல் தோற்றினார். இதைவாசி என்று மகாதேவ னிடம் கொடுத்தார்.

மகாதேவன் சுபாவம் போல கடிதத்தை மெதுவாய் வாசித்தான். அதனால் அவன்மனங் கலங்கினதாகத் தோற்ற வில்லை. சற்றுப்பொறுத்து

தாங்கள் சென்னைக்கு உடனே போகவேண்டியது தான் இதுதங்கள் கடமை" என்றான்.

இதைக்கேட்டதும் மிராசுதாருக்குண்டான சந்தோஷ த்துக் களவுகிடையாது. அவனை எழுந்து கட்டிக்கொண்டு "உன்போலபிள்ளை அரிதரிது. உன்மாதிரி தயாளமனது யாருக்கிருக்கும்? நான் நினைத்ததுஇப்பொழுது சரியாயிற்று. இதனால் உனக்கு யாதொரு குறைவு வாராதபடி பார்த்துக் கொள்கிறேன். நீ சொன்னதுசரி, நீ சொன்னதுசரி. உட னே புறப்படுகிறேன். ஜயராம் ரயிலுக்கு வண்டிபோடச் சொல்லென்றார்.

ப. யாரிடமிருந்தது கடிதம்?

ஜ. மகாதேவனிடம்நான் அறையை விடுகையில் அவர் அதை சோப்பில் போட்டுக்கொண்டதைக் கண்டேன்.

ஜயராமனுக்கு மகாதேவனிடம் வெறுப்பென்பது விசி தமாயிற்று. அவனுக்கு மகாதேவன் மீது சந்தேகம் என்று தெரிந்தது.

நான் காபி எடுத்து வந்தபொழுது மகாதேவன்மேஜை யண்டை நிற்பதை நான் பார்த்தேன். அவன் அங்கிருந்து மருந்து வைக்கப் பட்டிருக்கும் அலமாராவிடம் போனான். அவர் சதாமருந்து வைத்துக்கொண்டிருப்பார். அவருக்கு வைத்தியமும் தெரியும். மகாதேவன் முதுகைத்திருப்பி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

சீக்கிரமாகட்டும். ஜயாராமா நானே கிழவன் ஏதோ நல்ல காலம் விஷயங்கள் சரியாகின்றன என்ருர்.

எஜமானன் அவ்வளவு சந்தோஷமா யிருந்ததை நான் பார்த்ததேயில்லே. ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் வண்டியிலேரிக் கொண்டார். பவாநேதனும் கூடச் சென்ருர், இது தான் என் எஜமானைக் கடைசியாகக்கண்டது காணப் போகிறதில்லே இனி என்றாலும் அவன் பேச முடியவில்லை.

பவாநந்தர் மேஜையை ஆராய்ந்து பார்த்தார். அவர் ஜயராமனை மிக்க அனுதாப முடையவர்போல் பார்த்தார், இப்படிப் பார்ப்பதால் அவர் பிறரின் நம்பிக்கையைக் கவர்வது வழக்கம். பவாநந்தர் "கொடூரமான கொலே. இதைச் செய்தவனைப் பிடிப்பதில் உமக்கு இஷ்டம் தானே!

"பிடித்து தூக்கிடவேண்டும்" என்று பட படத்து கோபமாய்ச் சொன்னுன். அவன் குரலால் அவர் யார் மீது சந்தேகப் படுகிருனென்பது தெரிந்தது. அவன் பவாநந்தர் தன்னை இவ்விஷயத்தில் வற்புறுத்துவாரென்று கருதினுன் போலும் ஆனல் சாவதானமாய் பவாநந்தர் மேஜையை சோதனைசெய்து கொண்டிருந்தார்.

சகலமும் ஒழுங்கியிருந்தது கடிதங்கள் அடுக்கப்பட்டு அவைகளின் மேல் பாரக்கல் வைத்திருந்தது. ஒரு கடிதக் கட்டு அவர் கவனத்தைக் கவர்ந்தது. மேஜையின் ஒரு பக்கத்தில் வீழ்ந்து கிடந்தது. அதில் இரண்டொன்றை எடுத்துப் பார்த்து, ஜயராமனை வரும்படி சைகை காட்டினுர்.

ப. இந்த இரண்டைத் தவிர வேறேகாகித பளுக்கள் எஜமானிட முண்டா ''

ஜயராமனுக்கு இக்கேள்வி திடுக்கென்று போட்டது.

ஜ. ஐயா நீர் கேட்குமுன் நான் அதைக் கவனிக்க வில்லை. எல்லாவற்றிலும் பெரிதான கருங்கல் குமிழ்வைத்த தொன்றிருந்தது.

சரி சரி—என்று பவாநந்தர் சொல்லி, மருந்து பீரோ பக்கம் போனார். அங்கும் எல்லாம் ஒழுங்காயிருந்தது. மிராஸ்தார் ஒவ்வொன்றிலும் மிக்க ஜாக்கிரதையும் ஒழுங்கு முடையவர், ஐடோபாரம் சீசாவின்கார்க் திறக்கப்பட்டு மூடப்பெற்றிருந்தது. சீசாவில் மூன்றிலொரு பாகம் குறை வுபட்டிருந்தது.

பவாநந்தர் அந்த சீசாவைத் திறந்து ஐயராமன் மூக் கண்டை கொண்டு போனார். அவன் நெடியால் தும்பினான்.

ப. "இதை முகர்ந்து மிராஸ்தார் எப்பொழுதாவது பார்ப் பதுண்டா?"

ஜ. "கிடையவேகிடையாது. கிடையவே கிடையாது."

ப. "ரொம்ப சந்தோஷம். போதும் இனி உம்மை தொந் திரவு செய்வதில்லை."

ஜ. "ஐயா! சாப்பாடு தயாராயிருக்கும் வாரும்.

சாப்பிடும் சமயத்தில் கொலையைப்பற்றிய பேச்சை ஒருவரும் பேசவில்லை. மகாதேவன் பார்வைக்கு எப்படி யிருந்தாலும், உள்ளூர உணர்ச்சி மிக்குள்ளவன். அவர் கொலை சம்பந்தமான பேச்சிலிருந்து விலக்கிக்கொள்ள விருப்பமுடையவர் போலிருந்தார். இதை அறிந்த பவாநந் தரும் அதைப் பற்றிப் பேசாமலிருந்தார்.

மகாதேவன் எழுந்திருக்குமுன் பவாநந்தர் படுக்கை யை விட்டெழுந்து விட்டார். ஐயராமன் தயவால் டிபன் சாப்பிட்டு விட்டு வண்டியிலேறிக் கொண்டு ரயிலடிக்கு ஒன்றரை மணி நேரத்துக்கு முன்னமே போய் விட்டார்.

12618

அங்கு காலத்தை வீணாக்கவில்லை. முதலில் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சற்று பேசிக்கொண்டிருந்தார். அவர் ரயில் கார்டிடம் இவரைப் பற்றிச்சொல்லி வைத்தார்.

ஸ்டேஷன் மாஸ்டரிடமிருந்து உத்திரவு வாங்கிக் கொண்டு ரயில் லயினிலே நடந்து போனார். பவாநந்தர் மெதுவாய் பூமியைப்பார்த்துக் கொண்டேநடந்து போனார் ஒரு மைல் தூரம் வரையிலும் ஒன்றும் அகப்பட வில்லை. மற்றொரு ரயிலோரமாய் திரும்பி வந்தார். பாதி தூரம் வருவதற்குள் தண்டவாளத்துக்குச் சமீபத்தில் காயிதத் துண்டுகள் கிடந்தன. அவைகள் போடப்படும் பொழுது மழையடித்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் அவைகள் ஒரே இடத்தில் கிடந்தன.

குனிந்து பவாநந்தர் அக்கடிதத் துண்டுகளை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பொருக்கியெடுத்தார். அவர் விரல்கள் கண்கள் மிகவும் அனுபோகமுள்ளவைகளாகையால், வெகு சீக்கிரம் அவைகளை ஒன்று சேர்த்து வாசித்து விட்டார். 10,12 வார்த்தைகள் படித்திருப்பார். அது போதும் அவைகளை மெல்ல எடுத்துத்துடைத்து கைக்குட்டையில் கட்டி ஜோப்பில் போட்டுக் கொண்டார்.

மெதுவாய் என் அதிஷ்டம் என்று [illegible] கொண்டார். மற்றவைகள் பிடிப்பது சுலபம் தான் இருநூறு அடிக் கப்பால்சிறிய Squirt ஐக்கண்டெடுத்தார். ஒருசீசா மூடியையும்கண்டார்.

பவாநந்தர் அம்மூடியை முகர்ந்து [illegible]. அது ஐடோபாரம் வாசனை வீசியது.

பவாநந்தரின் காரியம் ஏறக்குறை [illegible] விட்டது விசையாய் ஸ்டேஷனுக்கு நடந்தார். மெயில் பத்திரிகை

வாங்கிக்கொண்டு ரயிலேறி விட்டார். இராஜரீகவிஷயமான செய்திகளை படித்து முடிக்கும் சமயத்தில் டிரெயினும் புறப்பட்டது.

வந்தனமையா குட்மார்னிங், எல்லாம் சரி வருகிறேன் என்று பவாநந்தர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் உத்திரவு பெற்றுக் கொண்டார். சற்று தூரம் ஸ்டேஷன் மாஸ்டர் வண்டியுடன் ஓடி வந்தார்.

பவாநந்தர் வண்டி புறப்பட்டதும் கையில் கடியாரத்தை எடுத்து வைத்துக்கொண்டார். 25நிமிஷம் என்று கடியாரத்தை வைத்து விட்டு பத்திரிகையை படிக்க எடுத்துக் கொண்டார்.20 நிமிஷமானதும் பத்திரிகையை அப்புறம் வைத்து கடியாரத்தை எடுத்துக்கொண்டார்.

அவர் கண்கள் கடியாரத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன.

"ஒன்று, இரண்டு, மூன்று, நாலு" பவாநந்தர் இடத்தைவிட்டெழுந்து, செய்திக்கம்பியை இழுத்தார். வண்டி மெல்ல மெல்ல நின்றது.

பவாநந்தர் வண்டியைத் திறந்து கொண்டு இறங்கியதும், வண்டியிலுள்ளவர்களெல்லாம் ஜன்னல் வழியாக தலைகளை வெளியில் நீட்டி எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கீழிறங்கி கார்டுக்கு கைக்குட்டையை வீசி சைகை செய்தார்.

உடனே வண்டி மெதுவாய் நகராரம்பித்தது.ஒவ்வொருவரும் பவாநந்தரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வண்டி ஒரு வட்டத்தைத் தாண்டிச் சென்றது. பிறகு பவாநந்தர் இடம்விட்டு நகர்ந்தார். அந்தப்பக்கத்தில்தானி

ருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு மெல்ல குனிந்துபார்த்துக்கொண்டு சென்றார்.

இம்முறை அதிகதூரம் போகவில்லை. அந்தஇடத்தைக் குறிப்பாய் அறிந்துகொண்டு விட்டார். அவரிறங்கின இடத்துக்கு 50 அடிக்குள்ளாக கடிதபளுவைக் கண்டெடுத்தார்.

'காரியமுடிந்தது. அந்தஸ்திரீயைக் கண்டு அவளை என்னோடு அழைத்து வரவேண்டும்' என்றார்.

மற்றொரு பாஸ்ட் டிரெயின்வந்தது. இதற்காக பவாநந்தர் நாட்டுப்புறத்தான் போக்கு வண்டிக்குக் காத்திருப்பது போல் காத்திருந்தார். வண்டியும் நின்றது. ஏறிக்கொண்டு சேலத்துக்குத் திரும்பிவிட்டார். மரண விசாரணைக்கு ஒரு ஸ்திரீயையும் அழைத்துவந்தார். அவள் மன வியாகூலத்தாலும், இராப்பகல் தூக்கமின்மையாலும் தளர்ந்திருந்தாள்.

அவளின் வெளிர்த்த முகம் பார்ப்பதற்கு ரம்மியமாயிருந்தது. அவள் மகாதேவனைக்கண்டதும் பயத்தாலோ கோபத்தாலோ கறுத்தது.

பவாநந்தர் 'முக்கியமான சாட்சி' என்று சொன்னது தவிர வேறொன்றும் சொல்லவில்லை.

மகாதேவன் எப்பொழுதும்போல கவலையற்றிருந்தான். அவனைப் பார்த்தவர்கள் அவன்தன் சிறிய தந்தையின் மரண விசாரணை நடக்கப்போகிறதாக அவனுக்குத் தெரிந்ததாக அறியார்கள்.

மகாதேவன் நிற்கும் நிலையை பவாநந்தர் பார்த்து அவர் மிகவும் உள்ளங்கனிவதாக அறிந்துகொண்டார்.

மகாதேவன் மரணவிசாரணைக்கு வேண்டிய ஏற்பாடுக ளைச் செய்வதில் மும்மரமாய் கவனத்தைச் செலுத்தினான். சென்னைப்பத்திரிகை இக்கேஸுக்காக ஒரு பிரதிநிதியை அனுப்பியிருந்தது.

விசாரணை ஆரம்பமாயிற்று. பவாநந்தர் வந்து சேர்ந்த அரைமணிக்குப்பின் ஜூரிகள் சத்தியம்செய்து அமர்ந்தார் கள். சாக்ஷியம் ஆரம்பமாயிற்று. டிக்கட் கலெக்டர் பிரேத த்தைக் கண்டேனென்றார். டாக்டர் ஹட்சன் காயத்தின் தன்மையைப் பற்றிச் சொன்னார். ஒவ்வொருவரும் தமக் குத் தெரிந்ததைச் சொன்னார்கள்.

டாக்டர் ஹட்சன் மரணம் மண்டை ஓடுடைந்ததா லிருக்கக்கூடுமென்றார். காயம் பளுவான வஸ்துவால் ஓங்கி யடித்ததால் உண்டாயிருக்கலா மென்றார். அடியின் பலத் தைப்பற்றி வெகுவாய்ச் சொன்னார். மண்டையோட்டை முட்டையைப்போலுடைக்க என்ன பலமாயிருக்க வேண் டுமென்றார்.

ஜயராமன் கடிதம் வந்ததையும், எஜமான் உடனே பிர யாணமானதையும் பற்றிச் சொன்னான்.

இவைகளை யெல்லாம் ஒருவரும் கவனிக்கவில்லை. எல் லாரும் சென்னை இன்ஸ்பெக்டருக்காக ஆவலா யிருந்தார் கள். அவருக்கு ஏதோ clue கிடைத்துவிட்டது என்று சொல்லிக்கொள்ளப்பட்டது.

பவாநந்தர் சாட்சிப் பெட்டியிலேறியதும், மகாதேவ னும் அந்தஸ்திரீயும் அவரையே குறிப்பாய்ப் பார்த்துக்கொ ண்டிருந்தார்கள். சென்னைப்பத்திரிகைப் பிரதிநிதி பென் சிலைகூர் மைசெய்துகொண்டார்.

ஆரம்பத்தில் பவாநந்தரின் சாக்ஷியம் பிரமாதமான தொன்றுமில்லாதிருந்தது. ரயில்லயினில் தாம்கண்டதை ஒவ்வொன்ருய் வெளியிட வெளியிட ஆவல் அதிகமாயிற்று. கடிதத்துண்டு கண்டெடுத்த வழியையும் காகிதபளுக்கல் கண்ட விதத்தையும் சொன்ஞர்.

இதை விஸ்தரித்துச் சொன்ஞர். "இறந்தவரின் கைகடியாரம் எனக்கு அவரிறந்த நேரத்தையும், இடத்தையும் குறிப்பிட்டது. டிரெயின் மறுநாள் அந்த இடத்துக்கு அதே நிமிஷத்தில் வந்து சேர்ந்தது. நான் கீழிறங்கி நான் எதிர் பார்த்ததைக் கண்டெடுத்தேன்.

Coroner பவாநந்தரே! இக்கடிதத்துண்டுகள் இக்கேஸுக்கு எப்படி சம்மந்தப்பட்டிருக்கின்றன ?

ப. மிராஸ்தாரை மரணத்துக்கிழுத்த கடிதத்தின் துண்டுகளிவை. சென்னையிலிருந்து இக்கடித மெழுதியவரை இங்கு அழைத்துவந்திருக்கிறேன்.

உடனே எல்லோரும் அந்த ஸ்திரீயைப் பார்த்தார்கள். இவளோ கொலேகாரி !

ப. ஐயா! கடிதத்தை நான் வாசித்துக் காட்டட்டுமா?

க. கூடுமாஞல் செய்யும்.

ப. ஐயா! நான் இத்துண்டுகளை ஒன்றுசேர்த்துஒழுங்குபடுத்தி யிருக்கிறேன். நான்படித்தபின் ஜூரியிடம் தருகிறேன். கடிதம் ஒருஸ்திரீயால் எழுதப்பெற்றது. பரிஷ்காரமாயிருக்கிறது. சுருக்கமானது.

ஐயா! நான் கடிதம் எழுதுவதற்காக மன்னியும் தங்கள் புத்திரனுக்கு இது தெரியாது. அவர் மிகவும் அசௌக்கியமாயிருக்கிருர். மரணம் சம்பவிக்குமோவென்றஞ்சுகி

றேன். சிலகாலம் பத்திரிகைகளுக்கு சமாசாரங்கள் எழுதிக்கொடுப்பதால் கிடைப்பதைக்கொண்டுவாழ்ந்து வந்தோம். அவர் காயலாவாய் மூன்றுவாரமாகிறது. அக்காலமுதல் நாங்கள் பட்டினிதான். நாங்கள் சேர்த்து வைத்ததெல்லாம் அவரின் ஆகாரத்துக்காகவும், மருந்துக்காகவும் சிலவழிந்துபோயிற்று. நானும் குழந்தையும் சாப்பிடவேயில்லை. உமக்கு இரக்கமிருந்தால் உடனே வந்து தங்கள் மகனைக்காப்பாற்றும். அவர் தங்களுக்குப் பிரியமில்லாதிருந்தும் என்னைக்கல்யாணம் செய்து கொண்டதால் அவரை நிராகரித்து விட்டீர். நாங்கள் சம்பாதித்து சுகமே வாழலாமென்று மூட்டாள்தனமாய் நினைத்துவிட்டோம். அது இப்பொழுது தெரிந்தது. நாங்கள் தோற்றோம். அவரை தங்களிடம் ஒப்புவித்துவிடுகிறேன். நீரே ஜெயித்தவர் நீர் எங்களிடம் பரிதாபம் காட்டும். நான் என் தமயனிடம் போய் விடுகிறேன். நான் இஷ்டப்பட்டாலன்றி தங்கள் மகனையும், பேரனையும் இனிப்பார்ப்பதில்லை என்று சத்தியம் செய்து தருகிறேன். அவர்களைக்காப்பாற்றும். தெய்வத்துக்காகவாவது உடனே புறப்படும். இல்லையோ என்னவோ

தங்கள் மருமகள் அகிலம்

ஜூரிகள் கடிதத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் பவாநந்தர், ஐயா, நான் விலாசத்தை பார்த்துக்கொண்டு அங்கேபோனேன். சீனிவாசனுக்கு வேண்டிய சௌகரியங்களுக்கு ஏற்பாடுசெய்தேன். அவருக்கு தேகம் சற்று சௌக்கியப்பட்டது. அகிலத்தை இதற்காக அனுமதிமேல் அழைத்துவந்தேன். சென்னையில் வக்கீல் கிருஷ்ணசாமிஐயர் மிரால்தார், சீனிவாசன் கலியாணம் செய்துகொண்டபின் தம் சொத்தை தம்பி மகனுக்கு உயில் எழுதிவிட்டதாகத்

தெரிந்துக்கொண்டேன். அவ்வளவு சொத்தும் மகாதேவ னுக்குத் தான் மிராசுதார் காலத்துக்குப்பின் போகும்.

Coroner, இதெல்லாம் சுவாரஸ்யமாயிருக்கிறது.

(ஐயா) நம்விசாரணைக்கனுகுணமாவதெப்படி சொல்லும்.

பவா.—மன்னியுங்கள் விசாரணைக்கு முக்கியமானது என்று பொறுமையாய்ச் சொன்னார்.

Coroner. இந்த ஆச்சரியகரமான மரணத்துக்குக் கா ரணத்தை கண்டுவிட்டீரா. ?

பவா:—தடையென்ன? மிகவும் சாதாரணமானது மிராஸ்தார் உட்கார்ந்த வண்டியில் ஐடோபாரத்தை வீசி னன். இந்த நாற்றம் பொருக்கமுடியாது. அவர் தலையை வெளியில்நீட்டிக்கொண்டிருந்தார். கொலைபாதகன் அடுத்த வண்டியிலிருந்து இந்தக் கடிதபளுக்கல்லை விட்டடித்தான். வண்டியின் மிகுந்த வேகமும் வீசின வேகமும் மண்டை யோட்டை உடைத்து விட்டது. அக்கிழவர் வண்டியில் அப்படியே வீழ்ந்துவிட்டார். கல் தண்டவாளத்துக்குப் பக்கத்தில் வீழ்ந்துகிடந்தது.

கரனரும் ஜூரியும் மிக்க ஆவலுடன் பவாநந்தரைப் பார்த்தார்கள். ஆச்சரிய மரணத்துக்கு அவர் சாதாரணமாய் சொன்னகாரணம் அவர்களைப்பிரமிக்கச்செய்தது.

கன்னெஞ்சனன மகாதேவனும் ஒரு மாதிரிமுகம்வாடினன். மிக்க ஆச்சரியமுடையவனாய் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தான். மெய்மறந்து குறிச்சியில் வீழ்ந்தான். குறிச்சியும் ஒடிந்தது எல்லாரும் வாய்பொத்தினவர்களாயிருந்தார்கள். உணர்ச்சியால் காற்றும் பரபரவென்றடித்தது.

பவாநந்தர் பேசாமல் நின்றார். காரனர் வாய் குளறி பெருமூச்சுவிட்டார். அவரின் குரல் Den & husky அவர் கேட்டகேள்வி சுப்ரிதியானதல்ல.

“பவாநந்தரே ! கொலைபாதகன் யாரென்று உமக்குத் தெரிந்ததா.?”

மகாதேவன் தலைகுனிந்து கொண்டுட்கார்ந்திருந்தான். பவாநந்தர் சாவதானமாய் மெதுவாய் சந்தேகாஸ்பதமேயில்லையே என்று மகாதேவனைப்பார்த்தார்.

எவ்விதத்திலாவது மிராஸ்தார் தம் ஏகபுத்திரனுடன் சமாதானமாய்ப் போகக்கூடாதபடி தடுக்கவேண்டுமென்ற சிறத்தையுள்ள மனிதனே கொலைபாதகன் அவன் கடிதத்தையும், Squirt, காகிதபளுக்கல்லையும் எடுத்தவன் அவனே மிராஸ்தாரின் முன் வண்டியிலுட்கார்ந்திருந்தவன்

உடனே மகாதேவன் ஜோபியிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து பவாநந்தரைக் குறிப்பாய்ச் சுட்டான். மகாபுத்திசாலியாகிய பவாநந்தர் உடனே உட்கார்ந்தார். குண்டு சுவரில் போய் அடித்தது. கொலைபாதகன் மறுபடியும் சுடவில்லை. ஓடவாரம்பித்தான். ஜனத்திரள், போல் அவனைக்கண்டு நடுங்கி பயந்து விலகிக்கொண்டார்கள். அவன் வேகமாய்ப்போனான். எல்லாரும் அவனைப்பின்தொடர்ந்தார்கள். பவாநந்தர் சற்றும் மனஞ்சலியாது அவனைத்தொடர்ந்துசென்றார். மகாதேவன் பலவாசல்களை தாண்டி ஓடினான். ஒருகுதிகுதித்து ஒருவாயற்படியை தாண்டினதில் தலையிடித்து உடைந்து சில்லாபோயிற்று. அப்படியே அம்மாவென்றுவிழுந்தான். சுட்டமுயலைப்போல்துடித்தோய்ந்து பின்றான் கால்கைகள் நடுங்கினவானம் பார்த்த முகத்துடன் விறைத்துப்போனான்.

பவாநந்தர் பக்கத்தில் வந்து நின்றுபார்த்து "எல்லாம்முடிந்தது. யமதூதர்கள் அவனை சிறைபிடித்துவிட்டார்கள் உங்களுக்கு வேலையில்லை என்று கான்ஸ்டேபிளைப் பார்த்துச் சொன்னார்.

ரயில்கோலை முற்றிற்று.

## கல்பதக்கம்.

"என்ன கோபாலையரே! புரொப்ரைடர்வாள். அசல்ரூம் அப்ஸ்டாரில்ஒழித்து விடவேண்டும். கீழிருக்கும் அரைக்கு நீர்வாடகை கொடுத்தென்னை இருக்கச்சொன்னாலும் என்னால் இருக்கமுடியாது." என்று மிட்டாதார் சோமஸ்கந்தர் ஓட்டலையரிடம் தடபுடலாய் சொல்லிக்கொண்டிருந்தார்.

கோபாலையர் குட்டையாய்ப் பெருத்தமனிதன். முக்கியமாய் தொந்தி பிரமாதமாயிருக்குமாகையால் அவசரவசரமாய்ப்பேச அவரால்முடியாது. அவர் மிகவும் மரியாதையுள்ள மனிதன். தம்மைத் தேடிவருகிறவர்களுக்கு எத்தனை அனுகூலங்கள் சகாயங்கள் வேண்டுமோ அவ்வளவையும் செய்வார். சோமஸ்கந்தரைப் பார்த்தால் பிரமாதமாகவிருக்கும். நிமிஷத்துக்கு நிமிஷம் உடைமார்த்திக்கொண்டு நிற்பார். இலக்ஷணமுடையவர் எத்தகைய மனிதராயிருந்தாலும் அவரின் சிநேகத்தை நொடிநேரத்தில் சம்பாதித்துவிடுவார். இவர் தடபுடலைப் பார்க்கும் எவருமே இவர் குபேர[illegible]னோ என்று நினைத்துவிடுவார்கள். உண்மையில் அவ்வளவு அயோக்கியனும் நாணயமில்லாதவனும் கிடையாது.

அவனுக்குத் தெரியாத சூதாட்டம் கிடையாது. பந்தயம்கிடையாது. இத்தகைய இடங்களில் தட்டாரயமாய் அவ

ரைப்பார்க்கலாம். சிலகாலமாய் அவருக்கு சற்றேகஷ்டகால மாயிருந்தது. அவரைப்பற்றிய அபவாதங்கள் பலபரவியிருந்தன. இதுகாரணத்தால் சூதாட்டத்தார் இவரைச்சேர்த்துக்கொள்வதில்லை.

கோபாலையர்:—என்னையா செய்வது? இது கிறிஸ்மஸ் காலமாதலால் அக்டோபர் நவம்பரிலேயே ரூமுகளை வாடகைக் கெடுத்துக்கொண்டு விட்டார்கள். ஏதாவதறை இருக்கிறதா என்று நீரேபோய் பாரும். இருந்தால் ஆக்ஷேபணையேயில்லை.

"காத்து வரும் மாடியிலேதாவதொரு ரூம்கொடுமே கீழிருந்து வெந்து அவிந்தாயிற்று."

நேற்று கேட்டிருந்தால் கொடுத்திருப்பேன். நம்மிடமுள்ள மிக்க சௌகரியமான ரூம் ஸ்திரீபார்ட் இராஜாம்பாளுக்கு நேற்று தீர்மானம் செய்தாயிற்றே!

"கும்பகோணத்திலல்லவா இராஜாம்பாளிருக்கிறாள். வருகிறதிங்கட்கிழமை தான் பார்க்பேர் ஆரம்பம் இன்று வெள்ளிக்கிழமை"

"அட்வான்ஸ் வாங்கியாயிற்று. முன்னொருமுறை இங்கேதானிறங்கியிருந்தாள். இந்தரூம் அவளுக்கு மிக்கதிருப்திகரமாயிருக்கிறதாம். என்ன சிலவானாலும் அதேரூம் வேண்டுமென்று நேற்று சொல்லியனுப்பிவிட்டாள். திங்களன்று மெயிலில் வந்துவிடுவாள்."

"அவள் வரும் வரையிலும் நானிருக்கிறேன். பிறகு வேறிடமோ அல்லது இதே இடமோ பார்த்துக் கொள்ளுகிறேன். மேலும் அவளை எனக்கு நன்றாய்த் தெரியும். தங்கமானகுணமுடையவள். ஞாயிற்றுக்கிழமை காலி செய்துவி

டுகிறேன். மூன்று நாள் வாடகையை நான் கொடுத்துவிடு கிறேன்."

கோபாலையர் சம்மதித்துவிட்டார். சோமஸ்கந்தர் ஒப்புக்கொண்டார். இந்த ரூம்நன்றாய் ஜோடிக்கப் பெற்றிருந்தது. எவையெல்லாமவசியமோ அவ்வளவு மிருந்தன. இவரும் டம்பாசாரி. இரண்டும் மிகவும் ஒத்திருந்தன. ரூமிலிருந்த ஒவ்வொரு வஸ்துவும் கண்ணைக் கவரும்படியாயிருந்தன. நாற்காலிகள் மேஜைகள் சோபாக்கள் விளக்குகள் படங்கள், கண்ணாடிகள் ஒவ்வொன்றையும் சோமஸ்கந்தர் நன்றாய் அனுபவித்தார். நன்றாய்பார்த்துக்கொண்டார். மூன்று தினங்கள் மூன்று நிமிஷங்கள்போல் கழிந்தன. ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் சோமஸ்கந்தர் காலி செய்துவிட்டார்.

இராஜாம்பாள் வரப்போகிறதைப்பற்றிஓட்டலெல்லாம் பேச்சாயிருந்தது. அவளைப் பார்க்காதவர்கள் பார்க்க ஆவலோடிருந்தார்கள். பார்த்தவர்கள் பார்த்து திருப்திகொள்ளவில்லை. அவள் வனகன்னிகைபோல் சிரித்தமுகமும் கருத்த ரோமமும், மடித்த உதடும், வாய்ந்திருந்தாள். அவள் அழகைக்கண்டு மயங்காத மானிடரில்லை. அவளுடைய புத்தி சாதுரியமென்ன குறைந்ததா? நடிசாமர்த்தியம்தான் சாமானியமானதா? பாட்டுகவனம் தாழ்ந்ததா? சகலமும் அவளிடம் பொருந்தி யிருந்தது. இதுகுறையென்று குறிப்பிக்க முடியாமலிருந்தது. இவ்வளவில்லாமல் போனால் நாடக உலகத்தில் அவளுக்கிருக்கும் கீர்த்திகாரணமென்ன? யாருக்குத்தான் இராஜாம்பாளைத் தெரியாது? குழந்தைக்குக் கூடத்தெரியுமே. நாடகநூல்வல்லார் அவளின் சாமர்த்தியத்துக்காக அவளைப் புகழ்ந்து போற்றுகிறார்கள். ஜனங்

கள் வாழ்த்தி வணங்குகிறார்கள். அவள் நடிக்கும் நாடக சாலைகளில் எள்ளுப்போட்டால் எள்விழக்கூடாதபடி கூட்டமிருக்கும். ஜனங்கள் தலையைத்தான் காணமுடியும். அவளிஷ்டப்பட்டபடி ஜனங்களை அழவோ நகைக்கவோ துக்கிக்கவோ செய்துவிடுவாள்.

இத்தகையபுகழ்பெற்றவளை யார்தான் பார்க்க மனமுவ்வாதார்? சிலர் அவள் அழகைப்பற்றியும், சிலர் அவள்சாமர்த்தியத்தைப் பற்றியும், சிலர் அவள் ஆடையைப்பற்றியும் சிலர் அவள் நகைகளைப்பற்றியும் பேசிப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள். அவள் நகைகள் எல்லாம் நவரத்தினங்கள் பதிக்கப் பெற்றன. மற்றவர்களைப்போல் இவள் அவைகளை சிலசமயங்களில் மட்டும் போட்டுக்கொண்டு மற்றவேளைகளில் பேழையில்ப்பெய்து பாதுகாப்பதில்லை. எல்லாவற்றையும் எப்பொழுதுமே போட்டுக்கொண்டிருப்பாள்; அவள் பொய்நாணயங்களைக் கண்டதே கிடையாது. இத்தகைய ஒருவளைக்கண்டு ஸ்திரீகளில் சிலர் பொறாமைகொள்வார்கள். சிலர் புகழ்வார்கள்.

இந்தக் கல்பதக்கம் இவளுக்குக் கிடைத்தவிதம் மிகவும் விநோதமானது. ஒருஜமீன்தார் இவள் சதாரத்தில் வேடந்தரித்து நடித்ததைக்கண்டு அவள்மேல் அடங்காக்காதல் கொண்டுவிட்டார். அவர் தம்காதலை இரகசியமாய் ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை. புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவில்லை. அவள் நாடகமாடும் இடத்திற்கெல்லாம் இவரும் போய்க்கொண்டே யிருந்தார், தன்னைக் கலியாணம் செய்துகொண்டு தன்னுடன்வந்து விடும்படி கேட்டுக்கொண்டார்.

ஜமீன்தாரின் மாமன், தாயார், கல்யாணத்துக்கு தக்கருடும்பதில் பெண்பார்த்திருந்தார்கள், அவர்கள் இதைக்கேட்டும் கண்டும் கோபங்கொண்டார்கள். இராஜாம்பாளும் மிகவும் நல்லதனமாய் நடந்து கொண்டாள். தனக்கு அவர் மேல் பிரியமில்லை யாதலால் கல்யாணத்தைப்பற்றிப் பேசுவதில் பயனில்லை யென்று சொல்லியனுப்பிவிட்டாள்.

ஜமீன் தன் தாயிடம்போய் இராஜாம்பாள் மீது நான்காதல் கொண்டேனென்றும், என் காதலை அவள் ஒத்துக்கொள்ளாது போனளென்றும் சொல்லி விசனப்பட்டான். அந்த அம்மாள் தன்மகன் ஆசைகொள்ளும்படி அழகுவாய்ந்த ஸ்திரீ இரத்தினத்தைப் பார்க்க பாக்கியம் வேண்டுமே யென்றேங்கி யிருந்தாள்.

கும்பகோணத்துக்கு ஒரு முறை அந்தம்மாள் போயிருந்த பொழுது இராஜாம்பாளைப் போய்ப்பார்த்தாள்.

அம்மா என்மகன் உன்னை கலியாணம் செய்துகொள்ளப்பிரியப்பட்டும் நீ அதற்கு சம்மதியாது போனது எனக்கு சந்தோஷம். ஏனென்றால் நாங்கள் தலைமுறைதலைமுறையாக எங்கள் பந்துக்களிலேயே பெண் கொடுத்தும் வாங்கியும் வருவது வழக்கம். நீ சம்மதித்திருப்பாயாகில்நாங்கள் என்ன செய்யமுடியும்? நீ நடந்துகொண்டமாதிரிஎனக்கு மிகவும் திருப்தியைக்கொடுத்திருக்கிறது. உன் மேன்மையான குணத்திற்காக நான் உனக்கு எங்கள் குடும்பத்தில் நெடுநாளாக விருக்கும் கல்பதக்கத்தைத் தருகிறேன். இதை மிகவும் ஜாக்கிரதையாய்க் காப்பாற்றவேண்டும். உன் சௌந்தரியத்திற்கு ஈடானது இது. நான் அணிந்து கொண்டிருந்து பயனென்ன !'' என்று சொல்லிக்கொடுத்துவிட்டாள்.

இச்சமாசாரம் வெளியானது பலர் பல விதமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒரு கூத்தாடிப்பெண்பிள்ளைக்கு லம்சவம்சமாக இருந்து வந்த நகையைக்கொடுப்பார்களா? இதென்ன அவிவேகம்" என்று பல பெரியகுடும்பத்தார்கள் சொல்லி விசனப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இராஜாம்பாள் இதை எப்பொழுதும் அணிந்து கொண்டேயிருப்பாள். இதைப் பார்ப்பதற்காக இராஜாம்பாளைப்பார்க்க பல ஸ்திரீகள் அடிக்கடி வருவார்கள். இவளும் அதை அவர்கள் பார்த்துக் களிக்க சந்தோஷமடைவாள்

சென்னையில் வந்திறங்கின காலையில் பலநகைகள் அவளணிந்து கொண்டிருந்தாளேனும் அவைகளெல்லாம் சூரியன் முன் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் போல் இந்தப்பதக்கத்தின் முன் மங்கியிருந்தன. சகல ஜனங்களும் அதன் மேலே கண்ணாயிருந்தார்கள்.

சோமஸ்கந்தனுக்குத் தெரியாதவர்களில்லை. தோட்டி முதல் தொண்டைமான் வரையிலும் சகலரையும் தெரியும். சோமஸ்கந்தர் இராஜாம்பாளை திருச்சிறுப்பள்ளியில் அவளது பாட்டுக்கச்சேரியில் பார்த்து அவளுடன் பேசியிருக்கிறார். இராஜாம்பாள் ஒரு முறை கண்டிருந்தாலும் அவரை மறக்கமாட்டாள், சோமஸ்கந்தர் அதிக தைரியமுள்ளவர். அவர் மனதில் ஏது தோன்றினாலும் அதைச் செய்துவிட்டுத்தான் வேறு வேலையை கவனிப்பார். கையில் வெற்றிலைபாக்கு பிடித்து இராஜாம்பாளறைக்குப் புறப்பட்டார். இவர் போகும் மாதிரியையும் இருக்கும் மாதிரியையும் கண்டவர்கள் இவரை உட்பிரவேசிக்கத் தடைசெய்யாமலிருந்தார்கள். இவரைக் கண்டதும் அவள் மரியாதைசெ

ய்து அழைத்தாள். பக்கத்திலமர்ந்து பதக்கத்தைப்பார்த்து ப்புகழ்ந்து புகழ்ந்து வாய்ஓய்ந்து நின்றார்.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்தவள் கடைசியாக, "இத்தகைய பதக்கம் எங்காவது பார்த்திருக்கிறீரா?" என்று வினவினள்.

"ஜோதிமயமானது இதற்கிணையானதிதுதான். இதற்கு விலைமதிப்பு யார்தான் போடுவார்கள்? இருக்கட்டும் இது காணாமலாவது திருட்டாவது போய்விட்டால் என்னசெய்வாய்."

ஆ! அதென்ன? எப்படி உயிர்போலல்லவாயிருக்கிறது? ஜாக்கிறதை ஜாகிறதையென்று நாமிருந்தால் தான் பயமும் அதிகம். என் திருகுசுரை ஒன்றுகூட இதுவரைக்காணாமல் போனது கிடையாது. என் வேலைகாரியிடம் என்உயிரையே ஒப்புவித்திருக்கிறேன். இதென்ன பிரமாதம். திருட்டுப் போவதும் ஒரு விதத்தில் என்னைப்போன்றவர்களுக்கு நல்லது. நகைபோய்விட்டால் அனேக நாள்கள் பத்திரிகைகளில் இத்திருட்டைப்பற்றிய பிரஸ்தாபமிருக்கும். நாடகக்காரியாகிய எனக்கு இது ஒரு விசேஷ விளம்பரமல்லவா? என் நகையைத்திருட ஒருவருமில்லையென்று விசனிக்கவும் செய்கிறேன்.

"நல்லகாலமிருக்கிற வரையில் யாதொரு குறைவும் உண்டாகாது. நீ விசனப்படுவதும் ஆச்சரியமாயிருக்கிறது

மற்றைய நாள் ஓட்டலில் திருட்டுத்திருட்டு என்ற பேச்சு பிரமாதமாயிருந்தது. இப்பதக்கமும் வேறு சில நகைகளும் இராஜாம்பாளுடையது திருட்டுப் போயிற்று. இத்திருட்டில் சோமஸ்கந்தர் பெயரும் வெளிவந்தது,

நாராயணசாமி ரவுண்ட் மேஜையண்டை போய சோமஸ்கந்தருக் கெதிரில் உட்கார்ந்து கொண்டார். சற்றுபேபரைப்பார்த்து விட்டு;

மிக்க மரியாதையாய், ஐயா உம்மிடம் ஒருபாக்கு இருக்குமா? என்றார்.

"இல்லையே வாங்கி வரச்சொல்லுகிறேன்" என்றார் சோமஸ்கந்தர்.

"சரி-உம்மிடத்தில் இரகசியமாய்ப்பேசவிரும்புகிறேன்.

"மிக்க அவசரமா?"

"ஆம்-அவசியம்—இவர்களிருவரும் போகுமிடத்திற்குப் போம் வந்துவிடுகிறேன்."

"ஒரு ஸ்திரீமுன் செல்ல தொடர எனக்குசந்தோஷம் தான்"

"எப்பொழுதும் கேலியா? இது சமயமில்லையென்பது இந்த ஸ்திரீ சொல்லப்புகும் விஷயத்தால் விளங்கும்."

அம்மணி திருட்டைப்பற்றிச் சொன்னாள். சோமஸ்கந்தர் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் அதைக்கேட்டபிறகு விசனமுள்ளவராகவாவது, பயந்தவராகவாவது தோற்றவில்லை.

"இதுபிரமாதமானது பதக்கத்திலிருந்த நடு வைரக்கல் லே போதுமே என்னவிசேஷமானது!"

நாராயணசாமி வந்து சேர்ந்தார், "இத்திருட்டுப் போவதற்கு முன் நீர் அந்த அறையிலிருந்து வந்ததை அம்மணி பார்த்தாளாமே! அதுண்மையா? என்று கேட்டார்.

சோ:—ஆம் மெத்தைப் படியில் இருவரும்சந்தித்தோம் உடனே நான்பிசகாய் அந்த ரூமுக்குப் போயிருந்ததாகச் சொன்னேன்."

நா:—ஏனம்மா! இதை நீர் சொல்லவில்லையே.

அம்:—அவர்சொன்னதுஎனக்கு விளங்கவில்லை.

சோ:—நான் சொல்வது கோபாலையருக்குத் தெரியும் இந்த ரூமில்நான் சில தினங்கள் இவர்கள் வருமுன் இருந்தேன். நான் வந்து கொண்டிருக்கும் பொழுது எப்பொழுதும் போல என்கால் அந்த ரூமுக்குப்போனது."

நாரா:—கதவு பூட்டப்பட்டிருந்ததா.

சோ:—மன்னிக்கவேண்டும். திறந்திருந்தைப் பார்த்தேன்.

நாரா:—ஏனம்மா! நீர் ரூமைப் பூட்டி விட்டுப் போகவில்லையா. ?

அம்:—நான் பூட்டினதியாபகம் தானிருக்கிறது.

சோ:—ஏதோ ஞாபகமறதியாய்ச் சொல்லுகிறாய். நான் போகையில் திறந்திருப்பதைப்பார்த்தேன். நான் ஏதோயோசித்துக் கொண்டே கதவைப்பிடியைத்திருப்பினேன். புடவை முதலானதுகள் என்கண்களில் பட்டதும் இது நம்முடையரூம் அல்ல என்றுஞாபகம் வந்தது.

நாரா:—ரூமிலில்லாதிருந்தது எத்தனை காலமிருக்கும்.

அம்:—இப்படிபோனேன். இப்படிவந்து விட்டேன். நீர் தான் காலம் சொல்லவேண்டும்.

நாரா:—இதற்குள் திருடன் திருடமுடியாது. நாராயணசாமி சோமசுந்தரனிடம் மிகவும் மரியாதையாய் "அதற்குப் பிறகு நீர் எங்குபோனீர் ?" என்று கேட்டார்.

சோ:—நேராய் இங்கேயே வந்துட்கார்ந்தேன்.

நாரா:—ஐயா! இனி இவ்விஷயத்தைப் பற்றி உமக்கு தொந்திரவு கொடுக்க வேண்டியதில்லை யென்று நினைக்கிறேன்.

சோ:—அதென்ன அப்படி சொன்னீர்? இது முக்கியமான விஷயம். திருட்டுப்போன சொத்துக்கள் விலைமதிப்புக் கடங்காதன. அவைகள் காணுமற்போவதற்கு சற்று முன் நான் ஆுமிலிருந்தது என்துர்ப்பாக்கியம்தான். என் பேரில் சந்தேகமிருக்காதென்பது எனக்கு உறுதி. இந்த விஷயத்தைப்பற்றி நீர் விசாரிக்கு முன் நீர் என்னை சோதனைசெய்து விடும்.

கோபாலய்யர் அது கூடாதென்றார்,

நாரா:—அவர் சொல்லுவது சரி. அப்படி செய்வது மாமூலிலிருந்து வருகிறது.

கோபாலய்யர்! நீரும் இந்த ஸ்திரீயும் போங்கள் நான் வருகிறேன்.

சோமஸ்கந்தர் சோதிக்கப்பட்டார். அவரிடம் ஒன்று மகப்படவில்லை. ஓட்டல் வேலைக்காரர்களின் சாட்சியத்தால் இவர் நகைகளை எங்கும் கொண்டுபோயிருக்கமுடியாதென்று தெரிந்தது. அவர்நேராய் ஹாலுக்கு வந்தார். அக்காலமுதல் நாராயணசாமி வரும் வரையிலும்எங்கும்நகரவில்லை.

சொக்காயிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து கவரில் போட்டு தபாலுக்குஆளிடம் கொடுத்தனுப்பினர். அந்த ஆள் அதிலொன்றுமில்லை யென்பதைப்பற்றி உறுதியாய்ச் சொன்னன்.

நகைகளை எடுத்து ஜன்னல் வழியாய் ஒரு உளவாளிடம் போட்டிருக்கலாமோ? ஏது ஒரு போலீஸ்காரன் பாரா செய்துகொண்டிருந்தான். அவன் அரைமணிநேரத்துக்குள் ஒருவரும் போகவில்லை, தானிருக்கும் பொழுது ஒன்றும் கீழெறியப்படவில்லை யென்று சொன்னான்,

நாராயணசாமி துரிதமாயும் சாதுரியமாயும் விசாரணையை முடித்தான். ஓட்டலிலுள்ள மற்றவர்கள் இத்திருட்டைப்பற்றி ஒன்றும் சொல்லக்கூடவில்லை.

இராஜாம்பாள் எங்கோ வெளியில் போயிருந்தவள் திரும்பினாள்; அவள் அம்மணியைக் கூப்பிடவேயில்லை.

கோபாலய்யர் இராஜாம்பாளிடம் வாடின முகத்துடன் போனார்.

"அம்மா! ஒரு சிறிய இரகசியம்" என்றார்.

அவள் யுக்தியால் நடந்ததை எப்படியோ அறிந்துகொண்டு "என்ன? நகைகள் திருட்டுப்போயினவோ? என்றாள்.

கோபாலய்யர் தலையை மட்டும் அசைத்தார், ஒன்றும் பேசவில்லை. முன் சென்றார். இராஜாம்பாளும் பின்தொடர்ந்தாள். ஒரு அறைக்குள் பிரவேசித்தார்கள்.

நாராயணசாமி மிக்க திருப்தியாய் அமைதியுடன் உட்கார்ந்திருந்தார். சோமஸ்கந்தர் கூரையைப்பார்த்துக்கொண்டிருந்தார். அம்மணி கண்ணீர் வடித்துக்கொண்டு விம்மி விம்மி அழுதுக்கொண்டும், முகத்தில் கைவைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள்.

இராஜாம்பாள் அம்மணியிடம் போய் அவளை தைரியப்படுத்தினாள். "ஏன் அழுகிறாய்? நம் சொத்து எங்கும் போகாது என்றாள்.

அம்மணி மறுபடியும் அதிகமாய் அழவாரம்பித்தாள். திரும்பினதும் நாராயணசாமியின் கண்கள்மாறிமாறி பெண் மேலும் தன்மேலும் விழுவதைக்கண்டதும், கோபத்துடன் "இவைகளைத் திருடினது அம்மணி என்று யாராவது, சொன்னார்களோ?" என்றாள்.

அம்மணிமேல் இராஜாம்பாள் மீதுள்ள விருப்பதால் அவள் நகைபோனதையும் மறந்துவிட்டாள். அவள் நின்ற மாதிரி மிக்க விநோதமாயிருந்தது.

அவள் கண்கள் ஜ்வலித்தன. இதைக் கண்டதும்கோபாலையர் மெதுவாக அப்புறம் போனார். இவரும் நாராயணசாமியும் இந்தஸ்திரீயைப்பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். நாராயணசாமி உட்கார்ந்தமாதிரியே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்.

மெதுவாய், "இவள் சொல்வதைக் கேளுங்கள்" என்று நாராயணசாமி சொன்னார்.

"சரி" என்று அவரிடமிருந்து திரும்பி அம்மணியை மறுபடியும் தைரியப்படுத்திக்கொண்டு, அம்மணி! கண்மணி! என்ன நடந்ததம்மா" என்றாள்.

அம்மணி கண்ணைத்துடைத்துக் கொண்டு தெரிந்ததை அழுதுகொண்டே சொன்னாள்.

இரா;—அம்மா நீ கதவு சாத்தினது நிச்சயம்தானா?

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090



அம்:—முதலில் உருதியாய்த்தானிருந்தேன். சந்தேகமாயிருக்கிறது. நான் பூட்டியிருந்தால் அவர் எப்படி உள்ளே போகமுடியும். ?

இரா:—உன்பேரில் தப்பிதமொன்றுமில்லை. ஆகையால் நீ அழவேண்டாம். எல்லாம்சரியாய் விடும் என்று எனக்குத் தோன்றுகிறது. அந்நகைகளெல்லாம் கிடைத்துவிடும். நீ தைரியமாயிரு.

சோம :—(மிகவும் தீவிரமாய்) அப்படியே கிடைத்துவிடவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். அது கிடைப்பதற்கு நாளுெரு கைகொடுக்கிறேன். பார்க்கலாம்.

இரா:—உமக்கு நான் இதற்கு என்ன கைம்மாறுதரப்போகிறேன் நானெப்படி ஒருகை கொடுப்பேன்? அனேக வந்தனமையா. ?

சோம:—எனக்கு வந்தனம் செலுத்தவேண்டாம். உனக்காக அவ்வளவல்ல. எனக்காகவே இந்தக்காரியத்தில் கலந்திருப்பது எனக்கு மிகவும் வெறுப்பாயிருக்கிறது.

இரா :—இதில் நீரெங்கே சம்பந்தப்பட்டிருக்கிறீர்?

சோ:—"உலகமென்ன சொல்லும்? நானே ஏழை. இதுவரையிலும் என்னை திருடனாக ஒருவரும் கருதவில்லை. சாட்சியத்தில் என்னை சம்பந்தப்படுத்தி யிருக்கிறதல்லவா?"

என்று ஒன்றையும் மறைக்காமலும் மிகைபடுத்தி கூறாமலும் சொன்னார்.

நாரா:—இவர் நகையை யெடுத்திருப்பது, அசம்பாவிதமானது அசாத்தியமான காரியம்.

இரா:—'நீர்சொல்லி அது எனக்குத் தெரியவேண்டியதில்லை' என்று கடூரமாய்ச் சொன்னாள்.

அவளுக்கு நாராயணசாமியைப் பிடிக்கவில்லை. இதை நாராயணசாமி அறிந்துகொள்ளக் கூடவில்லை. அவர் புராணத்தை சொல்லவாரம்பித்தார்.

“சோமஸ்கந்தரை அவர் ரூமைவிட்டு வந்தமுதல் இது வரையில் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். அவரை சோதித்தும் பார்த்தோம். அவரே சோதித்துப்பார்க்கும்படி கேட்டுக்கொண்டார். நகைகள் ஜன்னல் அல்லது கதவு மூலியமாய் வெளியேறி யிருக்கவேண்டும். போலீஸ்காரன் ஜன்னல்வழியாய் வரவில்லையென்கிறான். சோமஸ்கந்தர் கதவுவழியாய் அவைகள் வரவில்லையென்கிறார்.”

இரா:—இவ்வளவுதான்? நகைகளிழந்ததால் பயித்தியம்பிடித்துவிடும்போ லிருக்கிறது. அவைகளை எப்படியாவது சம்பாதித்துவிடுவேன். இதைப்பற்றி பத்திரிகைகளெல்லாம் எழுதும். இதொன்றும் வேண்டாம். நம்நால்வரைத் தவிர இதரர்களுக்கு இச்செய்தி தெரியவேண்டாம். இது முடியுமா?

கோ:—உங்களுக்கு இஷ்டமானால் அப்படியே என்று முணுமுணுத்தார்.

நாரா:—ஐயா! திருடனைக் கண்டுபிடிப்பது என்கடமை

இரா:—கூடுமானால் கண்டுபிடியும். 1000 ரூ இனும் தருகிறேன். உம்மை சும்மாயிருக்கச் சொல்லவில்லை. நான் விரும்புவதெல்லாம் சமாதானமாயும் நிதானமாயும் காரியங்களை நடத்தவேண்டுமென்பதே. வீண் காபரா வால் என்ன பயன்? மெதுவாய்த் திருடனைப் பிடியும் 1000 ரூ தருகிறேன்.

நாரா:—திருடனையா, திருடியையா?

இராஜாம்பாள் கோபத்துடன் விழித்தாள். அவள் கோபாவேசத்தை நடித்துக்காட்டுவாளோ என்ற பயம் நீங்கிற்று. கோபத்தை அடக்கிக்கொண்டாள். "நகைகண்டுபிடிக்கப்படும் வரையிலும் நீர் வீணை பீதியுண்டாக்கக் கூடாது" என்றாள்.

நாரா:—செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

சோ:—என்னைப்பற்றி யென்ன? எனக் கென்ன சம்பந்தம்.

இரா:—ஜனங்கள் என்ன வோசொல்லிக்கொண்டு போகட்டும். உமக்கென்ன?

சோ:—நான் இதில் சம்பந்தப்படவில்லை யென்பது நீ நம்புகிறாயல்லவா?

இரா:—தடையென்ன? ஒருவிஷயம் ஒருபகாரம் மட்டும் நீர் செய்யவேண்டும் உடனே செய்யவேண்டும். உமக்கு நீலாம்பாளைத் தெரியுமோ யில்லையோ.

சோ:—எனக்கு நிரம்ப சிநேகிதமாயிற்றே.

இரா:—நிரம்பசரி. அவளை நான் ஒருவாரத்துக்கு முன் பார்த்தேன். நகைகளைப்பற்றியும் எதேச்சையாய் பேசிக்கொண்டிருந்தோம். திருட்டுக்கண்டு பிடிப்பதில் மகாநிபுணன் என்று ஒரு பெயரை எழுதிக்கொடுத்தாள். அது நன்றாய் ஞாபகமிருக்கிறது. பவாநந்தர் 71, மலையப்பன் தெருவு.

சோ:—அவரைப்பார்த்துப்பின்?

இரா:—அவரை உடனே இங்கு அழைத்துவாரும். உம்மேல்சந்தேகமிருந்தால் உம்மை அனுப்புவேனா? உம் கை கொண்டு உம் கண்ணையே குத்திக்கொள்ளச் சொல்வேனா?

சோ:—உன் பக்ஷத்தை என்றும் மறக்கமாட்டேன். இதற்குபிரதிசெய்ய எக்காலமுடியுமோ? நான் இவர்நகைகளையும்திருடனையும் கண்டுபிடித்துவிடுவார் என்று நம்புகிறேன்.

இரா:—அவரை நேராக என்னறைக்குக் கூட்டிக்கொண்டுவாரும்.

இராஜாம்பாளும் அம்மணியும் போனார்கள். இராஜாம்பாள் ஸோபாவில் போய் உட்கார்ந்தாள்.

இது என்ன காட்சி? போலீஸ்இனிஸ்பெக்டர் பிரமாதமாக தன்னை நினைத்துக்கொண்டு நடிப்பதும் சோமஸ்கந்தர் தன்னைப்பற்றி சமுசயங்கொள்ளக்கூடாதென்று கேட்டுக்கொள்வதும் ஒட்டலையர் ஓட்டலைப்பற்றி முணுமுணுத்துக்கொண்டிருப்பதும் சரிசரி !! என்று மனதார சிரித்துச்சிரித்து ஓய்ந்தாள்.

அம்:— அம்மா கல்கல்லான நகைகள் விலைமதிக்கக்கூடாத நகைகள் !!

சோ:—அவைகள் திருட்டுப்போயிருப்பதாக எனக்குத்தோற்றவில்லை. இதற்குப்பிற்காலத்தில் ஒரு வேளை விசனப்படுவேனோ என்னவோ? அவைகள் பொயேவிட்டன என்று எண்ணவேமாட்டேன். அவைகள் கிடைத்து விடுமென்றே நினைக்கிறேன். உனக்கென்ன.தோன்றுகிறது ?

அம்மணி முகம்சிவந்து குளறிக்கொண்டு அம்மா உங்களுக்குத்தான் நன்றாய்த் தெரியும் என்றாள்.

இரா:—எனக்கா? உனக்குத்தெரிந்ததைவிட எனக்கா தெரியும் நானே அதைத்திருடினேனென்று நினைக்கிறாய்?

உடனே அவளின் முகம் மாறுதலடைந்தது. சிரித்துக்கொண்டிருந்தவள் திடீரென விம்மிவிம்மி அழுதாள். "அந்தோ என்ன அழகான பதக்கம். அதை எப்பொழுது காணப்போகிறேன், எப்பொழுதாவது காண்பேனா" என்றாள்.

அம்மணி:—என்ன அம்மா இப்பொழுது சொன்னீர்களே.

இரா:—நான் இப்பொழுது என்னமோ சொன்னேன். நீ அழுகிறாய் சிரிக்கிறாய் உன் இஷ்டம்போல் நான் அப்படி செய்யப்படாதோ இருக்கட்டும் நீ அவ்வளவு அஜாக்கிரதையாய் இருந்திருக்கக்கூடாது(அம்மணி ஓலமிட்டு அழ ஆரம்பித்தாள்.) அழாதே அம்மா நீ ஒரு தப்பிதமும் செய்யவில்லை. இழந்துபோன ஒருவஸ்துவை உத்தேசித்து அழுவதில் பயனென்ன. மேலும் நாம் கவனிக்கவேண்டியவிஷயங்கள் பல இருக்கின்றன. நாடகத்திற்குப் போய்ச் சேரவேண்டும் என்று பதக்கத்தை அணிந்துகொள்ளாமல் நடிக்கவேண்டும். ஒருவிஷயம். இன்று ஜனங்கள் என்னைப் பார்க்கிறார்களா நான் நடிக்கிறதைப் பார்க்கிறார்களா அல்லது என்நகையைப் பார்க்கிறார்களா. அல்லது என் ஆடையைப் பார்க்கிறார்களா என்று தெரிந்துவிடும். எவைகளெல்லாம் காணாமல் போயிருக்கின்றன.

அம்:—ஒட்டியாணம், அட்டிகை பதக்கம் புலாக்கு.

இரா:—இவ்வளவுதானா?

இருந்தாலும் திருடன் நல்லதைத் தேர்ந்து எடுத்திருக்கிறான். என்னிடத்தில் இதேமாதிரி கெம்பு நகைகள்

இருக்கின்றன. அவைகளை அணிந்துகொள்கிறேன்முகத்தை த்திருப்பினாள். நிலைக்கண்ணாடியில் தன் பிரதிபிம்பத்தைக் கண்டாள். அம்மணீ முகம் "எவ்வளவு விகாரமாய் இருக்கிறது" என்றாள். கதவையாரோ இடிக்கும் சத்தம் கேட்டது.

அம்மணி கதவைத் திறக்க விரைவாய்ச் சென்றாள். இராஜாம்பாள் "பொருதிரப்போம்" என்று மெல்லச்சொன்னாள். உடனே முகத்தை அலம்பித் துடைத்துக் கொண்டு கண்ணுக்குமை நீட்டி நெற்றிக்கு சாந்திட்டு தலையைக்கோதி அம்மணீ திரக்கலாம், என்றாள்.

கதவு திறந்ததும் பவாநந்தர் உட்பிரவேசித்தார். அவரைக்கண்டதும் வரவேண்டும் வரவேண்டும் என்று நல்வரவு கூறினாள். பவாநந்தர் உட்கார்ந்து கொண்டதும் இராஜாம்பாள் பேசத்துவக்கினாள்.

"ஐயா நீலாம்பாள் தங்களைப்பற்றி மிகவும் சிலாகித்துப்பேசக் கேட்டிருக்கிறேன். தங்கள் சாமர்த்தியம் அசாத்தியமானதாமே."

"இல்லை சாமர்த்தியமன்று அதிஷ்டம் துப்பறியும் வேலை இதர வேலைகளைப் போலத்தான் இதிலும் புத்தியும் அதிஷ்டமு முள்ளவன் பாக்கியசாலி. உம்மபிப்பிராயமென்ன ஐயா" என்று நாராயணசாமியைக் கேட்டார்.

"அது சரியில்லை என் அநுபோகம் ஒவ்வொன்றையும் பாகுபடுத்திப்பின்னேக்கும்வழி."

சரிதான் ஒவ்வொன்றிலும் அவரவர்களினிஷ்டம். நீர் பாகுபாட்டைவிரும்புகிறீர். நான் அதிஷ்டத்தை விரும்புகிறேன்.

இப்படி வேடிக்கையாய் வாதாடிக்கொண்டிருக்கையி லேயே பவாநந்தர் அறையிலுள்ள ஒவ்வொன்றையும் குறிப் பாய் பார்த்துக்கொண்டார். ஆசாமிகளையும் கவனித்தார்.

பவா:—அம்மா ; நீர் வெளியேபோயிருக்கும்பொழுது இச்சாமான்கள் இடம்மாறியிருக்கின்றவல்லவா?

அம்:—இல்லை. அதெப்படி ? "

பவா :—நீ கதவைப் பூட்டிக்கொண்டு சென்றதுண் மை. சோமஸ்கந்தர் இங்குவந்து கொண்டிருக்கும்பொழுது இத்திருட்டைப்பற்றி விவரமாய்ச்சொன்னார் "

அம் :—முதலில் நான் உறுதியாய்த்தானிருந்தேன்.

பவா :—பிறகு ஏனம்மா வேறுவிதமாக மாற்றிவிட் டீர்.

அம் :—ஏனென்றால் சோமஸ்கந்தர் போகும் பொழுது திறந்திருப்பதைப்பார்த்தார்.

பவாநந்தர் எழுந்து படுக்க அறையைப்பார்த்து [illegible] அம்மா ! இந்த அறையில் அநேகநகைகள் அப்படியே [illegible] விட்டுப் பொய்விட்டார்.

இரா :—" இருந்தாலும் நல்ல தெல்லாம் [illegible]

பவா:—" ஆமாம் அப்படிதான் சோமஸ்கந்[illegible] ஞர். கல்பதக்கமும் இன்னும் இரண்டொரு [illegible] போயினவாம்.

இரா:—எல்லாம் விலைமதிக்ககூடாதவை.

பவா:—அதுசரிதான். திருடன் ஏன் எல்லா[illegible] யும் எடுத்துபோகவில்லை. அவ்வளவுதின் [illegible] பிறகு எவ்வளவுதான் கொண்டுவர முடியுமோ அவ்வளவு கொண்டுவராமலா இருப்பான்.

இரா:—அவகாசம் வேண்டாமா?

பவா:—நீர் சொன்னதும் சரிதான். இன்னம் சிலவற்றையாவது எடுத்துச் சென்றிருக்கலாம்.

ஜன்னலண்டை போனார். கதவு திறந்திருந்தது. ஒரு சாவி தொங்கிக்கொண்டிருந்தது. அதைத் தொட்டிருந்தால் கீழே வீழ்ந்திருக்கும். மிகவும் ஜாக்கிரதையாய் அதை எடுத்தார். அது ஒரு ரூமின் சாவியாயிருந்தது. ஒருதகடுகூட விருந்தது. அத்தகடில் ஒரு நம்பர் போடப்பட்டிருந்தது.

"இது காணமற்போனசாவி" என்று உடனே இராஜாம்பாள் சொன்னாள். "அம்மணி! இரண்டுநாளைக்கு முன் சாவி காணமல் போய்விட்டதாக நான் உன்னிடம் சொல்லவில்லையா? அதைக் கையோடு நாடகசாலைக்குக் கொண்டு போனேன். அதை ஆடை உடுத்திக்கொள்ளும் பொழுது கீழ் போட்டிருக்கவேண்டும். அதைத் தேடும்படி சொன்னேன்."

பவாநந்தரின் முகத்தில் ஆசாபங்கத்தால் ஒரு மாறுதல் தோன்றிற்று. அவர் சாவியையே பார்த்துக்கொண்டிருந்தார். இராஜாம்பாள் சாவிக்காக கைநீட்டியிருப்பதையும் அவர் கவனிக்கவில்லை. சற்றுப்பொருத்து சாவியைப் பெற்றுக்கொண்ட இராஜாம்பாள் நம்பரைப்பார்த்து,

"இது என்னுடையதுதான் தடையில்லை. இது இங்கிருக்கவேண்டிய விதமெப்படி?" என்றாள்.

பவா:—அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

சோம:—அதைக் கண்டுபிடிப்பதில் என்னால் கூடியசகாயம் செய்ய நான் தயார்.

பவா:—வேண்டுமென்ற பொழுது பார்த்துக்கொள்கிறேன். நான் கோபாலையரிடம் பேசவேண்டும். உம் நகைகள் காணமற் போய்விட்டன என்று ஏங்கவேண்டாம்."

வார்த்தைகளை சொல்லிக்கொண்டே வெளியேறினார் பவாநந்தர்.

நாராயணசாமி மெதுவாய் சோமஸ்கந்தரிடம் "என்ன நினைக்கிறீர்? இந்த மனிதன் முழுமோசம் அவ்வளவும் ஏமாற்றம். இவருக்கு இக்கேஸில் ஒன்றுமே தெரியவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது, என்று சொன்னார்.

சோ:—எனக்கென்னவோ அப்படித்தான் தோன்றுகிறது.

இராஜாம்பாள் "நான் அவரிடம் மிக்க மதிப்புள்ளவள். நான் போகவேண்டும். போய்வருகிறீர்களா? என்று சொல்லி எழுந்தாள்.

பவா:—கோபாலையரே! யாராவது இந்த ரூம்வேண்டுமென்று சொன்னால் உடனே எனக்கு செய்தியனுப்பும். ஒருவரிடமும் சொல்லவேண்டாம். மறந்துவிடக்கூடாது."

சில தினங்களுக்குப்பின் இராஜாம்பாள் பவாநந்தர் ஆபீசுக்குபோய், "ஐயா! ஒரு விஷயம். நான் காணமற் போய்விட்டதாகச் சொன்ன சாவி நாடக சாலையில் கிடைத்துவிட்டது. ஜன்னலண்டையிருந்த சாவி வேறு இது தங்களிடம் சொல்லவந்தேன்" என்று சொன்னாள்.

பவாநந்தர்:—"அது எனக்கு முன்பேதெரியும்."

இரா:—அப்படியானால் அப்பொழுதே ஏன் அப்படி சொல்லவில்லை?

இராஜாம்பாள் ஏதோ சந்தேகப்பட்டவள் போல் பவாநந்தரைப் பார்த்தாள். இதை அவர் அறிந்து கொண்டதும் புன் சிரிப்பு சிரித்து.

"நான் அது தக்கசமயம் என்று நினைக்கவில்லை என்றார்.

சற்றுப் பொருத்து இராஜாம்பாள் "நகையைப்பற்றி யென்ன?" என்றாள்.

பவா:—"ஒன்றுமில்லை."

இரா:—என்ன? ஒன்றுமில்லையா? இது உபயோக மில்லாதது என்று விட்டுவிட்டீரா?

பவா:—விடுவேனா? நகைகள் எங்கிருக்கின்றன என்று காட்டக்கூடிய ஒருவனுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இரா:—எவ்வளவு காலமோ.

பவா:—கிடைக்கிறவரையில்.

இரண்டு வாரத்துக்குப்பின் கோபாலையர் பவாநந்தருக்கு சொல்லியனுப்பித்தார். உடனே பவாநந்தர் வந்தார்.

பவா:—யார் அது.?

கோ:—உமாமகேசன்.

பவா:—உமக்குறுதிதானா?

கோ:—ஆம் அவர்தான்,

பவா:—அவரல்ல நான் வேண்டுவது. வருகிறேன்.

பவாநந்தர் போனார். இப்பேச்சு 5 நிமிஷங்கூட நடக்கவில்லை,

அடுத்த முறை பொள்ளாச்சியிலிருந்து ஒரு பணக்காரர் வந்தார். அவர் பட்டணத்துக்கு அதற்கு முன் வந்ததில்லை. இரண்டொரு இடங்கள் அவருக்கு சரிப்படவில்லை. கடைசியாக இந்த ரூமுக்கு வந்தார்.

கோபாலையர் பவாநந்தரைப்பார்த்து " ஐயா ! இவர் ஏதாவது உமக்கு உபயோகப்படுவாரா ? " என்று கேலியாய்க் கேட்டார்.

பவா:—இப்பொழுதென்ன சொல்லமுடியும்? பார்ப்போம். இங்கு ஓட்டலில் ஒரு ஆளாக நான் சில நாட்களிருக்கலாமா. ?

கோ:—தடையென்ன? நீர் உமாமகேசுவரருக்கு உதவியாயிருக்கிறீரா ?

பவா:—ஆம் அவருக்கு சௌகரியங்கள் செய்து உதவியா யிருக்கிறேன். நான் அரைமணிக்குள் இங்கு திரும்பிவருகிறேன்.

பவாநந்தர் வேஷமாறி வந்தார். அவரை அறிந்தவர் " இவரென்ன பவாநந்தர் போலிருக்கிறரே " என்பார். முகச்சாயல் மட்டும் மாறாமலிருந்தது. அவரது நடவடிக்கைகள் மாதிரிகள் வெவ்வேறாயிருந்தன.

இந்த ஆசாமி பிறந்த காலமுதல் சேவகனுகவேயிருந்தவன். அவன் கைகளையும் தலையையும் அசைத்துப்பேசுவது, இவன் சேவகத்தொழிலுக்கு பிறந்தவன் என்று சொல்லும்படியாயிருந்தது.

கோபாலையர்:—இரங்கசாமி ! இது புது ஆள் பார்ப்போம். மேலே புதிதாய் ஒருவர் வந்திருக்கிறரே. அங்கேயிருக்கட்டும் அவன்.

இரங்கசாமிக்கு எஜமான் சொன்னது விருப்பமாயில்லை. இவன்தானே அவருக்கு ஊழியம் செய்து தக்க இனும் பெறலாமென்று மனப்பால் குடித்திருந்தான். கோபாலையர் புதிய சேவகன் மிக்கயோக்கியன் என்று உமாமகேசுவரரிடம் சிபார்சு செய்தார்.

உமாமகேசுவரர் சாப்பிட்டபின் நாடகம் பார்க்கச் சென்றூர். பவாநந்தனையும் அழைத்துக்கொண்டு போனூர். நாடகம் பார்த்து திரும்பியபின் சேவகனைப் பார்த்து காலை காலை 6 மணிக்குத்தயாராயிருக்கவேண்டும் என்றூர். "மேலும் நான் தூங்கினல் சாமானியத்தில் எழுந்திருக்கமாட்டேன். நான் பதில் சொல்லும் வரையிலும் கதவை இடித்துக் கொண்டே யிருக்கவேண்டும்" என்று சொன்னூர்.

பவாநந்தர் அங்கே காத்துக்கொண்டிருந்தார். கோபாலையர் அரைமணிகருப்பின் மேலேவந்து "என்னசெய்யப்போகிறீர்?" என்று கேட்டார்.

பவா:—கன்னக்களவு இந்த அறையின் சாவி வேண்டும்.

கோபா:—சாவிக்கெங்கே போகிறது. எனக்குத் தெரிந்தமட்டில் இவருக்கும் திருட்டுக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? அவர் புதிதாய் ஊரிலிருந்து வந்திருக்கிறூர்.

கோபாலையர் தமக்கிருந்த சந்தேகத்தை சொல்லமுடியாமல் உளறினூர்.

பவா.—"ஐயா! நான் ஒரு உறுதியின் மேல் செய்கிறேன். நீர் ஓட்டல் ஓட்டலிலுள்ளவர்கள் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டியதுதான். நாராயணசாமியும் என்னுடன் இருக்கும் விஷயத்தில் உமக்கு திருப்திதானே. சந்தேகமில்லையே அவருக்கு சொல்லியனுப்பும்."

ஏதேச்சையாய் அவரே வந்தார். அவரிடம் பவாநந்தர் இவர் யுக்தியை யெல்லாம் சொன்னார். நாராயணசாமி அதற்கு குறுக்கு சொன்னார். பவாநந்தர் மீசையை எடுத்திருந்ததால் அவனைக் கண்டுபிடிப்பதே கஷ்டமா யிருந்தது. எல்லாவற்றையும் கேட்டபின் நாராயணசாமி!

எனக்குப் பிடிக்கவில்லை. இந்தமனிதனுக்கும் திருட்டுக்கும் யாதொரு சம்பந்தமு மில்லையென்பதெனக் குறுதி. நான்யோசித்து யோசித்து உண்மையான திருடனைக்கண்டு பிடித்தாயிற்று." என்று சொன்னார்.

என்னசொல்லியும் பவாநந்தர் பிடிவாதமா யிருந்தார் கடைசியாக "என்னவோ பார்ப்போம். பலித்தால் பலிக்கிறது. இல்லாவிட்டால் ஒழிகிறது. இதிலென்ன நஷ்டம். நான் இவரின் சொக்காய் ஜேப்புகளில் இத்திருட்டுக்கு மர்மம் காணலாமென்று நினைக்கிறேன். இது பிசகாய்ப்போய் விட்டால் நஷ்டமென்ன? அப்படி போய்விட்டால் என்னைப்பின் என்னவேண்டுமானாலும் சொல்லுங்கள் என்றார்.

நாராயணசாமி சரியென்று ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அவர் பவாநந்தருக்கு இந்த விதமாய் புத்திகற்பிக்கலாமென் றிருந்தார்.

நாரா:—அவர் தூக்கத்திலிருந்து எழுந்துவிட்டாலென் செய்வது.

பவா:—அவர் எழுந்திருக்கமாட்டார். எனக்கு உறுதிதான். அவரே என்னிடம் சொன்னார். கும்பகர்ணன்தான் தூக்கத்தில்.

நாரா: என்ன மயக்கமருந்தோ? பெருத்த அபாய மிருக்கிறது.

பவா: நாம் போய்நடந்து கொண்டால் பயமேகிடையாது. மேலும் அதிஷ்டமுள்ளவரையில் பயம்கிடையாது.

நாராயணசாமி மேலே பேசப் பிரியமில்லாதவரா யிருந்தார். "நீர் தயாராயிருந்தால் நானும் அப்படியே" என்றார்.

இவர்களிருவரும் மேல்துணி முதலியவைகளை சுருட்டி தூரவைத்தார்கள். இவர்கள் நடவடிக்கைகளை, பயத்துடனும் ஆச்சரியத்துடனும் கோபாலையர் பார்த்துக்கொண்டு நின்றார். நல்லவேளையாய் ஒட்டலில் கூட்டமில்லாதிருந்தது. அதுவும் மாடியில் நிச்சப்தமாயிருந்தது.

பவாநந்தர் சாவியை எடுத்து கதவைத்திறந்தார். கதவுதிறக்கமுடியவில்லை. "கதவுக்கப்புறம் ஏதோவைக்கப்பெற்றிருக்கிறது" என்று பவாநந்தர் நாராயணசாமியிடம் சொன்னார். உள் கைவிட்டு அதை மெதுவாய்த் தள்ளும்." என்று நாராயணசாமியைச் சொன்னார். நாராயணசாமிதம் நீண்டகையை சந்தில் விட்டு தள்ளினார். அடுத்த நிமிஷம் ஏதோ உடைந்தசப்தம் கேட்டது. கதவண்டை ஒருநாற்காலியும் அதன்மேல் தண்ணீர்பானையும் வைக்கப்பெற்றிருந்தது. தண்ணீர்பானை கீழ் வீழ்ந்து உடைந்து போயிற்று.

பவாநந்தர் நாற்காலியை கஷ்டமில்லாமல் அப்புறப்படுத்தி உட்சென்றார். நாராயணசாமியையும் உள்ளே இட்டுக்கொண்டார்.

ஏதாவது சப்தமிருக்கிறதா என்று கவனித்துப் பார்த்தார். கடியாரம் டிக்டிக்என்று அடித்துக் கொண்டிருந்தது. உள்ளறையில் உமாமகேசுவரர் ஆனந்தமாய் குறட்டைவிட்டு உறங்கிக்கொண்டிருந்தார். உடனே பவாநந்தர் லாந்தலைப்பற்றவைத்து உடைந்ததைஎடுத்துச்செல்லச்சொன்னார்.

நாராயணசாமி பவாநந்தர் பொருக்கிக் கொண்டிருப்பதைக்கண்டு கோபமாய் நம் வேலையைப் பார்க்கவேண்டாமா என்றார்.

பவாநந்தர் மிகவும் வணக்கமாய் அவர் எழுந்து பார்க்கும்பொழுது யாதொரு வித்தியாசத்தையும் காணக்கூடாதல்லவா இவைகளை யெடுத் தெரிந்துவிட்டு இந்தப்பானைக்குப்பதிலாய் வேறு பானையை வைப்பதற்குள் அவரின் சொக்காய் ஜோப்பைச் சோதனைச்செய்யும்.

நிமிஷநேரத்தில் பவாநந்தர் வேறொருபானையுடன் திரும்பினார். இதற்குள் நாராயணசாமி சொக்காய் ஜோப்புகளை நன்றாய் சோதனை செய்தார். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஜோப்பிலிருந்து எடுத்து தம் நோட்டில் குறிப்பு எழுதிக்கொண்டு அப்படியப்படியே வைத்துவிட்டார்.

தம்வேலை முடிந்ததும் நாராயணசாமி பவாநந்தரைப் பார்த்து " என்ன மர்மம் கண்டுபிடித்தீர் ? என்று கேலியாய்க்கேட்டார்.

ஜோப்பிலிருந்தன விசேஷமானதொன்றுமல்ல. ஒரு தங்கக்கைகடியாரம், ஒரு மணி பாக்ஸ். ஒரு டைரி ஒருடேப் பொன்றிருந்தது.

டேப்தான் பவாநந்தருக்கு வேண்டியது.

பவா: இதுதான் நான் வேண்டுவது. ஏதாவது சடிதங்களில்லையா?

நாரா: நோட்டைத்தவிர ஒன்றும் காணோம்.

பவா: எங்கே பார்ப்போம்.

அவைகளை பிரித்துப்பார்த்தார். ஒரு நீல கடுதாசியிருந்தது. அதில் குறுக்கும் நெடுக்குமாக இருகோடுகள் சிவப்பிங்கியிலிருக்கின்றன.

வேறொரு குறிப்பும் அதிலில்லை.

இதிலென்ன பிரயோஜனமென்று நாராயணசாமி சிரித்தார்.

இதை பவாநந்தர் கவனியாதிருந்து விட்டார். அவர் குறிப்பாய் அக்கீறுகளையே பார்த்துக்கொண்டிருந்தார்.

அவர் ரூமிலுள்ள கம்பளிகள் நாற்காலிகள் எல்லாவற்றையும் குறிப்பாய்ப் பார்த்தார்.

பவாநந்தரின் சாமர்த்தியம் அசாத்தியமானது என்பது நாராயணசாமிக்குமுதல்முதலாக இப்பொழுது தான்பட்டது.

பவாநந்தர் ஏதோ பிரமாதமான தொன்றைக் கண்டு பிடித்ததுபோல் பெரிய மூச்சு வாங்கினர். முகமலர்ச்சிக் கொண்டார். டேப்பை எடுத்து அக்கீறல்களை அளந்தார். நெடுங்கோடு 10 அங்குலமும் குறுங்கோடு 8 அங்குலமும் இருந்தன.

பவா: ஐயா! ஜமக்காளத்தை அளந்துபாரும் சீக்கிரம் இப்பேச்சில் மரியாதையாய் ஒன்றுமில்லை. உத்திரவிட்டார்.

நாராயணசாமி உடனே அளந்தார். மெல்ல மெல்ல பவாநந்தரின் சாமர்த்தியமும் புத்தி சாதுரியமும் புலப்பட்டன.

நாரா:—ஐயா நீளம் 20 அகலம் 16.

பவாநந்தர் "அரையடிக்கோல்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார்

நாராயணசாமி கையிலிருந்து டேப்பை வாங்கிக்கொண்டு அக்கீறல்களின் நாலுமுனைகளையும் அளந்தார். ஜமக்காளத்திலுள்ள அதேமாதிரியான கீறல்களையும் அப்படியே அளந்தார். இரண்டுகோடுகளும் சந்திக்குமிடத்தை ஜமக்காளத்தில் கண்டுபிடித்தார்.

"இங்கே" என்று அந்த இடத்தில்விரல் வைத்துக்கொண்டு, நம் தோளால் அங்கு போடப்பட்டிருந்த சாய்ப்பு நாற்காலியை அப்புறம் தள்ளினார்.

"பூதக்கண்ணாடி எடும்" என்று நாராயணசாமியைச் சொல்ல அவர்கொடுத்தார். இதைக்கொண்டு ஜமக்காளத்திலிருந்த கோடுகளைப் பார்த்தார். இந்த இடத்தில் ஜமக்காளத்தை பூமிக்கடித்திருந்த ஒரு ஆப்பைப் பார்த்தார்.

பவாநந்தர் இந்த ஆப்பை மெல்லதம் கைக்கத்தியால் பெயர்த்தெடுத்தார். பிறகு கத்தியிலுள்ள கார்க்ஸ்க்ரூவால் ஆப்பை அப்படியே எடுத்துவிட்டார். ஒருநீண்ட குதிரை வால்மயிர் அத்துடன் வந்தது. இம்மயிர் ஒரு பட்டுப்பைக்குக் கட்டப்பட்டிருந்தது. அதை இழுத்தார். அதில் பதக்கமும் நகைகளுமிருந்ததைக் கண்டார்.

நாராயணசாமி ஆச்சரியமாய் பொறாமையுடன் பவாநந்தரைப் பார்த்தார். நாம் இவரைக் கைதுசெய்துவிடலாமே கேஸ் தெளிவாயிருக்கிறதே என்றார்.

பவா: நீர் நினைப்பதுபோல அவ்வளவு தெளிவாயில்லை. இந்த ஹாலில் கண்டதிருட்டுச்சொத்துடன் புதிதாய் கலந்திருக்கும் இவரை சம்பந்தப்படுத்தலாம். அவர் ஏன் 6மணிக்கு என்னைத் தயாராயிருக்கச்சொன்னார். யோசித்துப் பார்க்கிறேன்."

யோசித்துப் பார்த்ததின் பயனாக அப்பையை மறுபடியும் இருந்த இடத்திலேயே வைத்து ஆப்பை அறைந்து ஜமக்காளத்தை மேல் போட்டு ஆணி அடித்துவிட்டு முன்பிருந்தது போலவே செய்துவிட்டார்.

பவா: நாராயணசாமி! நாம்நகையைக்கண்டு பிடித்த விஷயத்தில் உமக்கு சந்தோஷம் தானே.

நாரா: ஏன் திருடனைக்கூடக் கண்டுபிடித்த விஷயத்தி வில்லையா?

பவா: கண்டுபிடிக்கலாம் சற்றுப்பொறு.

நாரா: நான் கோபாலையரிடம். இவ்வளவு தூரம் கண்டுபிடித்திருக்கிறேனென்று சொல்லுகிறேன்.

கோபாலையர் விஷயங்களைக் கேட்டதும் மிக்க ஆத்திரமுள்ளவராய் உடனே கைதுசெய்துவிடவேண்டுமென்றார். பவாநந்தர் அவரைக் கைதுசெய்ய போதுமான சாட்சியமில்லை யென்றார்.

பவா" நீங்கள் போங்கள். எனக்காகத் தாமதிக்கவேண்டாம். நான் சிலசாட்சியத்தைத் தேடுகிறேன். என்றார்

நாராயணசாமி பவாநந்தரின் சாமர்த்தியத்தைப்பற்றி கோபாலயரிடம்சிலாகித்துப் பேசவில்லை. ஏனென்றால் பொறாமை யென்ற குணம் அவரிடம் விசேஷமாக இருந்தது. தான். தன் சாமர்த்தியம் இவைகளைப்பற்றியே எப்பொழுதும் பேசும் சுபாவமுடையவர்நாராயணசாமி.

அரைமணி நேரத்துக்குள் பவாநந்தர் மறுபடியும் திரும்பிவந்தார். மெதுவாக உள்நுழைந்து சென்று உமாமகேசுவரன் மருந்தின் வேகத்தால் மெய்மறந்து உறங்குவதைக்கண்டார். இம்முறை நாற்காலியை இருந்தமாதிரிவைத்து அதன்மேல் தண்ணீர்பாலையையும் வைத்துவிட்டார் கதவைசாத்திவிட்டு வெளியேவந்து சற்று கண்ணயர்ந்தார்.

வெளிக்கதவுமெல்ல இடித்தசப்தத்தால் விழித்துகொண்டார். ஜன்னல் துணியில் ஒருதுவாரம் செய்து அது வழியாய்ப்பார்த்தார். படுக்கையறையில் நிசப்தமாயிருந்தது. பவாநந்தர் தாம் உறங்கக் கொடுத்த மருந்து ஜாஸ்தியாய் விட்டதோ என்று பயந்து நினைத்துக் கொண்டிருக்கையில்.

உள்ளே கொட்டாவி விட்டு எழுந்த சப்தம் கேட்டு மனங்கலங்கி திறுதலடைந்தார்.

உமாமகேசுவரன் கண்ணைத் துடைத்துக்கொண்டு ஹாலுக்குவந்து தண்ணீர்பானையையும் அப்புறப்படுத்தி, கதவைத் திறந்து காபி தயாராயிற்று பார் என்று பவாநந்தரிடம் சொல்லிவிட்டு மறுபடியும் கதவைசாத்திக்கொண்டார். படுக்கையறைக்கு போய் ஜன்னலைத்திறந்து காரிக்கோழை வெளியிலுமிழ்ந்தார்.

இந்த சப்தத்தை பவாநந்தர் பாம்புபோல் எப்படியோ கேட்டுவிட்டார். ஜன்னல் துவாரவழியாய், உமாமகேசுவரர் நீலக்கடுதாசியை யெடுத்து அக்கீறல்களை அளப்பதும். ஜமக்காளக் கீறல்களை அளப்பதும். ஜமக்காளத்தைத் தூக்கி மெல்ல நகைப்பையை எடுப்பதையும் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

உமாமகேசுவரர்பையை மறுபடியும் அடக்கம் செய்யும் பொழுது. திடீரென ஒருவர் பின்புறமாய்வந்து அவர் கழுத்தைப் பிடித்துக்கொண்டார். உமாமகேசுவரர் இவரைக் கீழ் தள்ளிவிடமுயன்றார். முடியவில்லை.

நகைப்பையைக் கொடுத்துவிடு என்று பவாநந்தர் பையைப் பிடுங்கிக்கொண்டார்.

"யார் என்று என்னை நினைக்கிறாய்" என்று கேடடார்.

"உன்னை செக்கில் வைத்துத்திரிக்கவேண்டும்? என்றார் உமாமகேசுவரர்.

உமாமகேசுவரர் தம் பலத்தையெல்லாம் கூடி இவரை கீழ்த்தள்ளிவிட முயன்றார். உடனே பவாநந்தர் ஜோப்பி

யிருந்த ஒரு சீசாவை எடுத்து அவர் மூக்கில் காட்ட உமாம கேசுவர் பிணம்போல் பிரக்ஞையற்றுக் கீழே வீழ்ந்தார்.

பவாநந்தர் நாடியைப் பார்த்து அரைமணிக்குள் உன் ஞாபகத்துக்கு வருவாய். கைகுட்டையை விட உனக்கு இது மேலானது என்றார்.

கல்பதக்கம் முற்றிற்று.

# எஜமான் எங்கே?

என் படுக்கையறைக்கதவு இடிக்கும் சப்தத்தால் தூக்கத்தினின்று விழித்துக்கொண்டேன். 'யார்' என்றேன். அபிராமன் குரலைக்கேட்டு கதவைத்திறந்தேன். அவன் முகம் விசனத்தால் வாடியிருந்தது. மௌனமாயிருந்தான். எனக்கு இவன் நோக்கத்தைக்கண்டதும். திகிலுண்டாயிற்று. சற்றுப்பொறுத்து "என்ன? என்றேன்."

"எழுந்திரும் வாரும். என்னவோபோபாயத்து உண்டாய்விட்டது போலிருக்கிறது. நான் எஜமான் படுக்கை அறைக் கதவை என்னதட்டியும் ஜவாப் கிடைக்கவில்லை. என்மனம் பதை பதைக்கிறது." என்று அபிராமன் குளறி நடு நடுங்கினான்.

நான் உடனே அவனுடன் புறப்பட்டேன். எஜமான் அறைக்குப் போய்ப் பார்த்ததில் அறை பூட்டப்பட்டிருந்தது. எங்கள் சக்திக் கெட்டியமட்டில் இடித்துப் பார்த்தோம் பயனில்லை. கடைசியாக கதவை உடைத்துச் சென்றோம். அறையெல்லாம் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். எஜமானைக் காணோம். படுக்கைச் சுற்றப்பட்டிருந்தது. விரிக்கப்படவேயில்லை. அப்படியே யிருந்தது. உட்புறம் கதவு பூட்டப்பட்டு சாவி பூட்டிலேயே யிருந்தது. ஜன்னல்மட்டும் திறக்கப்பட்டிருந்தது. எஜமான் ஜன்னல்வழியாய் வெளியேறி யிருக்கவேண்டும். அவர் என்னகாரியமாக எவ்விடத்திற்குப் போயிருப்பார்?

நான் தேடித்தேடி பிரமித்து செயலற்றவனாய் நின்றேன். நான் அவர் என்னுடன் சொல்லாமல் போவார்

என்று எதிர்பார்க்கவேயில்லை. எங்கே போயிருக்கக் கூடு மென்று ஊகிப்பதும்சாத்தியமாக விருந்தது. அவர்வீட் டைவிட்டுப் போகும்படியாய் என்ன நிகழ்ந்திருக்கக்கூடும்? எனக்குத் தெரிந்தமட்டில் அவர் ஒன்றும் எடுத்துக்கொ ண்டுபோகவில்லை. அறையிலிருந்த சாமான்கள் அவைக ளிருந்த இடங்களிலேயே யிருந்தன.

"ஐயா! எஜமானை எப்பொழுதாவது நான் பார்க்கபா க்கியமுள்ளவனு? உயிருடன்தானே யிருப்பார்" என்ருன் அபிராமன். அவனுக்குத் தெரியாமலே துக்கத்தால் விம்மி விம்மி அழத் தொடங்கினன்.

"வாயை மூடு நாம் எந்த விஷயத்தையும் உறுதியாய் அறிவதற்கு முன் வீணை பீதியை உண்டாக்கக்கூடாது. நீ சும்மாயிருக்கமாட்டாயா?" அனுவசியமாக சுந்தரிக்குக் கிலேசத்தை உண்டாக்கக்கூடாது. " என்றேன்.

"நான் வாய் மூடிக்கொண்டேன், நீர் சொல்லுகிற மாதிரி நடக்கிறேன்" என்ருன்.

அபிராமன் வீட்டுக்காரியங்களைப் பார்க்கச் சென்ருன். நான் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தனியாய்வந்து எஜமான் படுக்கை யறையைச் சோதித்துப் பார்த்தேன். முக்கியமாய் ஒரு விஷயம் தோன்றிற்று. ஜன்னல் உயரத்தி லிருந்தது. அதன்வழியாய்க் குதிப்பது, மிகவும் அபாயம். எஜமான் தேகஸ்திதியையும் தேகவலுவையும் அறிந்த நான் அவர் ஜன்னல் வழியாய்குதித்துவெளியேறியிருப்பார் என் று நினைக்கக்கூடாமலிருந்தது. ஆயினும் அவரைக் காணே மே: கதவு உட்புறமாய்ப் பூட்டப்பட்டிருந்ததால் கதவுவழி யாய்ப்போகவில்லை யென்பது உறுதி.

அவரைப்பற்றி ஜாக்கிரதையாயிருக்கவில்லையே யென்று நானே என்னை நொந்துகொண்டேன். அவரை விட்டு நான் பிரிந்திருக்கக்கூடாது என்று நினைத்தேன். நான் செய்திருக்க வேண்டியவைகளைப் பற்றி வீணுய்ச் சிந்தித்து காலங்கழிப்பதிலென்ன பிரயோஜனம்? இனி நடக்கவேண்டியவைகளைப்பற்றியன்றோ நான் யோசிக்கவேணடும். நான் செய்யவேண்டியது அவரை எவ்வளவு சீக்கிரத்தில் கண்டு பிடித்தல் சாத்தியமோ அவ்வளவு சீக்கிரத்தில் கண்டுபிடித்தாகவேண்டும். அல்பகாரியங்களுக்கெல்லாம் அனுவசியமாக போலீசில் தெரியப்படுத்தி கலாட்ட உண்டாவதில் எனக்குப்பிரியமில்லை- சாதாரண சமாசாரத்தைப் பத்திரிகைகள் பிரமாதப்படுத்தி எழுதும்.இவைகளெல்லாம் எனக்குச்சற்றும் பிரியமில்லை. நான் உடுப்புப்பெட்டியைத் திறந்து பார்த்தேன். அவர் நேற்றுத் தரித்திருந்த உடையுடனே போயிருக்க வேண்டுமென்ற தீர்மானத்துக்கு வந்தேன். உடைந்த கதவை சாத்திவிட்டு மறுபடியும் கீழே வந்துவிட்டேன். அபிராமன் எனக்குக் காபி வைத்துக் காத்துக்கொண்டிருந்தான். அவன் விசனத்திலாழ்ந்திருந்தான். ஒன்றும் வாய்திறவாமல் நின்றுன். இவ்விஷயத்தில்ஏதாவது உளவுகிடைத்ததா என்று நான் கேட்டேன். நான் கடோமாய் அவனிடம் பேசினதானது என்மனதைஉறுத்திக்கொண்டிருந்தது. ஆனல் அவனுக்கு என்னிடத்தில் வெறுப்பொன்றுங் கிடையாதென்றறிந்துகொண்டேன்.

நான் இன்னும் நன்றுய்ப்பார்க்க அவகாசமேற்படவில்லை. அவருக்கு யாதொரு ஆபத்தும் உண்டாகவில்லையென்பதுநமக்குறுதிதானே? அவரைக்கண்டு பிடிக்கும் விஷயத்தில் என்உயிரையும் கொடுக்க சித்தமாயிருக்கிறேன், என்றுன் அபிராமன்.

"நிச்சத்தமாயிருக்கிறுமென்பதை நானறியாதவனல்ல. நீயும் ஏதாவது சாப்பிட்டுவிட்டுவா. என்று சொல்லிவிட்டு நான் மேலே போனேன். சுற்றிலும் பார்த்தேன்: உருவை மாட்டியில் தொங்க விட்டிருக்கும் சொக்காய்கள் நல்லாக்கள். தலைப்பாக்கள் இவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துபார்த்தேன். எல்லாம் சரியாயிருந்தன. இதையெல்லாம் பார்க்கையில் அவர் முன் யோசனையோடு வெளியேறினவரல்ல. பயத்தாலோ உணர்ச்சியாலோ சரேலென வெளிக்கிளம்பினவர் என்று எனக்குத் தோன்றிற்று. அவர் ஆடையுடை ஒன்றுமில்லாமல் போகவேண்டியதாய் அவருக்குண்டான பயமென்னவா யிருக்கக்கூடும்? இதைப்பற்றி நினைக்க நினைக்கமலைப்பு எனக்கதிகமாயிற்று.

இதைவிடுமுன் வாயற் கதவைப்பார்த்தேன். அதுவும் உள்தாப்பாள் போடப்பட்டு பத்திரமாயிருந்தது. திரும்பினதும் அபிராமன்வந்து கொண்டிருந்தான். அவனிடம் என் சந்தேகங்களைச் சொன்னேன். அவன் சமாதானம் ஒன்றும் சொல்லமுடியவில்லை. ஆனால் ஒருசெய்தி சொன்னான்.

என்னோடு பின்னேவந்தால் என்சந்தேகங்களைக்காட்டுகிறேன். என்றான் அபிராமன்.

சமையலறைக்கு நாங்கள் போனோம். ஜன்னலைத் திறந்தான். எனக்கு முதலில் ஒன்றுமே தோற்றவில்லை. ஆயினும் விசேஷ மொன்றுமில்லாமல் என்னை இங்கு கூட்டிக் கொண்டுவரமாட்டான். அபிராமன் என்பது எனக்குத்தெரியும். என்ன அபிராமா:" என்றேன்.

அபிராமன் உடம்பைக்குலுக்கிகையைவிரித்து"என்ன? ஒன்றும் தெரியவில்லையா? நேற்று காலை செய்த பணியார

பெங்கே! பேணிபேங்கே' இதோபாரும்! இந்த டின்னில் 6 வைத்திருந்தேன். அவைகள் எங்கே? "என்றான்.

இந்த சந்தேகம் என் சந்தேகத்துடன் சேரவும் எனக்கு அதிக மலைப்புண்டாயிற்று. உடனே மேலறைக்கு நான் போனேன். தின் பண்டங்களை தோல்பையில் எடுத்துக் கொண்டுபோயிருக்கலாமென்றுநினைத்தேன். ஆனால் அந்தப் பை இருந்த இடத்திலேயே யிருந்தது. அவைகளை எப்படித் தூக்கிக் கொண்டு போயிருப்பார்? இது மாதிரியான சந்தேகங்கள் இன்னு மிரண்டு மூன்றுண்டானால் நான் புத்தியிழந்து பைத்தியம் பிடித்தவனாக வேண்டியது தான். இது இருக்கட்டும். இவ்விஷயத்தை சுந்தரத்துக்கு சொல்லாம லினி இருக்கலாகாது. அவர் என்னிடம் மட்டும் சமாசாரத்தைச் சொல்லியிருந்தாரானால் நான் இவ்வளவு தொந்திரவுக்காளாகவேண்டியதில்லை. நான் செய்யவேண்டியது அவரைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யவேண்டியதுதான். என் முயற்சி வைக்கோற்போரில் ஊசியைக்கண்டு பிடிப்பதற்கு சமமாயிருக்கிறது. அவர் புத்தி மாறுபட்டிருக்கவேண்டும். பைத்தியக்காரனின் தந்திரத்தையறிவது இலேசானதா?

நான் கீழ்வந்தேன். சுந்தரம் நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு யாதொரு செய்தியும் தெரியாது. அவள் என்னைக்கண்டதும்.

"ஏது ஐயாவும் தாங்களும் இவ்வளவு தாமதமின்று" என்று வினவினான்.

நான் விஷயத்தை இனி மறைதது வைக்கக் கூடாது. எப்படி வெளியிடுவது என்பது கேள்வி, எனக்கு அவளுக்கு திகிலை யுண்டாக்கக் கூடாதென்பது கருத்து,

அதெப்படி முடியும்? அவள் என் தடுமாற்றத்தையும் மனக் கிலேசத்தையும் அறிந்து கொண்டாள். அவள் முகம் உடனேவெளுத்தது. நாங்கள் சற்று ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தோம்.

“மாமா! என்ன ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள்? என்னிடம் சொல்லக்கூடாதா? ஐயாவைப்பற்றினதா?” என்றாள் சுந்தரி.

“நீ சந்தேகப்பட்டது சரிதான். நான் துக்ககரமான செய்தி சொல்லப்போகிறேன். நீ தைரியமாயிருப்பதாக உறுதிகூறினால் சொல்லுகிறேன்.” என்றேன்.

“அப்படியே தைரியமாயிருக்கிறேன் என்னிடம்ஒன்றையும் மறைக்காமல் முழுவதையும் தயவு செய்து சொல்லிவிடுங்கள். என் ஐயாவுக்கு என்ன? அவர்மரணமாயினரோ?” என்றாள். அவள் கண்களில் நீர்ததும்பின.

“இல்லை. அவரைக்காணோம். அவர் படுக்கையறைபூட்டப்பட்டிருந்தது. அதை உடைத்து உட்சென்று பார்த்ததில் அவர் இரவில் எங்கோ வெளியேறியிருக்கவேண்டுமென்று அறிகிறேன்.”

‘அவர் அதிகாலையிலெழுந்து உலாவப்போயிருக்கக்கூடாதா? அவர் சில தினங்களில் போவது வழக்கம்தானே. அவர் அறைபூட்டப்பட்டிருந்ததும் அவரறையிலில்லாதிருந்ததும் திகிலையுண்டாக்க நியாயமில்லையே. ஒருவேளை சாவியை அவர் எடுத்துக் கொண்டுபோயிருப்பார்,

நான் ஒவ்வொரு விஷயங்களையும் தெளிவாய்ச் சொன்னேன். அவளுக்கு துக்கம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

"நாம் செய்ய வேண்டுவதென்ன? அவரை அதிசீக்கிரத்தில் கண்டு பிடிக்க வேண்டும். ஐயா! எங்கு போய்விட்டார்!" என்றாள்.

நான் அவள் முகத்தைப்பார்க்கவில்லை. ஏனென்றால் விசனத்துக்குதூபம்போடுவதுபோலாகும். ஆனாலும்அவளை ஒரு விதமாய்க் கண்டித்தேன். அவள் கண்களைத்துடைத்துக்கொண்டு தைரியமாயிருக்கிறேனென்றாள்.

என்புத்திக் கெட்டியமட்டில் அவரைப்பற்றிய உளவு ஒன்றும் தோன்றவில்லை. அக்கம்பக்கத்தாரை விசாரிக்கலாமென்றாலோ அது எனக்குப் பிரியமில்லாதிருந்தது. ஒருவேளை அவர் யாரும் பார்க்கக்கூடாத நடுநிசியில் போயிருப்பார். போலீசாரிடம் தெரிவித்து பீட் கான்ஸ்டேபிள் மூலமாக அறியலாமோ என்று நினைத்தேன். ஏன் உடனே சொல்லவில்லையென்று அவர்கள் குறை கூறுவார்கள். எப்படியிருந்தும் இனி மௌனமா யிருப்பதில் பிரயோஜனமில்லை. போலீஸ்டாணாவில் தெரிவிப்பதென்ற தீர்மானத்துக்கு வந்தேன். இதற்கு சுந்தரியும்சம்மதித்தாள். உடனே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுப் போனேன். மேஜையண்டை ஒருவர் எழுதிக்கொண்டிருந்தார். நான் மரியாதையாய் அவரிடம் இன்ஸ்பெக்டரைப் பார்க்க வந்திருப்பதாகச்சொன்னேன். அவர் இன்ஸ்பெக்டர் கேசுக்கு கச்சேரிக்குப் போயிருக்கிறாரென்றும், விஷயத்தைச் சொன்னால் தம்மால் கூடிய சகாயம் செய்யச் சித்தமாயிருப்பதாகவும் சொன்னார். சரியென்றேன். உடனே என்னை அழைத்துக்கொண்டு ஒரு பிரத்தியேகமான அறைக்குச் சென்றார். அங்கே விஷயங்களை நிதானமாய்ச் சொன்னேன். அவர் ஒரு நோட் புஸ்தகத்தில் குறிப்பு எழுதிக்கொண்டார்.

நல்லது எங்களால் கூடியதைச் செய்வதில் தடையில்லை. கண்டுபிடிப்பதென்னவோ கஷ்டத்தில்தானிருக்கிறது, அவர் எப்பொழுது வீட்டைவிட்டாரென்று உமக்குத் தெரியுமா?"

"ஏது? நாங்கள் காலை 7 மணிக்குப் பார்த்தோம். காணோம். எப்பொழுது போனாரோ?"

"பீட்கான்ஸ்டேபிள்களைக் கேட்போம். அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள். ஏதாவது விசேஷமிருந்தால் ரிபோர்ட் செய்திருப்பார்களே. நீர் ஜன்னல் வழியாய் ஏறி குதித்திருப்பாரென்றீரல்லவா? ஆகார முதலியவைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு எப்படி குதிக்கமுடியும்?"

இவைகளுக்குப்பதில் எனக்குத் தெரியுமானால் போலீஸ்காருதவி எனக்கென்னத்திற்கு? இத்தகைய கேள்விகள் இரண்டொன்று கேட்கப்பட்டதும் எனக்கு வெறுப்புத்தோன்றி எழுந்துவரப் பார்த்தேன். மரியாதைக்கு உத்தரவு பெற்றுக்கொண்டு ஏதாவது அவரைப்பற்றித் தெரிந்தால் 'தெரியப்படுத்துங்கள்' என்று சொல்லி வீட்டுக்குத்திரும்பி விட்டேன்.

வரும் வழியில் வக்கீல் வீடிருந்தது. அதில் நுழைந்தேன். இவரை எனக்கு நன்றாய்த் தெரியும் எஜமான்கேஸ்களுக்கு இவரிடம் பலசமயங்களில்போயிருக்கிறேன். அவர் என்னைக்கண்டதும் வந்த காரணத்தையும் காரியத்தையும் கேட்டார்.

"எஜமானை கடைசியாக எப்பொழுது பார்த்தீர்கள்"? என்று கேட்டேன்.

"இரண்டுவாரமிருக்கும் அச்சமயம் ஏதோ ஒரு மாதிரியாயிருந்தார். அவரை யாரோ தொடருகிறார்களென்றும்

ஆதலால் அவருக்கு மிக்கபயமாயிருக்கிறதென்று ம்சொன்
ஞர். அவர் எங்காவது போய்விட்டாரோ?"

" ஆம் இரண்டு நாளாயிற்று. ஒன்றுமே தெரியவில்லை.

" போலீஸில் தெரிவித்திருக்கிறீர்களா ?

" இப்பொழுது ஸ்டேஷனிலிருந்துதான் வருகிறேன்.

" அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள் பார்ப்போம்.
அவர்கள் கண்டுபிடிக்கப்படும் வரையில் உம் சம்பளமாவது
வீட்டுச் செலவுக்காவது என்னவேண்டுமானாலும் எனக்குச்
சொல்லி அனுப்பிவித்தால் உடனே கொடுத்தனுப்புகிறேன்

" நல்லது அப்படியே செய்கிறேன்"

நான் வீட்டுக்குத் திரும்பினேன். எனக்காக சுந்தரி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். நான் அவளிடம் எல்லா சங்கதிகளையும் சொன்னேன். அவளுக்கு எஜமானை எனக்குத் தெரிந்த அளவு தெரியாதாகிலும் அவரிடம் அவளுக்கு ஒருவிதமான பிரியம் ஏற்பட்டுவிட்டது. ஏனெனில் அவள் மனதுக்குகந்தவர் அவரன்றியார், அவள் பாட்டியும் தந்தையுமோ அவளுக்கு விரோதிகளாயிருந்தார்கள்.

ஐயா ! கூடிய சீக்கிரம் அவரைப்பற்றிய நல்ல செய்தி கிடைக்குமென்று நம்புகிறேன். அவரைப் பற்றியே இவ்வளவு காலம் நினைத்துக் கொண்டிருந்தேன். நான் இங்கு வந்ததே அவருக்கு கெட்டகாலம் போலும். நான் வந்த நாள் முதல் அவர் மனது சரியாயிருக்கவில்லை. இதுவும் என் துர்பாக்கியம். நான் வராமலிருந்தாலாவது அவர் சுகமாகயிருப்பாரோ ? நான்தான் என்ன செய்வேன். என் தாயார் இறப்பதற்கு முன் நான் கஷ்டத்தில் சிக்கிவதைதெரியாமலிருக்குங்காலத்தில் அவரிடம் போய் விடு என்று

சொன்னாள். அவரைவிட்டால் வேறுகதி எனக்கொ(
வருமேயில்லை."

"அம்மா நீசெய்தது சிரம்பசரி. உன்னையே ஏன்
நொந்துகொள்கிறாய். நீவாராமலிருந்தால் அவர் இன்னு
மோசமாய்ப் போயிருப்பார். அவருக்கு நீவந்தது அதிகச
தோஷம் நாம் போனகாரியங்களைப் பற்றிச் சிந்தித்து மன
நொந்து வருந்துவதில் பயனென்ன?

"நீர் சொல்வதுசரி! நீர் எனக்காறுதல் சொன்ன
போதிலும் உமக்கிருக்கும் விசனம் எனக்குக்கூட இரா
காது. நடக்கவேண்டியகாரியங்களை கவனிப்போம்."

நான் சாப்பிட்டபிறகு என்னுடைய வேலைகளை கவ
னிக்கச் சென்றேன். ஒன்றையும் கவனிக்கமுடியவில்லை. என்
னெண்ண மெல்லாம் அவர் மேலேயே யிருந்தது. நான்
ஜன்னலண்டை அடிக்கடிபோய் பார்த்துக்கொண்டு நின்
றேன். நான் எஜமானைப்பார்க்கக்கூடு மென்பதாகவல்ல
எனக்குத் தெரியாமலே நான் அங்கேபார்த்தேன்.

யாரோ ஒருவர் என்னைப்பார்க்க வந்திருப்பதாக
அபிராமன் சொன்னான். அவரை மேலே அழைத்துவரும்
படி சொன்னேன். அவர் துப்பறிபவர் என்றும் அக்காரிய
மாக வந்திருப்பதாகவும் சொன்னார். நான் மிகவும் சந்தோ
ஷமடைந்தேன். அவரின் முகம் எனக்கு மனதிடத்தைக்
கொடுத்தது. இவரால் இது முடியாவிட்டால் யாராலும்
முடியாது என்று நினைத்தேன். அவரை உட்காரும்படி சொ
னேன். என்ன விஷயங்கள் வேண்டுமானால் என்னால் கூடி
யவரையில் சொல்வதாகக் கூறினேன்.

"உம் எஜமானின் படுக்கையறையைப்பார்க்கப் பிரியப் படுகிறேன். ஜன்னலை முக்கியமாய்ப்பார்க்கவேண்டும்." என்றார். பவாநந்தர்.

நாங்கள் உடனே எழுந்து சென்றோம். மெத்தையை விட்டுக் கீழிறங்கி, மறுபடியும் படுக்கையறைக்குச் சென்றோம். ஏறும் முன் பவாநந்தர் மெத்தைப் படியின் கீழிருக்கும்ஒரு கதவைப்பார்த்தார்.

"இது எவ்வளவு தந்திரமானது ? இதற்குக் காரணமென்ன ? சொல்வீரா ? என்றார் பவாநந்தர்.

"இடம் அடைந்து விடாமலிருக்க எஜமானின் நோக்கமிருக்கலாம். என்றேன்."

" கண்டவரின் நோக்கமா ? "

" ஆம் அவர் கைவேலையும் தான். "

" சரிதான்.

பவாநந்தர் வேறொன்றும் சொல்லவில்லை, அவர் சொன்னமாதிரி அர்த்தம் சரியாயிருந்தது. அவர் எஜமான் புத்திஸ் திரமில்லாதவர் என்ற அபிப்பிராயப்பட்டிருக்கிறாரென்று நினைத்தேன்.

மெத்தையேறி அறைக்குள் போனோம். அவர் அறையை மிகவும் நுட்பமாய்ப் பார்த்தார். ஜன்னலண்டைபோய் அதைப்பார்த்தார். பூமியிலிருந்தும் ஜன்னலுக்குள்ள உயரத்தை நன்றாய் கவனித்தார். அதன் வழியாக தலையை நீட்டி சுற்றிலும் பார்த்தார். ஏதாவதொன்றைப் பிடித்துக்கொண்டு கீழிறங்கவழி யிருக்கிறதாவென்று பார்த்தார். ஆனால் அங்கொன்று மில்லை. தலையை உள்வாங்கி அறையை மறுபடியும் நுட்பமாய் ஆராய்ந்தார்;

" அவர் பைமுதலிய யாதொன்றையும் கொண்டு போகவில்லை யென்பது உறுதிதானே. " என்றார்.

" தடையென்ன. அவரின் தோல்பை இருந்த இடத்திலேயே இருக்கிற தென்றேன்.

" வெள்ளிக்கிழமை சாயந்திரம் அவர்ஏனைய நாட்களைவிட குதூகலமாயிருந்தாரென்று சொன்னீரல்லவா. "

" ஆம். அவர் அப்படியிருந்தது. எனக்கும் சுந்தரிக்கும் மன உல்லாசமாயிருந்தது. "

" சாயந்திரம் அவர் எங்கும் வெளியில் போகவில்லையே. "

"இல்லவேயில்லை. சாப்பாட்டுக்குப்பின் சுந்தரி பாடினுள் நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். அவருக்கு சங்கீதத்தில் மிக்கப்பிரியம். சுந்தரி பாடினது அவர் மனத்துயரை சற்று சமாதானப்படுத்தியதுபோலும். இரவு 11-மணிவரையிலும் பாட்டுக் கேட்டிருந்தோம். பிறகு நான் படுத்துக்கொள்ளப் போய்விட்டேன்.

நான் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளை பவாநந்தர் கவனிக்கவில்லை. அவர் கன்னத்தை கையால் தேய்த்துக்கொண்டு செருப்பு விடும் மூலையை உற்று நோக்கிக்கொண்டிருந்தார். அவர் யோசனையைத் தடுக்கப் பிரியமில்லாதவனாய் அவரே பேசும் வரையிலும் சும்மா நின்றுகொண்டிருந்தேன்.

'கண்டிராவரிடத்தில் அனேக பூட்சுகள் முதலியனவிருக்கின்றனவோ? என்று மறுபடியும் பவாநந்தர் கன்னத்தை மறுபடியும் தேய்க்கவாரம்பித்தார். பிறகுநான் அவர் யோசனையிலிருக்கும்பொழுது இப்படி செய்வதென்பதை அறிந்துகொண்டேன், அவர் ஒரு பூட்சை எடுத்து மிதிரை.

பூட்ஸூலால் அளந்து பார்த்தார். இதற்குப்பிறகு ஜன்னல் ண்டை வந்து எட்டிப்பார்த்தார். ஜன்னலின் கீழ் கொஞ்ச மகலமுள்ள காலடி ஒன்றிருந்தது. பவாநந்தர் குள்ளமான வராதலால் அவர் அதைக்குனிந்து எட்டி அளக்கமுடியவி ல்லை. நீண்ட கையனான நானே மிகவும் கஷ்டத்துடன் அள ந்தேன். 6-இன்சுக்கு சற்று அதிகமிருந்தது. அதன் அகலம் இதைநான் சொன்னதும். மறுபடியும் பூட்சை அளக்கச் சென்றார்.

"எத்தனை கால்மிதிகள் அவருக்குண்டு என்பது உமக் குத் தெரியுமா?"

"எனக்குத் தெரியாது. அபிராமன் அறிவான். நான் அவனை அழைப்பிக்கிறேன்."

"அபிராமா" என்று இரண்டுகுரல் கூப்பிடும் முன் அவன் வந்தான்.

"உமக்கு எஜமானுக்கு எவ்வளவு மிதியடிகளுண்டெ ன்பது தெரியுமா?"

"ஒருஜதை செருப்பு, ஜோடு, பூட்ஸ், பாதகுறடு, மான்தோல் செருப்பு ஒரு ஜதை யிருந்தது."

"நேற்று சாயந்திரம் அவர் எதைப் போட்டுக்கொண் டிருந்தார்?

"மான்தோல் செருப்பைத்தான் போட்டுக்கொண்டி ருந்தார்" என்று நான் சொன்னேன்.

"கீழே ஏதாவது மிதியடிகளிருக்கின்றனவா?" என் றார்.

"ஒன்றுமில்லை" என்றான் அபிராமன்.

பவாநந்தர் மிதியடிகளை ஒவ்வொன்றாய் எடுத்தளை த்தார். கீழே ஒன்றுமில்லையென்பதைப்பற்றி உறுதியாய்

சொல்லக்கூடுமோ என்றார். அபிராமன் 'பார்த்துவிட்டு வந்து விடுகிறேன். சந்தேகம் வேண்டாம்' என்று கீழே போனான்.

இச்சமயத்தில் அவர் எஜமானனைக் குறித்த சில கேள்விகளைக் கேட்டார். அவர் சுராபானஞ் செய்வதுண்டாவென்றும், சச்சரவுக்காரராவென்றும், என்னிடத்தில் துவேஷம் எப்பொழுதாவதுகொண்டவராவென்றும் கேட்டார்.

கடைசிக்கேள்வி எனக்குக் கோபத்தை மூட்டியது. அதைநான் அடக்கிக்கொள்ள முடியவில்லை. படபடத்தவனாய் மறுமொழி கூறினேன். அவர் என்னிடத்தில் பக்ஷமாயிருந்ததுபோல் யாரிடத்திலு மிருக்கமாட்டாரென்றேன். மேலும் அவர் எனக்குச் செய்திருக்கும் அளவு யாரும் எனக்குச் செய்யமாட்டாரென்றும் சொன்னேன்.

நான் சொன்னதைக்கேட்டு அவர் தனக்குள்ளே சிரித்துக்கொண்டார். உடனே,

"கோபித்துக் கொள்ளாதேயும் நான் முக்கிய காரணநிமித்தமாகவே அக்கேள்விகளைக் கேட்டேனன்றி வீணாகக் கேட்கவில்லை. இத்தகைய கேஸ்களில் மனிதனைப்பற்றியும், அவன் பிறரிடத்துள்ள நடத்தையைப் பற்றியும் எத்தனை தெரியக்கூடுமாயினும் அனுகூலந்தான். இவைகளைப்பற்றிய குறிப்புகளொன்று மில்லாவிடில் செய்வதற்கொன்று மிலது" என்றார்.

"நான் அவசரப்பட்டு முன் யோசனை யின்றி படபடவென்று பேசினதற்கு வருந்துகிறேன். என்னை மன்னித்துப் பொருக்கவேண்டுகிறேன்." என்றேன்

அபிராமன் வந்து, "நிச்சயந்தான். சந்தேகமில்லை ஒன்றும் இல்லையா" தென்றான்.

" சரி என்று தீர்மானமாயிற்று. அவர் மான் தோல் செருப்புடன் தான் போயிருக்கிறார். பனிபெயுமிரவில் அவர் இச்செருப்புடன் போயிருப்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மேலும் தலைக்குமொன்றுமில்லை. இத்தகைய கேஸ் நான் இதுவரை கண்டதில்லை. அவர் போனதுதெரியுமானல் சௌகரியம்தான். அது உமக்கு தெரியாதே "என்ருர்.

நான் அவரை சுந்தரியிடம் கூட்டிக்கொண்டுபோனேன்: அவள் இவருக்கு வணங்கி மௌனமாயும் விசனமாயும் நின்ருள். இதைக்கண்டு பவாநந்தர் " அம்மா! நீ விசனப்படவேண்டாம். அவரைப்பற்றிய செய்திகூடியசீக்கிரம் தெரிவிக்கிறேன். நீ இதைப்பற்றியே விசாரப்படக்கூடாது. எல்லாம் கடவுளனுகிரகத்தால் நன்கு முடியும். நமக்கு உண்மை தெரிந்தபிறகு நமக்கு சாதாரணமானது முன்பே தோன்ருமற்போயிற்றே என்று கருதுவோம். இந்த சமயத்தில் நாம் சும்மாவிருந்துவிடவும் கூடாது. இந்த ஆத்திரத்திலேயே நாம் சகல முயற்சியும் செய்தாகவேண்டும். இல்லாவிடில் ஆரினகஞ்சி பழங்கஞ்சியென்பதுபோலாய்விடும். அசிரத்தையுண்டாகாமற் பாதுகாப்பதுதான் என் கொள்கை. வருகிறேன் அம்மா" என்ருர்.

அவர்பின் அவரை வழியனுப்ப நான்போனேன். அவரிடம் யாரோ சிலர் வீட்டின்மேல் யாதுகாரணத்தாலோ கண்ணுயிருக்கிருர்களென்று சொன்னேன்,

" இதனல் ஏதாவதறியலாம். நான் குறிப்பாய்ப் பார்த்துக்கொள்ளுகிறேன். இப்படியே இரண்டு மூன்று நாட்களிருக்குமாகில் அபிராமனிடம் எனக்குச் செய்தி சொல்லியனுப்பும் அபிராமன் யோக்கியன்தானே " என்ருர் பவாநந்தர்.

"சற்றும் சந்தேகமேவேண்டாம். கண்டீரவரிடம்சமை யல் காரனாய் அனேக வருஷங்களாய் இருந்து வருகிறான் அவர் அவன் யோக்கியாவதாரம் என்று சொல்லக்கேட் ருக்கிறேன்." என்றேன்.

"அவ்வளவு யோக்கியனா? இத்தகைய மனிதர்கள் க்க அரிது. அதைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமா ருக்கிறது." என்றார்.

நான் இரவில் தூங்கமுயன்றும் தூக்கம் பிடிக்கவி லை. இரவு 12 மணியிருக்கும். யாரோ கீழ் நடக்கும்கால சப்தம் கேட்டது. ஒருவேளை அபிராமனோ என்று சந் கித்தேன். திருடராயிருக்கலாமோ என்ற சந்தேகத்தா காண்டிலையும் கைத்துப்பாக்கியையும் எடுத்துக்கொண் றப்பட்டேன். மெல்ல அபிராமன் படுத்துறங்கும் அறை ல்போய்ப்பார்த்தேன். நன்றாய் உறங்கிக் கொண்டிருந்தா வீட்டு உட் வெளிக்கதவுகளைப்பார்த்தேன். இவைகளா வீட்டிற்குள் ஒருவரும் புதிதாய்ப் புகவில்லையென்று மானித்துக் கொண்டேன். ஆயினும் காலடி சப்தமட் இருந்து கொண்டே யிருந்தது. இரவை சஞ்சலத்துட கழித்தேன். மறுநாட்காலையில் சுந்தரி என்னை காலடி ஓசை யைப்பற்றிக் கேட்டாள். நான் அதைப்பிரஸ்தாபிக்கவில் ஏனெனில் வீண்மனப்பிரமையாயிருக்குமோ வென்றிரு தேன். சுந்தரி இவ்விஷயத்தை பவாநந்தருக்கு சொல் யனுப்பு விக்கவேண்டுமென்றாள். இச்செய்தியைச் சொல் நான் பவாநந்தர் வீட்டுக்குப்போனேன். என்னைத் தொ ர்ந்து கொண்டு ஒரு குறங்காட்டி வந்தான். இவன் தா சில தினங்களாக வீட்டை பார்த்துக்கொண்டேயிருப்பவ நான் எங்கு போனாலும் இவன் பின் வந்து கொண்டேயி

ந்தான். நான் ஒரு நண்பர் வீட்டில் புகுந்தபொழுது இவன் வேறொரு பையனிடம் பேசிக்கொண்டு நின்றான். நான் வீட்டிலிருந்து திரும்பும் பொழுது அக்குரங்காட்டிப் பையனைக்காணோம். இரண்டடி எடுத்து வைக்கும் முன் என் அத்தானைப்பார்த்தேன். இவன் எனக்கு ஜன்மசத்துரு என் தந்தையிடம் என்னைப்பற்றிக் கோட் சொல்லி என்னை வீட்டைவிட்டுவரும்படி செய்துவிட்டான். அத்துடனில்லா மல் என்னை இவ்வுலகத்தி லில்லாமலே செய்து விடவே ண்டுமென்பது போலும் அவன் உட்கருத்து. என்னிடம் ப க்ஷமுள்ளவன் போல் வந்து,

அத்தான் :—அம்மாஞ்சி ! உன்னிடத்தில் இரண் டொரு வார்த்தை பேச விரும்புகிறேன்.

நான் :—என்னை ஏன் கேட்கிறாய் ?

அத்தான் :—நான் உன்னைக் கேட்காவிட்டால் யாரைக் கேட்பது ? நாம் ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்து கொள்ளவேண்டாமா ?

நான் :—ஒத்தாசை ? நீதான் என்னை ஓட்டையாண்டி யாக ஓட்டியாயிற்றே. இன்னும் உன்மனம் குளிரவில்லையா? என் தந்தையிடமிருந்து என்னைப் பிரித்துவிட்டாயே !

அத்தான் :—என்னவோ அர்த்தமில்லாமல் உளறுகி றாய். நீ மார்வாடிக்குக் கொடுத்த செக்கைப்பற்றிச் சொல் லுகிறாயா என்ன ?

நான் :— நானா செக்கொடுத்தேன். நீதானே பாதகன் செக்கில் தகப்பனார் கையெழுத்தைப்போல் போட்டு அதை என் கடிதங்கள் நடுவே வைத்துவிட்டு, என்னைப்பிடித்துக் கொடுத்துவிட்டாய். நான் குப்பைவாரியாவது நாணய

மாய் வாழ்வேனேயல்லது உன்போல் துரோகியா யிருக்க மாட்டேன்.

அத்தான் :—நீ என்னைப்பற்றி என்ன நினைத்தாலும் சரி. அது கடவுளுக்குத்தான் தெரியும். நான் உனக்கு ஒரு வித உதவி செய்யவந்திருக்கிறேன். நீ உனக்குத் தீங்கிழைத்தவரை விட்டு என்மேல் பழியைச் சுமத்துகிருய். அதெல்லாமிருக்கட்டும். போனதை மறந்து விடமாட்டாயா.

நான் :—திடீரென என் நேசத்தை விரும்பக்காரணமென்ன ? என்மேல் வாஞ்சையால் நீ யென்னிடம் வந்திருக்கிரு யென்பதை நம்ப நான் மூடனல்ல.

அத்தான் :—நீ மிகவும் பேரான ஆபத்திலிருக்கிருய். உன்னை மீட்க என்னால் முடியும்.

இப்படிச் செல்வதால் என்னை பயமுறுத்தலாமென்று அவன் நினைத்தது பலிக்கவில்லை. நான் அவசரமாய்ப்போக வேண்டியிருந்ததால்,

“ சொல்லவேண்டிய திருந்தால் சொல். நான் போக வேண்டுமென்றேன்.

அத்தான் :—நான் சொல்லவேண்டியது அனேகமிருக்கிறது. நீ புத்திசாலியானால் இப்பொழுதே நான் எச்சரிக்கிறேன். அதன்பிரகாரம் நடந்துகொள் இல்லையோ உன்னாயுளெல்லாம் பேராபத்திலுழலவேண்டியதுதான். உன்னைக் கெடுத்துக்கொள்வதல்லாமல் கூடவிருப்பவர்களையும் கெடுக்கவேண்டுமென்பது உன்னெண்ணமானால் உன்னிஷ்டம்போல் செய். கடைசியாக கேட்கிறேன். நான் சொல்கிறபடி கேட்பாயா, மாட்டாயா ?

நான் :—கேட்கிறேன். நீ குரங்காட்டியை என்னைத் தொடரும்படி ஏன் சொல்லியிருக்கிருய் ?

அத்தான் :— நீ எங்கிருப்பதென்பதை நிச்சயமாய் அறிவதற்காகத்தான்,

எனக்கு இதில் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. ஆயினும் நான் வாக்குக்கொடுத்த பிரகாரம் அவனைச்சொல்லவேண்டியதை சொல்லும்படி கேட்டேன்.

அத்தான் :— நீ இப்பொழுதிருக்கும் வீட்டை தாமதமின்றி விட்டுவிலகிவிடவேண்டும். நீ கண்டமாவர் வீட்டிலிருப்பது எனக்கு முன்பே தெரிந்திருந்தால் உன்னைவீட்டைவிட்டு விடும்படி சொல்லியிருப்பேன். நீ அங்கிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் உன் ஆபத்தை அதிகப்படுத்திக்கொண்டேயிருக்கிறது.

நான் :—எனக்குத் தெரிந்து ஒன்றும் காணோம். மன்னவென்பதை தயவுசெய்து சொல்.

அத்தான் :— அதைச் சொல்வதில்லை என்று சத்தியம் செய்துகொடுக்கிறேன். ஆபத்து சமயத்தில் நீ கண்டமாவரிடமிருந்துவிட்டால் உன்னை ஆபத்தினின்று மீட்பது திரிநேத்திரனுக்கும் முடியாதுபோகும். நீயே யோசித்துப்பார். அவரெங்கே? ஒளித்துக்கொண்டிருக்கிறார். ஏன்? உனக்குத் தெரியாது. நான் சொல்கிறேன் கேள். அவனை நம்பினவர்களைக் கைவிட்டுவிட்டான். அவன் விதிகாலம் கிட்டிவிட்டது. இது ஒருமாதகாலமாய் அவனுக்கே தெரியும். ஆதலால் பகலில் வெளிவருவதில்லை' தன்னிழலைக் கண்டு கூட திகில்படுகிறான். இரண்டொருவாரம் இப்படித் தப்பிக்கலாம். அதற்குமேல் முடியாது. எப்படியிருந்தாலும் பிடிபட்டுவிடுவார். இதைப்பற்றி நன்றாய் சிந்தனை செய். உன்புத்தி யுக்திப் பிரகாரம் நடந்துகொள். இதனால் கஷ்டமுண்டானால் என்னைக் குறைகூறாதே."

நான் என்னால்கூடியமட்டும் பார்த்தேன். 'ஒன்றுமில்லை யே, என்றேன். அவர் என் முகத்தைப்பார்த்துச் சிரித்து இந்த கொக்கி இங்கடித்திருப்பதைப் பார்த்தீரா? என்றார்.

எனக்கு அதன் உபயோகம் தெரியவில்லை. ஆதலால் 'பார்த்தேன். அதைப்பற்றியென்ன'? என்றேன்.

முதலில் பார்வைக்கு பிரமாதமாகத் தோன்றுததுண்டையே. (ஜன்னல் கதவில் ஒரு அடையாளத்தைக் காட்டி) இந்தக்குறியுடன் யோசித்துப்பார்த்தால், அனேக அர்த்தம் செய்யலாம். நாம் வாசிக்கும் அறைக்குப் போகலாம் வாருமென்றார்.

இந்த அறையிலும் ஜன்னலண்டைபோனோம். இங்கும் அதே மாதிரி ஒரு கொக்கியும், அடையாளமுமிருந்தன. இரண்டும் நிலத்திலிருந்து சம உயரத்திலிருந்தன. உண்மைதான். யார்தான் கண்ணால் பார்த்ததை இல்லையென்று மறுப்பார்? நான் மகாயுக்திசாலியல்ல. என் சிற்றறிவுக் கெட்டியமட்டில் இவைகளுக்கும் எஜமான் காணாமற்போனதற்கு முள்ள சம்பந்த மின்ன தென்பது எனக்குத் தோற்றவில்லை. உடனே நான் அவரை இதன் சம்பந்தத்தைத் தெரிவிக்கும்படி வேண்டிக் கொண்டேன்.

பவா:—ஒன்றும் உமக்குத் தெரியவில்லையா? அவரின் விருப்பமென்ன? அவர் வீட்டைவிட்டுப் போய் விட்டதாக எல்லாரும் நம்பச்செய்வதுதான். அவர் கதவு வழியாய்ப் போகக்கூடும் தடையில்லை. ஆனால் அவர் நான் சொன்னது போல மகாயூகசாலி, தந்திரசாலி. ஆகையினாலே எல்லாரையும் ஏமாற்றி பிரமிக்கச் செய்யும் நூதனவழியை நாடினார்? அதற்காக இரவில் அறைக்குவந்து இக்கதவைத்

திறந்து வைத்து விட்டு இந்தக் கொக்கியில் கயிற்றை மாட்டிவிட்டார். மற்றொரு நுனியிலும் கயிற்றைக்கட்டி இவ்விரண்டு கயிறுகளையும் மூலையிலிருக்கும் கம்புக்குக்கட்டித் தொங்கவிட்டார். கதவைப்பூட்டிவிட்டு ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு எளிதாய்ப் போய் அங்கிருந்தபடியே கயிற்றை மற்றைய நுனியிலிருந்து வாங்கிவிடமுடியும். இவளவும் எல்லாரும் வெளியில் போய் விட்டதாக நம்பச்செய்து விட்டு வேண்டிய ஆகாரமுதலியவைகளை எடுத்துக்கொண்டு இரகசிய அறையில் நுழைந்து கொண்டிருப்பதும், எல்லாரும் உறங்கும் வேளையில் வீட்டிற்குள் நடமாடுவதுமாயிருக்கிறார் இப்பொழுது உமக்குத்தெரிகிறதா? என்றார்.

நான் அவர் சொல்வதொவ்வொன்றும் சரியாயும் நியாயமாயுமிருக்கிறதென்றாலும், நான் எஜமானன் வீட்டிலேயேயிருக்கிறானென்பதை நம்பக்கூடாமலிருந்தது. அவரை இதைப்பற்றிக்கேட்டேன். எனக்கு வீட்டில் தெரியாத இடங்களே கிடையாது. பலராமர் இதற்கு யுக்தி சொன்னார்.

நாம் இன்று இராத்திரி உறங்காமல் விழித்திருப்போம் தினம் போல் அவர் வெளியில் வருவார் அவரைப்போய்க் கண்டு நம்மிடத்தில் உண்மையான சமாசாரங்களைச் சொல்லக்கேட்போம். எப்படியிருந்தபோதிலும் அநேககாலம் அவர் இப்படியே யிருக்க முடியாது. என்ன நீர் நினைக்கிறீர் என்றார்.

நீர்:—இன்று இராத்திரி வருகிறீரா?

பலரா:—அப்படியேயாகட்டும். இரவு 11-மணிக்கு வருகிறேன். நான் வெளியில் கதவு இடிக்காமல் காத்துக்கொண்டிருக்கிறேன். நீரே வந்து கதவைத்திறக்கவேண்டும்,

பவாநந்தர் என்னிடம் விடைபெற்றுக்கொண்டு போனார். நான் அவரை வாசல் மட்டும் கொண்டு விட்டுவிட்டுத் திரும்பினேன். என்றால் கூடியமட்டும் வீட்டிலுள்ளவொரு அறையையும் மூலை முடுக்குகளையும் இரகசிய அறைக்காகத் தேடிப்பார்த்தேன். அபிராமனை கேழ்விகள் கேட்டுப்பார்த்தேன். 50 வருஷகாலமாக வீட்டிலிருக்கிறான். அவன் ஏதாவதிருந்தால் தனக்குத் தெரியாமலிருக்க முடியாதென்றான். பேசிக்கொண்டிருக்கையில் மணி 11 அடித்தது. உடனே கதவைத்திறக்கப்போனேன்.

வாரும். உமக்காக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். என்றேன்.

எனக்கிதற்கப்புறம் ஒன்றும் தெரியாது. என் மண்டையில் ஒரு அடிபட்டது. உடனே அப்படியே பிரக்ஞையற்று கீழே வீழ்ந்துவிட்டேன். எனக்குப்பிரக்ஞை வந்தபோது நான் என் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தேன். தலை நோய் பலமாயிருந்தது, தலை கட்டப்பட்டிருந்தது. என்னைச்சுற்றிலும் பவாநந்தர், அபிராமன், சுந்தரியிருந்தார்கள்.

பவாநந்தர் நான் கீழ்வீழ்ந்து கிடப்பதைப்பார்த்ததாகச்சொன்னார். நான் பிரக்ஞையற்றுப்போய் 2-மணி அவகாசமாயிற்றென்றும் சொன்னார். வீட்டில் சாமான்கள் கொள்ளை போயிருந்தன. யார் எப்படி வந்தார்கள். போனார்கள் என்பவைகளை நாங்கள் அறியகூடவில்லை. எனக்கு பயக்கமுண்டாய் மறுபடியும் உறங்கிவிட்டேன். அபிராமன் ஓடிவந்து ஐயா ஐயா வாருங்கள் ஒரு அதிசயம் என்றான். என்றால் எழுந்திருக்க முடியாதிருந்தபோதிலும் பவாநந்தர் கையைப்பிடித்துக்கொண்டு கண்டாவரின் பள்ளியறைக்குப்

போனோம். படுக்கை விரிக்கப்பெற்றிருந்தது. அதில் கண்டவர் காணமற்போன நாளில் தரித்துக்கொண்டிருந்த உடைகள் போடப்பட்டிருந்தன. உடை பீரோவில் சில உடுப்புகளைக் காணோம். ஒரு செருப்பைக் காணோம் அங்கு வைக்கப்பட்டிருந்த தோல்பையையும் காணோம்.

பவாநந்தர் :—நான் நோங்கழித்து வந்துவிட்டேன் இவர்கள் இரகசிய அறையிலிருந்து இவனை வெளிக்கிளப்பி விட்டார்கள். அபிராமா! நீ வாசல் கதவுகள் பின்பக்ககதவு கள் பூட்டப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்துவிட்டுவா.

பவாநந்தர் ஜன்னலைத் திறந்து பார்த்தார். யாரோ ஒரு மனிதன் ஓடுவதைப் பார்த்தார். உடனே ஒரு விசில் கொடுத்தார், கான்ஸ்டேபிள் ஒருவன் வந்தான். ரயில் போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் தந்திகொடுக்க அவனிடம் சொன்னார். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் கண்டவரைக் கண்டால் பிடித்துவிடும்படி தந்தி கொடுக்கப்பட்டது.

அபிராமன் பின்புறக்கதவு தாப்பாளிடப்படாமலும்பூட்டப்படாமலு மிருப்பதாகச் சொன்னான். மேலும் இரகசிய அறையையும் கண்டதாகச் சொன்னான். நாங்கள் மெத்தையை விட்டுக் கீழிறங்கினோம். அபிராமன் மெத்தைப்படிக்கு அடுத்தாப்போல் ஒரு சிறிய கதவைக்காட்டினான். நாங்கள் காண்டல் விளக்குடன் கதவைத்திறந்து உட்புகுந்தோம் அந்தஅறைக்கைதிகள்அடைக்கப்படும்சிறையறைபோலிருந்தது. ஒரு மூலையில் ஒரு படுக்கையிருந்தது.ஒருமூலையில் சாப்பிட்ட உணவின் மிகுதி வைக்கப்பட்டிருந்தது. ஒரு நாற்காலி ஒரு விளக்கு இவைகள்தான் அங்கிருந்தவைகள். நாற்காலியின்மேல் ரயில்கைட் வைக்கப்பட்டிருந்தது

அதையப்படியே பவாநந்தர் எடுத்துக்கொண்டார். அந்தப்ப க்கத்தைப் பார்த்தார்,

"நான் அவரைப்பிடித்துவிட்டேன். அவர் போகும் வழி இதுதான். " என்றார் பவாநந்தர்.'

" எங்கு போகின்றார்? என்றேன்.

சதுரங்கபட்டணத்துக்கு செங்கல்பட்டிலிருந்து 18 மைல் தூரத்திலிருக்கிறது. செங்கல்பட்டிலிறங்கி ஒரு ஜட்காவைத்துக்கொண்டு சதுரங்கப்பட்டணத்துக்குப் போய் விடுவார்.

நான் :—" நீர் என்ன செய்யப்போகிறீர் ?

பவா :—அவரைத் துறத்திக்கொண்டு போகிறேன்.

நான் :—நானும் கூடவருகிறேன்.

அபிராமனும் எங்களோடு வருவதாகச் சொன்னான். விட்டுவிட்டுப் போனால் கழுத்துக்கு சுருக்குப் போட்டுக் கொண்டுஇறந்துபோய்விடுவேனென்றான்இப்படி அவன்சொல் வதைகேட்டு அவனையும்கூட கூட்டிக்கொள்வதைவிட வேறு வழியில்லை. நாங்கள் சுந்தரிக்கு சமாதானம் சொல்லிவிட்டு புறப்பட்டோம்.

செங்கல்பட்டு போய் சேர்ந்தோம். ஸ்டேஷன் பிளாட பாரத்தில் என் அத்தானைப் பார்த்து திடுக்கிட்டேன். நான் அவனை அங்கு எதிர்ப்பார்க்கவில்லை.

" என்ன அத்தான் அபூர்வமாய் இங்கெங்கு வந்தாய் யாருடன் வந்தாய் ? யாரை எதிர்பார்க்கிறாய்?" என்றேன்

" ஏன் நீ ஊரெல்லாம் குரங்காட்டியுடன் சுற்றி அலை கிறாய்? அவனெங்கே? அவனை உன் தூண்டுகோல் மே என்னை கவனித்துக்கொண்டிருக்கையில் கடைசியாகப்பா த்தது "என்று கேட்டேன்.

பவாநந்தர் இவர் யார்? எனக்குத் தெரிய வேண்டுமென்றார்.

"இவன்தான் என் அத்தான், குடிகெடுக்கி இவன்தான் எஜமானை அபாயத்திலாழச்செய்தவன் இவனில்லாவிட்டால் இவ்வளவு தொந்திரவில்லை." என்றேன்,

நாங்கள் சதுரங்கப்பட்டணம் போனோம். பவாநந்தர் கண்டீரவரைக்குறித்து கிராமங்களில் விசாரித்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. ஒருவேளை அவர் தந்திரமாய் ரயில்கபிடை அப்படி வைத்திருப்பாரோ? நாம் அலையவேண்டுமென்பதோ அவர் கருத்து? மறுபடியும் பவாநந்தர் அவர் குறித்தஅடையாளங்களுடைய மனிதன் கோவிலில் தங்கியிருக்கிறானென்று கேள்விப்பட்டு அங்குதேடிச் சென்றதும், அர்ச்சகர் அவர் அப்பொழுதே போய்விட்டதாகச் சொன்னார்.

நாங்கள் ஒரு சத்திரத்தில் புதிதாக இரு மனிதர்கள் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்றோம்,

என் அத்தான் வண்டியிலிருந்து கீழ் வீழ்நததால் பிரக்ஞையற்றிருந்தான். நான் அவன் வாயில் ஜலம்ஊற்றினேன். கண்ணைத்திறந்து எங்களைப்பார்த்து ஒரே அடியாய்க்கண்ணை மூடிவிட்டான்.

கண்டீரவர் எங்களை ஒன்று கேட்டுக்கொண்டார். அதாவது அவர் சொக்காயிலிருந்து வக்கீலுக்கு ஒரு கடிதம் எடுத்துக்கொடுத்தார்.

என்னை சிலர் அந்தரங்க சபையில் சேர்த்து விட்டார்கள். சபையார் ஒருவனின் உயிரை அவன் துரோகியாய் விட்டதற்காக போக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அத்தானுக்காகஎன்வசமிருந்த கடிதங்கள்சில சபையாருக்கு கிடைத்திருக்குமாகில் இவன் உயிர் அன்றே போயிருக்கும்,

அவனும் இறந்துவிட்டான். இனி என் உயிரும் நில்லாது. நீங்கள் இனி சுகமே சென்று வாழுங்கள்" என்றார்.

எஙகளுக்குண்டான விசனம் வெல்லற்கரியது. அவர்களிருவரும் இறந்தபிறகும் பிரியாத நண்பராயிருந்தார்கள். நாங்கள் அவர்களின் விதியின் பயனுக்காக வருந்தித் திரும்பினோம்.

சுந்தரியிடம் தந்தையிறந்துபோன சங்கதியை நான் சொல்லவில்லை. சிலமாதங்களுக்குப் பின் சொன்னேன். எனக்கும் வாழ்க்கையில் வெறுப்புண்டானதால் சுந்தரிக்கு கல்யாணம் செய்வித்தபின் விடைபெற்றுக்கொண்டு போய் விட்டேன்.

கல்யாணத்துக்கு பவாநந்தரும் வந்திருந்து தம்பதிகளை ஆசிர்வதித்தார்.

எஜமான் எங்கே? முற்றிற்று.

---

# ரணகாயம்.

நான் வண்டியில் போய்க்கொண்டிருக்கையில் ஒரு கேஸைப்பற்றிக் கேள்விப்பட்டு, குறித்த வீட்டுக்குப் போனேன். வீட்டுவாசலில் பல ஜனங்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். இரண்டு போலீசார்களையும் பார்த்தேன். நான் வந்திருப்பதை அறிந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் வெளியே வந்து,

"வாரும், வாரும் தாங்கள் தாமதமின்றி வந்து சேர்ந்ததற்காக சந்தோஷப்படுகிறேன். எங்களால் இந்தக்கேஸில் தலையும் காணமுடியவில்லை, வாலும் காணமுடியவில்லை.' என்று சொன்னார்.

நாங்களிருவரும் வீட்டிற்குள் நுழைந்தோம். ஒரு கிழவி மிக்க விசனமாய் அழுதுகொண்டுட்கார்ந்திருந்தாள். ஒரு வேலைக்காரியுமங்கிருந்தாள். பலபேர் பேசும் சப்தம் கேட்டது. போலீஸ் இன்ஸ்பெக்டர் அக்கிழவியைப் பார்த்து,

"பாட்டி நடந்த விஷயத்தை இவரிடம் சொல்லும்" என்றார்.

அக்கிழவி ஏதோ முணுமுணு என்று சொன்னாள். அவள் சொன்னது ஒன்றும் கேட்கவில்லை. இதைக் கண்டு கொண்ட இன்ஸ்பெக்டர் வேலைக்காரியைப் பார்த்து,

"எஜமானியம்மாள் விசனம் நீங்க சில தினங்கள் பிடிக்கும். நீ இவ்விஷயத்தைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்" என்றார்.

அலமேலு கண்ணை முந்தாணியால் துடைத்துக்கொண்டு, நடுநடுங்கி

நேற்று மத்தியானம் பாலாம்பாள் எங்கள் எஜமானியை பார்க்க வந்தாள். இவர்களிருவருக்கும் உறவுண்டு. நான் சமையலுக்காக வேகவைத்த உருளைக்கிழங்குகளின் தோலியை உரித்துக்கொண்டிருக்கையில் சின்ன எஜமானி இரவு 8 மணிக்கு சாப்பாடு முடிந்ததும் 10-மணிவரையில் உல்லாசமாய் பாலமும் எஜமானியும் பேசிக்கொண்டிருந்தார்கள். 10-மணிக்கு எஜமானியுடன் பால் முதலியவைகளை எடுத்துக்கொண்டு பள்ளியறைக்குச் சென்று விட்டு விட்டுத் திரும்பும் பொழுது, பாலாம்பாள் குடிப்பதற்கு ஜலம் கொண்டு வரும்படி என்னைக் கூப்பிட்டுச் சொன்னாள். அப்படியே கூஜாவில் ஜலம் கொண்டுபோய் கொடுத்துவிட்டு நான் படுக்கச் சென்றேன். கண்விழித்து காலை 6-மணிக்கு வீட்டிற்குள் போனபொழுது முறுகல் என் காதில் வீழ்ந்தது. காது கொடுத்துக் கேட்டுக் கதவை இடித்துப் பார்த்தேன். பதில் காணோம், மெதுவாய் கைபிடியால் அறையைத் திறக்கப் பார்த்தேன். முடியவில்லை பூட்டப்பட்டிருந்தது. கதவை ஓயாமல் இடித்து,

'அம்மா? என்னது ! கதவைத் திறங்கள் என்று கூவினேன். மறுபடியும் பதிலொன்றும் காணோம். உடனே என் எஜமானியிடம் ஓடிப்போய் அவளையும் கூட்டி வந்து கதவை இடித்தேன். கதவு திறக்கப்படாததால் அதை உடைத்து உள் நுழைந்தோம். அக்கொடுங் காட்சியால் பிரக்ஞையற்று என் எஜமானி மூர்ச்சித்தாள், படுக்கையின் அடியிலிருந்து இரத்தவெள்ளமாய் ஒரு தலை அசைந்து கொண்டு மேலே வந்தது. பிறகு தோள்களையும் கண்டோம். பாலாம்பாளைக்காணோம். நான் போலீஸ்டேஷனுக்கோடினேன். போலீசார்டாக்டர் அந்த அறையிலிருக்கிறார். அந்த மனிதன் என்றாள் முடிக்கவில்லை விம்மிஅழத்துடங்கினாள்.

நான் எழுந்து அந்த அறைக்குள் போனேன். உயரமான ஒருவர் சோபாவிலிருந்த ஒரு மனிதனைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு நாற்காலியின் மேல் தண்ணீர் தொட்டியும் கை துடைக்கும் துணியும், கத்தி முதலிய கருவிப் பெட்டியும் வைக்கப்பட்டிருந்தது. கதவண்டை இரண்டு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் போகும்படி அவர்களுக்கு சைகை செய்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் டாக்டர் தம் வேலை முடிந்தபின் என்னைப் பார்த்து,

"ஐயா! இது விபரீதமான விஷயமாயிருக்கிறது" என்றார்.

"உயிரிருக்கிறதோ இல்லையோ?" என்றேன்.

"உயிரிருக்கிறது. இந்த நிமிஷமோ அடுத்த நிமிஷமோ என்றிருக்கிறது. மண்டையோடு உடைந்துபோயிருக்கிறது. தலைமேல் பிரமாதமான அடிப்பட்டிருக்கிறது. அந்த கூஜாவால் அடித்திருக்கவேண்டும். இரத்தக்கறையிருக்கிறது." என்றார். நான் சோபாவிலிருந்த மனிதனைப் பார்த்தேன். அவர் முகத்தில் மீசையிருந்தது. ஒரு சொக்காய் போட்டுக்கொண்டிருந்தார். இவர் முகத்தை இதற்கு முன் நான் பார்த்ததில்லை.

நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் முன் அவருடைய சொக்காய் ஜோப்புகளை சோதனை செய்தேன். ஒரு பணப்பை யிருந்தது. அதில் 40 சாவரன்களிருந்தன. ஒரு பேனாக்கத்தியும் கைதுப்பாக்கியு மிருந்தன வேறொன்றுமில்லை.

துப்பாக்கியைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டரும் டாக்டரும் சிரித்தார்கள். இனியென்ன கஷ்டம் துப்பாக்கியிலிருந்து உளவறிந்து கொள்ளலாமே என்றார் இன்ஸ்பெக்டர்.

இதற்குள்ளாக வண்டி ஒன்று ஆஸ்பத்திரியிலிருந்து வந்தது. அதில் காயப்பட்டமனிதனை எடுத்துக்கொண்டு போனார்கள். டாக்டரும் போலீசார்களும் வண்டியைத் தொடர்ந்து சென்றார்கள்.

நான் பக்கத்திலிருந்த இனிஸ்பெக்டரை அவர் வந்த பின் பார்த்தவைகளை சொல்லும்படி கேட்டேன்.

நான் உட்பிரவேசிக்கையில் இந்த மனிதன்நினைவில்லாமல் கவுந்து படுத்துகொண்டிருந்தான். இவனின் பாதி உடம்பு படுக்கையின் கீழிருந்தது. நாற்காலி, கூஜா முதலியவை இருந்த இடத்திலேயே யிருந்தன. அந்த மனிதனின் தலைகுட்டை படுக்கையின் கீழிருக்கிறது." என்றார்.

"ஜன்னல் திறந்துதானே இருந்தது.என்றுகேட்டேன்

ஆம் இதே மனிதனை நான் பசுமலைத் தாலூக்காவில் ஒரு சேவில் லாகப்பில் வைத்திருந்தேன்,இவனுடன் கைது செய்யப்பட்டவர் நான்கு பேர்கள். அவர்களிடமெல்லாம் இதேமாதிரி துப்பாக்கிகள் இருந்தன அவன் பழைய குற்றவாளி. யார் அவனை அப்படி செத்தினது? அந்த ஸ்திரீ எங்கே? என்றார் இன்ஸ்பெக்டர்.

நான் படுக்கையறையை கவனமாய் சோதனைபோட்டு பார்த்தேன். படுக்கையைப் பார்த்ததில் அதில் பாலாம்பாள் உறங்கவில்லை யென்று கண்டுகொண்டேன். கம்பளத்தைத் தவிர வேறொன்றிலும் இரத்தக்கரையைக் காணோம். டாக்டர் சொன்னது சரி.அந்த கூஜாவால்தான் அவள் இவன் தலையில் மோதியிருக்கவேண்டும். அவன் தலைகுட்டையை படுக்கையிலிருந்து இழுத்து நாற்காலியின் மேல் வைத்தேன்.

இன்ஸ்பெக்டர் கதவண்டை ஒரு கைகுட்டை யிருப்ப தாகச் சொன்னார்.

அதை வாங்கிப் பார்த்தேன். அதிலிருந்து ஒன்றும் தெரிய முடியவில்லை. பிறகு நாகரத்தினமிருந்த அறைக்குப் போனோம், அவள் நான் கேட்கும் கேள்விகளுக்குப்பதில் சொல்லுவாள்போலிருந்தது. துக்கம் சற்று சமாதானமடைந்ததுபோலும்.

ஐயா ! பாலாம்பாள் என் தம்பியின் மகள். அவள் எங்கள் வீட்டுக்கடிகடி வருவதுண்டு. நேற்று காலையில் அவள் மாலைவருவதாக செய்திசொல்லி யனுப்பினாள். வந்தபின் இராத்திரியே புறப்பட்டுப்போகவேண்டுமென்றாள். பிறகு நான் இருக்கும்படி நிர்பந்தித்தேன். தங்குவதாகத்தீர்மானத்துக்கு வந்தாள். சாப்பிட்டபின் பேசிக்கொண்டிருந்தோம். 10-மணிக்குப் படுக்கச்சென்றோம். காலையில் அலமேலு என்று சொல்லிமுடிக்குமுன் நான்,

“சரி அவள் வாய் மூலியமாயே எல்லாம்கேட்டுக்கொண்டேன். பாலாம்பாளுக்குக் கல்யாணமா யிருக்கிறதா ? என்றேன்.

“எங்களில் கல்யாணம் செய்துகொள்வதில்லை. யாராவதொருவரைக் கணவராக வைத்துக்கொள்வது. எங்களுக்கிஷ்டமில்லையானால் அவரை விட்டுவிடுவது. அப்படியே பாலாம்பாள் ஒருவரிடமிருந்து பிரிந்து விட்டாள்.

அவரைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?

அவரும் இன்னும் சிலரும் ஏதோ ஒரு திருட்டில் சம்பந்தப்பட்டதாக பிரஸ்தாபமிருந்தது.

“உன் மருமகள் வந்தபொழுதுடைகொண்டுவந்தாளா,

"ஆம் ஒரு பை கொண்டுவந்தாள்.

கதவு திடீரெனத் திறக்கப்பட்டது. ஒரு ஸ்திரீ தடபுடலாய் வந்துநாகரத்தினத்தின் கழுத்தைகட்டிக்கொண்டு,

"அத்தை! அம்மா! மிக்ககோரமானது! எனக்கு பயித்தியம்தான் பிடிக்கவில்லை. கடவுள்செயல்என்றுகதறினாள்.

நிலத்தில் வீழ்ந்து முகத்தை முந்தாணியில் மூடிக்கொண்டு விம்மி அழத் தொடங்கினாள். நாகரத்தினம் குனிந்து அவளைத் தடவிக்கொடுத்தாள். அவளுக்குத் தேறுதலுண்டாக்க,

"பாலம். தெய்வச்செயலால் ஒன்றுமில்லாமல் சௌக்கியமாயிருக்கிறாய். அவர்கள் உன்னைக்கொன்று விட்டார்களென்று நினைத்து வருந்தினேன். மனதுக்கு மிகவும் அசமாதானமாயிருந்தது. நீ எங்கிருந்தாய்? எப்படி வந்தாய்? என்னவிஷயம் நடந்தது? இவர் சேதியை அறிய வந்திருக்கிறவர். பயமில்லாமல் சொல்லம்மா என்று சொன்னாள்.

பாலம்பாள் என்னைஏறெடுத்து சற்றுநேரம் பார்த்தாள். அவள் பார்வைக்கு இலக்ஷணமுடைய ஒருமாது. அவள் மிகவும் அடக்கமுள்ளவள் என்று தோன்றிற்று. அவள் அனேக தொந்திரைக்குள் உழன்று தப்பினவள்என்று ஊகித்தறிந்து கொண்டேன்.

தனக்குள்ளே பாலம் தேறுதல் செய்துகொண்டு,

நேற்றிரவு நான் படுக்கப்போனபின் அலமேலுவைக் கூப்பிட்டு குடிக்க ஜலம் கொண்டு வரும்படி சொன்னேன். அவள் கூஜாவில் ஜலம் கொண்டுவந்து நாற்காலிமேல்வைத்துச்சென்றாள். பகலெல்லாம் நான்சிரமப்பட்டதால்மெய்மறந்து படுக்கையில் சாய்ந்து யோசித்துக்கொண்டிருந்தேன். விளக்கு வெளிச்சத்தில் எனக்குத் தூக்கம் பிடிக்காததால்,

எழுந்து விளக்கை யணைக்கச் செல்லுகையில் படுக்கையின் கீழ் கிரீச்சப்தம் ஒன்று கேட்டது. மூச்சையடக்கிக்கொண்டு காது கொடுத்து கேட்டேன். சப்தம் இருக்க இருக்க தெளிவாய்க் கேட்டது. யாரோ மூச்சு விட முடியாமல் முக்குவது போலிருந்தது. அச்சமயம் ஜன்னல்சாத்த மறந்துபோனது ஞாபகத்துக்கு வந்தது. நான் கூக்குரலிட்டிருப்பேன். ஆனாலும் மனதை தைரியப்படுத்திக்கொண்டேன். சுற்றிலும் பார்க்கையில் படுக்கையின்கீழிருந்து ஒருகை கிளம்புவதைக் கண்டேன். அதன்பின் மயிர் நிறைந்த தலை வெளித்தோன்றிற்று. இவையெல்லாம் எப்படி உண்டாயின? எனக்கு ஞியாபகமிருக்கிறதெல்லாம் நான் கூஜாவை யெடுத்து தலையை அமுக்கினதுதான். விளக்கு வெளிச்சத்தில் அறையிலுள்ள பல மனிதர்கள் என்னை அடித்துக்கொல்ல முயற்சிக்கிறார்களென்று மனதுக்குத் தோன்றியதால் உடலெல்லாம் நடுநடுங்கிற்று. என்மேல் அடிகள் விழுந்ததாகவும் தோன்றிற்று:—நான் அவனைக்கொன்றேனோ? நான் பார்த்த தலையசையாமலிருந்தது. எனக்குத் திகிலுண்டாய் விட்டது. அதைப்பார்த்து நான் சகிக்கக்கூடாமலிருந்தது. நான் எழுந்து ஜன்னலில் ஏறிக்குதித்து ஓடினேன். எவ்வளவு தூரம் எவ்வளவு வேகமாய் ஓடினேனோ தெரியாது. கிழக்கில் வெளிச்சமுண்டாயிற்று. நான் புதுவாஞ்சேரிக்கு வந்துவிட்டேன் என்று கண்டுகொண்டேன், தேகம் மிக அலுப்படைந்திருந்தது. ஒரு கிழவி வீட்டில் புகுந்தேன். அவள் என்னைக் களைப்பு தீர்க்கச்செய்தாள். ஒரே ஓட்டமாய் அங்கிருந்து இங்கு வந்துவிட்டேன்." என்று சொன்னாள்.

பிறகு என்னை நோக்கி, "இங்கென்ன நடந்தது என்று வினவினாள்.

"அந்த மனிதன் குத்துயிராய் நிலத்தில் கிடந்தான். நான் அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்தேன்" என்றேன்.

அவர் இறக்கவில்லையே என்றாள்.

ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லுகையில் உயிர் துடித்துக்கொண்டிருந்தது. இப்போது போய்விட்டதோ இருக்கிறதோ எனக்குத்தெரியாது. நீ மிக்க பலமாய் இடித்துவிட்டாய். அவனை எங்கேயாவது முன் பார்த்திருக்கிறாயா? என்று கேட்டேன்.

நான் இடிக்கு முன் தலையின் பின் புறம் தான் பார்த்தேன். இடித்த பிறகுமுகத்தை நான் பார்க்கவேயில்லை."

அப்படியாயின் ஆஸ்பத்திரிக்கு நாமிருவரும் போகலாமா? இருக்கட்டும். முதலில் அவன் எப்படி யிருக்கிறானென்பதை அறியவேண்டும். இது உன் கைக்குட்டையா?

"ஆம் என்னுடையதுதான். சாவி எப்பொழுதும் அதன் நுனியில் கட்டிவைப்பேன். அதை இழந்துவிட்டேன் என்று நினைத்தேன்"

மணியோசை கேட்டது. என்னைத் தேடிக்கொண்டு நாராயணசாமி வந்தார். நான் அவருடன் இங்குநடந்த கேஸைச்சொல்லி,

"நீர் அரைமணிநேரம் இங்கிரும். நான் போய்விட்டு வந்துவிடுகிறேன்" என்றேன்.

"அந்தமனிதனை எனக்குத்தெரியும், ஏதாவது முக்கிய விஷயம் உமக்குத்தோன்றுகிறதா?" என்று கேட்டார்.

"அநேகவிஷயங்கள் என்மனதுக்குட்பட்டிருக்கின்றன. இராக்ஷசகாரியம். நான் போகவேண்டும்." என்றேன்.

நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று டாக்டரை அந்த மனிதன் எப்படியிருக்கிறானென்று கேட்டேன்,

"அவனுடைய உயிர் பிரமாதமானது. அந்த இடிக்கு எந்த மனிதனும்பிழைந்திரான். இன்னும் அவன் பிரக்ஞையற்றுத்தான் இருக்கிறான். கூடிய சீக்கிரம் பிரக்ஞைவரும். யார் திருடனோ" என்று என்னைக்கேட்டார்.

"அம்மாதிரிதானிருக்கிறது. அவனுக்கு ஞாபகம் வந்ததும் எனக்குச் சொல்லும்"

நான்குநாள் அவன் உயிர் இழுத்துக்கொண்டிருந்தது. என்னுடைய காரியத்தினிடையே நான் பாலாப்பாளைப்பற்றிய சில விஷயங்கள் அறிந்துகொண்டேன். அவளின் காதலன் இராமலிங்கன் என்பவன் பொய்க் கையெழுத்துப்போட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டு 4வருஷம்சிக்ஷைபெற்றான். இதற்குப் பிறகு பாலம் ஆசை நாயகனாக பலராமனை வைத்துக்கொண்டிருந்தாள். அவன் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டாயிருந்தானன்றி அவனுக்கு வரும்படி யொன்றும் மில்லாமலிருந்தது. அவன் 6 மாதமாக இருந்த வீட்டுக்கு குடக்கூலி கொடுக்கவில்லையாம். இப்படி யிருக்கையில் திடீரென குபேரனாய் விட்டானாய்: அவன் இரண்டு குதிரை கட்டிய வண்டியில் தினம் சவாரி செய்கிறான்.

ஐந்தாம் நாள் நாராயணசாமி என்னிடம் வந்து டாக்டர் அந்த மனிதனுக்கு இனி பயமில்லையென்றும் ஞாபகம் வந்திருக்கிற தென்றும், சொல்லும்படி அனுப்பிவித்ததாகச்சொன்னார். நான் உடனே ஆஸ்பத்திரிக்குப்போனேன் அந்த மனிதனை 3 டாக்டர்கள் பரிசோதனை செய்துகொண்டிருந்தார்கள். ஒரு தாதி தயாராய் நின்று கொண்டிருந்தாள்.

"இத்தகைய கேஸ் இது வரையில் நான் பார்த்ததே யில்லை. விபரீதமாயொன்று மேற்படாவிட்டால் இம்மனிதன் சொல்பகாலத்துக்குள் நடக்கும் சக்தியுள்ளவனுவான். இரத்தச் சேதத்தால் மிக்க தளர்வடைந்திருப்பான். இருந்தாலும் சீக்கிரத்தில் அவனுக்குப் பலமுண்டாகும். பரிதாபம்! இவன் உயிர் பிழைப்பதனுல் இவன் காவலில் நெடுங்காலங் கழிக்கவேண்டும். இவன் பழையாசாமியோ?" என்று முக்கிய டாக்டர் என்னைக் கேட்டார்.

"இருந்தாலுமிருக்கலாம். அப்படித்தான் சொல்லிக் கொள்ளுகிறுர்கள். இவரைப்பார்க்க நான் பாலாம்பாளைக் கூட்டி வரலாமா?" என்றேன்.

"அப்படியே செய்யும் நாளை காலையில் அவனுக்கு நினைப்புண்டாகுமுன்னமே வந்து விடுங்கள்."

நான் ஆஸ்பத்திரியிலிருந்து வந்து நாளைக்கு காலையில் புறப்படத் தயாராயிருக்க, செய்தி பாலாம்பாளுக்கு சொல்லியனுப்பிவித்தேன். அப்படியே அவள் தயாராயிருந்தாள். ஆஸ்பத்திரி வந்தோம். அந்த மனிதன் நாங்கள் போன பொழுது கண்மூடிக்கொண்டு படுத்திருந்தான்.

"இவனை உனக்குத் தெரியுமா?" என்றேன்.

வெளிர்த்த முகத்தை அவள் பார்த்ததும் அவள் உடலெல்லாம் நடுங்கவாரம்பித்தது. பயத்தால் முகத்திலுள்ள இரத்தமெல்லாம் போய்விட்டது. பேச முடியாதவளாய் தலையைமட்டும் அசைத்தாள். சற்றுப்பொறுத்து,

"இல்லை, நான் இவரை இதற்குமுன் பார்த்ததில்லை" என்றுள்.

"நிச்சயமாய்?"

“நிச்சயம்”

“அப்படியானால் நாம் போகலாம். தாமதமென்ன?

டாக்டர் சொன்னபடியே அந்தமனிதன் சொஸ்தமானான். அவனுடைய அங்கங்களின் அளவு எடுக்கும்படி சொன்னேன். அவனையாரும் இன்னானென்று சொல்லக் கூடவில்லை. குருநாதன் என்ற கான்ஸ்டேபிள் இதேமனிதனை பாக்கியக் கோனுடன் பார்த்திருப்பதாகச் சொன்னான். பாக்கியக் கோனன் பழந்திருடனென்றும் இப்பொழுது ஜயிலில் 7-வருஷக்காவல் அநுபவிக்கிறானென்றும் சொன்னான்.

இரண்டொரு தினங்களுக்குப் பின் நாராயணசாமியும் நானும் ஆஸ்பத்திரிக்குப் போனோம். டாக்டர் நாங்கள் அம்மனிதனுடன் வார்த்தை யாடலாமென்றார். மேலும் அடுத்தவாரம் அவன் விசாரணை செய்யப்படலாம். என்றார்.

“அவர் ஏதாவது பேசினாரா?” என்றேன்.

“தேகசௌக்கியத்தைப் பற்றி பேசினான். தனக்கு வேண்டியவைகளைக் கேட்டான்”

நான் போகும்பொழுது அவர் ஏதோ படித்துக்கொண்டிருந்தார்,

“உம் பெயரென்ன?” என்று கேட்டேன்.

அவர் பேசவில்லை.

“நீர் ஏன் நாகரத்தினத்தின் வீட்டுக்குப்போனீர்?”

இதற்கும் பதில் ஒன்றுமில்லை.

“நீர் ஆஸ்பத்திரியை விட்டுப்போகும் பொழுது உம் மேல் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்படும் என்று உமக்குத்தெரியுமா?”

அவர்கையை அசைத்தார்.

"மேஜிஸ்திரேட் விசாரணைக்குமுன் உண்மை மிமாண்டில் வைத்திருப்பார். நீர் நாகரத்தினத்தின் வீட்டுக்கு கெட்ட எண்ணத்துடன் போகவில்லை யென்றால் இது தான் சமயம் அதை வெளியிடுவதற்கு." என்றேன்.

அவர் கையை ஊன்றிக்கொண்டு தலையைத்தூக்கிப்பார்த்தார். பதிலொன்றும் சொல்லவில்லை.

"நீர் எப்பொழுதுவீட்டை விட்டுப் புறப்பட்டீர்"? என்று அவர்திகைக்கும்படி கேட்டேன்.

அவர் உடம்பு நடுங்கிற்று. அவர் கண்பார்வை விசாரமாக மாறிற்று. சில நிமிஷங்கள் ஏதோ பேசுபவர்போல் உதட்டை அசைத்தார். பிறகு போர்வையை போர்த்துக் கொண்டு சுவர்புறம் திரும்பிக்கொண்டார்.

இனி அங்கிருப்பதில் பயனில்லை யென்றறிந்து எழுந்து நானும் அவரும் வெளிவந்தோம். நாங்கள் தெருவுக்கு வந்ததும் அவர் முகத்திலிருந்து அவர் ஏதோ கேட்க விரும்புவதாக அறிந்துக்கொண்டேன்.

"உமக்கு நான் வீட்டைப்பற்றிக் கேட்ட கேள்வியின் உட்கருத்தை யறிந்தீரா? என்று கேட்டேன்,

"அது புறியவில்லை. அதை எப்படி யறிந்தீர்"என்றார்.

அதா? சாதாரணமானதுதான். நான் அவரை சோதனை செய்தபோது அவர் உடை முதலியவற்றையும் நன்றாய் பார்த்தேன். அவர் ஷர்ட்டில், எஸ், என்று போட்டிருந்தது. கை குட்டையிலும் அதே எழுத்துத்தானிருந்தது. நான் புத்தானைபார்த்தபொழுது அதில் சில எழுத்துக்கள் மழுங்கியிருந்தன. பூதக்கண்ணாடியால்பார்த்து ஊரைக்கண்டுகொண்டேன்.

" அவர் ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவருமுன் சகல விஷயங்களையும் துப்பறிந்து விடுவீர்" என்று நம்புகிறேன்.

இல்லை. அவ்வளவு எளிதானதல்ல. சில நவீனமான தீர்மானங்களுக்கு வந்திருக்கிறேன். அவைகள் எவ்வளவு சரியான தென்பதை சோதித்தறியவேண்டும். ஜட்ஜுகள் ஜூரிகளில் உண்மையை உண்மையென்றறியும் சாமார்த்திய முள்ளவர்கள்மிக்கஅபூர்வம். படுக்கையினடியில்ஒருமனிதன் ஒளிந்திருந்தான். அவனை ஒரு ஸ்திரி காண்கிறாள். அவள் அவனை மரணகாயப்படுத்துகிறாள். அவள் தற்காப்பு நியாயப்படி செய்தது சரியானதே. அந்த மனிதன் ஒன்றும் பேசுவதாக வில்லை. யாரென்றறியவும் முடியாமலிருக்கிறது. அவனை விசாரணைக்கு போலீசார் கொண்டுவருவார்கள். மாஜிஸ்திரேட் அவனைகுற்றவாளி யென்று தீர்மானித்து செஷனுக்கு கமிட் செய்வார். ஏனென்றால், போலீசார் அவனை முன்போல பல கேசுகளில் சம்பந்தபட்டவனென்று சொல்வார்கள். ஜட்ஜ் ஜூரிகள் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு தண்டனை விதிப்பார். ஜட்ஜ் ஜட்ஜ்மெண்டில் ஒரு ஸ்திரி மிகசாமார்த்தியமாய் நடந்துகொண்டு ஒருபழைய திருடனைப் பிடித்ததற்காக மெச்சிப்புகழ்ந்தெழுதுவார். இதெல்லாம் தெரிந்ததே. உண்மை யின்னதென்று தெரிய விரும்புகிறேன்."

சிலதினங்களில் பவாநந்தர் உளவுக ளொன்றையும் அறியமுடியவில்லை. நான் பிரதாபனைப்பற்றி அறிய விரும்பினேன். அவன் வேறெங்கோ போய்விட்டதாகக்கேள்விப்பட்டேன். ஆஸ்பத்திரியிலுள்ள மனிதனின் புகைப்படத்தை பலதிக்குகளிலும் அனுப்பினேன். விசேஷமாய் ஒன்றும்

தெரியவில்லை. அவனைப்பற்றிய விஷயங்கள். அவனை நல்ல வனென்றே நினைக்கும்படியாயிருந்தன.

அவளை எனக்கு அனேக வருஷங்களாகத் தெரியும். அவள் உழைப்பாளி. எல்லாரும் அவளை நன்குமதிக்கிறார்கள். அவள் முதல் புருஷன் அவளுக்கு மிக்கவிசாரத்தையுண்டாக்கியது. அவர் ஒருவரிடம் பெருத்தசம்பளத்திலிருந்தார். எஜமான் கையெழுத்தைத் தாம் போட்டுவிட்டதால்குற்றஞ்சாட்டப்பட்டதில் பணத்தையெல்லாம் இழந்துவிட்டார்." என்று போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

நான் இந்த விஷயங்களைப்பற்றி ஆழ்ந்து யோசித்துப் பார்த்தேன். ஏதாவது தீர்மானத்துக்கு வரலாமென்று பார்த்தேன். அவன் ஏன் வாய் திறவாமலிருக்கிறான்? அவன் வேறொரு காரியத்துக்காக பாலாம்பாள் வீட்டிற்கு வந்தானாகிலும் என்ன காரணத்தால், திருட்டுக் குற்றஞ் சாட்டப்பட்டபொழுது மௌனம் சாதிக்கிறான். இதையில்லையென்று ருசுப்படுத்த உண்மையான செய்தியைச் சொல்லவேண்டும். உண்மை என்ன? பாலாம்பாள் இவனைப்பற்றி ஒன்றும் தெரியாதென்றபோதிலும் நான் நம்பமாட்டேன். அவனை அவளுக்கு நன்றாய்த்தெரியும். இவர்களிருவரும்ஒன்றுமே சொல்லாமலிருந்தால், நான் உண்மையை அறிவதெப்படி? ஒரு சமயத்தில் எப்படியோ போகட்டும் நமக்கென்னவென்று கூட நான் நினைக்கும்படியிருந்தது. ஆனாலும் முயற்சி செய்து பார்ப்போமென்று பாலாம்பாளுக்குசொல்லியனுப்பிவித்தேன்.

அவள் வந்தாள். நான் அவளைப் பார்த்து,

"அம்மா! நான் முன் உன்னைக் கேட்ட கேள்வியையே மறுபடியும் கேட்கிறேன். அந்த மனிதனை உனக்குத் தெரியுமா, தெரியாதா?" என்று கேட்டேன்.

"தெரியாது" என்றாள்.

"நீ அவனை இதற்குமுன் பார்த்ததில்லையா?

"பார்த்ததே கிடையாது."

"நீ சத்தியமாய் சொல்வாயா?"

"உமக்கு வேண்டிய சமாசாரங்களைச் சொல்ல வந்திருக்கும் என்னை இப்படி கேட்பது சரியா? என் வார்த்தையில் உமக்கு நம்பிக்கையில்லையா?

சரி இதிருக்கட்டும். நீ அவனைக் காயப்படுத்தி விட்டு இரவெல்லாம் புத்தி சுவாதீனமில்லாமல் எங்கோபோனது ண்மையா?"

அவள் இருந்த நாற்காலியைவிட்டெழுந்து முன்வந்து, "என்ன அர்த்தமென்று ஐயா பேசுகிறீர்:" என்றாள்.

"என்ன அர்த்தமா? நான் ஏமாந்துபோவதில் எனக்கு பிரியமில்லை. நீ என்னை ஏமாற்றப் பார்த்தாய். இருக்கட்டும். உட்கார்ந்துகொண்டு, நான் சொல்வதைக் கவனமாய்க்கேள். முக்கியமான விஷயம். நீ அறையிலிருந்து சென்று ஓடினதும், விடியும்வரையிலும் அப்படியே சென்றதும், நம்பக்கூடியனவாயில்லை. ஒரு நியாயஸ்தலத்தில் நீ சொல்வதைக் கேட்டு எல்லாரும் பரிதாபப்படலாம். அதைநம்பலாம். நான் நம்பமாட்டேன். அது உண்மையில்லையென்று எனக்குத்தோன்றுகிறது. நான் உடனே உன் அத்தைவீட்டைவிட்டுச்சென்றேன். நான் ஒருகடிதம் எழுதி நீதங்குமிடத்திற்கு ஒருஸ்திரீயிடம் கொடுத்தனுப்பினேன். நீ எப்பொழுது வீட்டைவிட்டு வந்தது என்பதை அறிந்து வரும்

படியாயும் சொல்லியனுப்பினேன். அப்பெண் நீ நேற்று இராத்திரி போது கழித்து வீட்டுக்கு வந்ததாகவும், காலையில் புறப்பட்டுப் போனதாகவும் செய்திகொண்டுவந்தாள். நான் ஏன் நீசொல்வதில் அவநம்பிக்கைகொள்கிறேனென்பது உனக்கு இப்பொழுது தெரிகிறதா.”

“நீர் குற்றவாளிகளுடனே பழகுவதால். எல்லாரையும் குற்றவாளியென்று நினைக்கிறீர்.”

அவள் என்னை குரூரமாய்ப்பார்த்தாள், நான் சற்றுப்பொருத்து மறுபடியும்.

“நீ ஏன் அவனை அப்படி அடித்துக்காயப்படுத்தினாய்?” என்றேன்,

அவள் வாய்குழற முகத்தை முந்தாணியில் மறைத்துக் கொண்டு. தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள்.

பாலாம்பாள்! நான் உன்னிடம் மூர்க்கமாய் இருந்ததற்காக கோபித்துக் கொள்ளாதே. விஷயத்தின் உண்மையை நானறிந்தே தீரவேண்டும். ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் அவன் எவ்வளவு கெட்டவனாயினும். அவன் செய்யாத குற்றத்துக்காக அவனைத்தண்டனைக்குட்படுத்துவது எனக்கு சம்மதமில்லை. உன்னைப் பொருந்தியமட்டில், இதைமுடிப்பதற்குள்.

நீர்தான் என்பிதா கடவுள். என்னைக்காப்பாற்றுவதாக வாக்குக்கொடும். சகலத்தையும் செப்பிவிடுகிறேன். நான் குற்றவாளியல்ல என்று விம்மி அழுதுகொண்டு பாலாம்பாள் சொன்னாள்.

“குற்றவாளியல்லவென்று நீ சொல்லவேண்டிய தனவசியம், நீ குற்றவாளி யென்று எப்பொழுதும் எனக்குசந்தேகமுண்டாகவேயில்லை.”

"நான் குழந்தையாயிருக்கும்பொழுது பாரதப் புஸ்தகத்தில் நரகவேதனைப் படத்தைப் பார்த்திருக்கிறேன். பாபிகள் காயும் எண்ணெய் கொப்பரையினின்று வெளிவர முயலுவதும், அவர்களை அதிலிருக்கச் செய்ய சிலர்ஈட்டிகொண்டு குத்தித்தள்ளுவதும் என் மனதில் அப்படியே பதிந்திருக்கின்றன. அதுமாதிரி என் வாழ்க்கையுமென்று நான் கனவிலும் கருதவில்லை. இப்பொழுதுதான் நான் குற்றமாகிய உலகத்திலேயே வாழ்வதாக எண்ணஞ்செய்தேன். அந்தகையபாபி நான் என்ன பாபத்திற்கு இவ்வேதனைப்படுகிறேன். நான் எப்பொழுதும் நேரான வழியிலே நடக்க முயற்சித்து வருகிறேன்."

என் தாயார் இறக்கும்பொழுது எனக்கு வயது பத்து. ஒருநாள் என் தந்தை பண அபகாரத்துக்காக கைது செய்யப்பட்டார். அவர் ஜயிலிலே இறந்துபோனார். என் அத்தையிடம் வந்து சேர்ந்தேன். எனக்கு புருஷனாக ஏற்பட்டவர் அழகாயிருந்தார். நல்ல விவேகி. அவர் தக்க உத்தியோகஸ்தர். என் அதிஷ்டம், பாக்கியமென்று என் தோழிகளெல்லாம் சொல்லிக்கொண்டார்கள். அவர் மதி உமக்குத் தெரியும். பொயக்கையெழுத்துப் போட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். அவரை பிறகு மறந்துவிட்டேன். சிலகாலம் சும்மா வாழ்ந்து வந்தேன். பிறகு பிரதாபனின்நேசம்கிடைத்தது. இவர் எனக்கு என்ன வேண்டுமானாலும் கொடுத்துக்கொண்டிருந்தார். அவர் கபடி, அயோக்கியர் என்பது எனக்குத் தெரியவந்தது. அவர் என்னை ஒரு இராணி மாதிரி வேஷம் போட்டுக்கொள்ளச்சொல்லி மோசஞ்செய்து பணம் அபகரிக்கப்பார்த்தார். நான் இதற்கு சம்மதிக்கவில்லை. என் தலைவிதி எனக்கு வாய்ப்பவர்களெல்லாம் இத்தகையர்களாயிருக்கிறார்கள்.

"இதற்குப்பின் சுந்தரனின் சிநேகம் எனக்குக் கிடைத்தது."

"ஆஸ்பத்திரியிலிருக்கும் மனிதனா? என்று கேட்டேன்

ஆம் அவர் நாடகம் பார்க்க டிக்கட்டுகள் அனேகதடவைகளில் எனக்குக் கொடுத்திருக்கிறார். என் கூடவும் வருவார். எங்களிருவருக்கும் சிநேகம் அதிகரித்து வந்தது. ஒருநாள் நான் இவரிருந்த அறைக்குப்போனபொழுது இவர் வேறொருவரின் மென்னியைப் பிடித்து உறந்துகொண்டிருந்தார். நான் உட்பிரவேசித்ததும் அவர் விலக்கிக்கொண்டு என்னைப்பார்த்து,

"நான் அப்படி செய்யவேண்டியிருந்தது; நீ வந்திராவிட்டால் அப்படியே கொன்றிருப்பேன் என்று சொன்னார்.

நான் ஒன்றுமே பேசவில்லை மறுமடியும் அவர்,

"சற்றுப்பொறு. நான் தந்தி கொடுத்துவிட்டு சீக்கிரம் திரும்புகிறேன் என்றார்.

நான் மேஜையைப்பார்த்தேன். பலகடிதங்களிருந்தன. அவைகளிலொன்று என் முதல்புருஷனிடமிருந்து வந்தது. அவர் பிடிபடும் ஆறுமாதத்திற்கு முன் எழுதப்பட்டது.

"பிரியமுள்ள சுந்தரம்! பத்திரம். இன்னும் கைக்கெட்டவில்லை. அது கிடைத்தும் உடனே அனுப்பிவிடுகிறேன். உம்முடைய, ரா.

சிலநிமிஷங்கள் பிரமித்து அப்படியே நின்றேன். அந்தப் பத்திரத்தை நானே பார்த்து எழுதியிருக்கிறேன். இதனர்த்தமென்ன? என்ன வெளிப்பட்டது- நானோ அவரை கெடுக்க உளவாயிருப்பது. நான் அந்தக் கடிதத்தை எடுத்து வைத்துக்கொண்டேன். சுந்தரமும் திரும்பி வந்தார். அதற்குப்பிறகு என்ன நடந்ததென்பதெனக்கு ஞாபகமில்லை.

அவர் மேஜையில் காணப்படாத கடிதத்தைப்பற்றிக் கேட்டார். அதைக்கொடுக்கும்படியாய் கட்டாயப்படுத்தினார். சத்தம் போட்டு மிறட்டினார். ஒன்றுக்கும் அஞ்சாமல் நான் வெளியில் வந்து வண்டியிலேறிக்கொண்டு என் அத்தைவீட்டுக்கு வந்து விட்டேன். என்னைத் தொடர்ந்து கொண்டே பின் வந்தார். நான் வண்டியிலிருந்து கீழிறங்கியதும் மறுபடியும் கடிதத்தைக் கொடுக்கும்படிக் கேட்டார். நான் ஒன்றும் பேசாது. என் அத்தை வீட்டுக்குள் நுழைந்து விட்டேன். இராத்திரி என் படுக்கையின்கீழ் அவரைக்கண்டேன்.

அடங்காக்கோபத்தால் நான்கண்டதும் கையில்கண்டதைக்கொண்டு நெற்றினேன். நான் அவரைக்கொன்றேனென்பது எனக்குத் தோற்றவில்லை. இருந்தால் மிகவும் பயந்திருப்பேன். இந்தக்கடிதம் அவருக்கு முக்கியமானது. நான் குற்றவாளியின் புத்திரி. குற்றவாளியின் மனைவி. நானே குற்றவாளி இனியென்ன ? நானும் கஷ்டமனுபவிக்கவேண்டியதுதான், என் விதியை ஒருவாறு மதியால் வெல்ல வீட்டிற்குப்போய் அக்கடிதத்தைப் பத்திரப்படுத்த விரைந்துசென்றேன். மறுநாள் காலை அத்தைவீட்டுக்குத்திரும்பினேன். பிறகுதான் நான் செய்தது இன்னதென்பதைத் தெரிந்துகொண்டேன். பாக்கி விஷயங்கள் உமக்கே தெரியும்.

என்னை நீர் என்னசெய்யச்சொல்லுகிறீர்? என்னை நீர் என்னசெய்யப்போறீர் ?"

இந்தவிபரீதவரலாற்றை காது கொடுத்துகேட்டேன். அவள் ஆத்திரமடங்க சில நிமிஷங்கள் பொறுத்தேன்.

நீ என்னிடம் எல்லாவற்றையும் சொன்னது நல்லதாயிற்று. நான் உன்னைக்காப்பாற்றுகிறேன், உனக்கு உதவி அவசியம். நீ நூதனமான சிக்கலில் சிக்கிக்கொண்டிருக்கி

றுய். நீ எல்லாரிடமும் அவனை உனக்குமுன்தெரியாதெ றும், திருடனென்று நினைத்து தற்பாதுகாப்புக்காக அப் டி செய்தேனென்றும் சொல்லிக்கொண்டாய். நீஉண்ண மைச் சொல்லாவிடில் விபரீதகாரியங்கள் நடக்கும்' அவ உண்மையை வெளிவிடாமல் சும்மா இருப்பதினிமித்தம் திருட்டுக்குற்றத்துக்காக தண்டிக்கப்படுவான். இது உன் மேல்பழி. இப்படியில்லாவிடில், உண்மையை அப்படியே வெளியிட்டிருப்பான். இப்படி செய்திருந்தால் உனக் கென்ன உண்டாகுமென்பதையும் யோசித்துப்பார். நீய உடந்தையாயிருந்ததாகக்கருதப்படும். இதைப்பற்றி யெல் லாம் சிந்தித்துப்பார்த்தாயா?

அவளுடம்பெல்லாம் சிவந்தது.

"என்னுடைய தப்பிதமெல்லாம் எனக்குத் தெரிகி ன்றது. இதெல்லா மொன்றும் முன்பு எனக்குத் தோற்ற வில்லை. எனக்காவேசமேதோவிருக்கிறது. என்மனது அதிலேயே செல்கிறது."

"சுந்தரத்துக்கு உன் முதல் காதலனைத்தெரியுமோ?" என்று நான் கேட்டேன்.

"தெரியாது. நிச்சயமாத்தெரியாது."

"மிகவும் நல்லது. அவ்வளவுக் கவ்வளவு க்ஷேமம் தான். இந்த விஷயம் தாமதமின்றிதீர்மானத்துக்குவரவேண் டும். நான் என்ன செய்வதாயிருந்தாலும் சரிதானே. என் னிடம் உனக்கு நம்பிக்கையிருக்கிறதோ இல்லையோ?"

"நம்பிக்கையுண்டு எல்லாம் எனக்கு நீதான். என்ன செய்தாலும் செய்யும்."

நான் அரைமணிக்குள் ஆஸ்பத்திரிசேர்ந்தேன். என க்குமுன்பே மாஜிஸ்திரேட் அங்குவந்திருந்தார், தாமதம்

செய்வதால் அநர்த்தம் உண்டாகும். சுந்தரன் வெளிர்த்த முகத்துடன் சாய்ப்புக்குறிச்சியில்சாய்ந்து கொண்டிருந்தான்.

" தாங்கள் சௌக்கியந்தானே. உடம்பு தேவலையா? " என்றேன்.

என்னை ஒருதடவைபார்த்து முகத்தைஅப்புறம் திருப்பிக்கொண்டான். என் நாற்காலியை பக்கத்துக்கு இழுத்துக்கொண்டு,

சிலதினங்களுக்குள் உம்விதி பப்ளிக்பிராசிகூட்டர் கையில் சிக்கிவிடும். அதனால் உமக்குத்தீமை விளையும். ஏனெனில் நீர் அவள் வீட்டுக்கு திருடச் சென்றதாக எல்லாரும் நினைக்கிறார்கள். நான் மட்டும் அப்படிநினைக்கிறதில்லை. முதலிலிருந்தே நீர் அங்கு செல்ல உம்மைத்தூண்டினது வேறெதோகாரிய மென்பதை யறிந்து கொண்டேன். அக்காரியமும் உம்மெண்ணமும் எனக்கு இப்பொழுது தெரிந்தாய் விட்டது. ஆகையால் நீர் செய்யாததும் செய்யச்சிந்தியாததுமான ஒரு குற்றத்துக்காக நீர் தண்டிக்கப்படுவது என் மனதுக்கு சரியில்லாமலிருக்கிறது.

" இப்பொழுதாவது உண்மையை வெளியிடுவாயா?"

அவன்பெருமூச்சுவிட்டான்.ஒன்றும்பேசாமலிருந்தான்

" சுந்தரம்! என்னுடன் நீர் இப்படியிருப்பதுசரியன்று. பாலாம்பாள் சகலமும் என்னிடம் கூறியாயிற்று. "

" இதைப்பிடியும் நடுங்குகிறது, நான் கையை ஆதாவாகப்பிடித்துக்கொண்டு,

"பதாாதேயும் சமாதானமாயிரும் நீர்மனதிலுள்ளதை மறையாமல் வெளியிட்டால் என் வேலை சுலபமாகும்,

வாயைத்திறவும் புண்யமாகப் போகட்டும் என்று அனு தாபமிகுதியால் பரிந்து கூறினேன்.

ஏதோ மனதிலுள்ளதை வெளியிட்டு சஞ்சலமற்றிருக்க ஆவலுள்ளவர்போல் அவசரமாய் சொல்லத்தொடங்கினர்.

பாலாம்பாளின் இரகசியங்களை அறிந்தாயிற்று. என் இரகசியங்களையும் நான் சொல்லிவிடுகிறேன். வளர்த்துவதில்லை. சுருக்கமாகவே முடித்துவிடுகிறேன். எங்கள் இராஜ்யம் மல்லிபுரம். என் தந்தை கடலுக்கப்புறமுள்ள தேசங்களில் வியாபாரம் செய்துகொண்டிருந்தார். அவர் அதையெல்லாம் விட்டு 10 வருஷகாலமாக சுகஜீவனம் செய்துவருகிறார். இதன் மத்தியில் ஒரு விஷயம் நடந்தது. அவர் காலத்தை வீண் விரயம்செய்து கழிக்கறியாதவரானதால் அவர் ஏதாவது செய்யலாமென்று பார்த்தார். அவருக்கு சூதாட்டத்தில் வெறுப்பாயிருந்தது. பொழுது போக்குக்காக ஆட ஆரம்பித்தார். முதலில் லாபம் வரவும் அதிலே அவர் மனம் சென்றது. அதிலேயே மூழ்கிவிட்டார். இவ்விஷயம் எனக்காவது என் தாயாருக்காவது தெரியாது. ஒருநாள் அவர் ஏதோ மிக்க லாபகரமான காரியத்தில் பிரவேசித்திருப்பதாகச் சொன்னார். எங்கள் வீட்டுக்கு முன்பின் நமக்கள் அறியாதவர்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். இவர்கள் தனியான அறைக்குள் போய்விடுவார்கள். என்ன செய்வார்களோ எங்களுக்குத் தெரியாது. பணமெல்லாம் போய்விட்டது. விசனத்தால் அவர் தேக அசௌக்கியமாயிருக்கிறார். அவர் போக்கிலிகளும் அயோக்கியர்களுமானவர்களுடன் சகவாசம் செய்து அவர்களால் மோசஞ்செய்யப்பட்டார். அவர்களில் இருவர்கள் கைது செய்யப்பட்டுத் தண்டனையடைந்தார்கள். பொய்க் கையெழுத்துக்காக தண்டிக்கப்பட்டவன் ரங்கசாமி.

"பாலாம்பாளின் முதல் காதலன்."

சுந்தரன் ஆச்சரியத்தால் வாய்திறந்து என்னை ஏறெடுத்துப் பார்த்தான்.

"அவளுடைய புருஷனு? உமக்குறுதியாய்த் தெரிமா?

"தடையென்ன?"

சிலநிமிஷங்கள் சிந்தித்துக்கொண்டிருந்ததால் ஒன்றும் பேசவில்லை.

இதுதான் அவள் அப்படிச்செய்யக்காரணம்தெரிந்தது. எனக்கு விபத்துநேரிடப்போகிறதென்பதுஎனக்கு முன்னே தெரியும். எப்படியாவது என் தந்தையை ஆபத்திலிருந்து விடுவிக்கவேண்டுமென்று முயன்றேன். கேஸ்காரர்களுக்கெல்லாம் பணம் கொடுத்து சமாதானம் செய்யப்பார்த்தேன். நான் பேசுமிடத்துக்கெல்லாம் வந்து இவள் இடையூறுகள் செய்தாள். மிக்கமுக்கியமான சிலகடிதங்களைக் (உமக்குஇது தெரியும்) கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டாள்! எப்படியாவது அவைகளை கைபற்றுவது என்ற உறுதியுடன் அவளைத்தொடர்ந்து சென்றேன். இதுதான் என் வரலாறு.

"இதை முன்னமே சொல்லியிருக்கக்கூடாதா? அனுவசியமான தாபதம் ஏன் செய்தீர்?" என்று சொல்லி பல்லை நறுநறு என்று கடித்தேன்.

"உமக்கெப்பொழுதாவது மண்டை உடைந்திருக்கிறதா? இல்லையேல் அதனால் மூளைக்குண்டாகும் களைப்பு இன்னதென்பதை அறிய முடியாது. நான் பேசாமலிருந்ததற்கு காரணம் என் நிலைமையைக் கெடுத்துக்கொள்ளாமலிருப்பதின் நிமித்தமே. அதெப்படி முடியுமென்பது கடவுளுக்குத்தான் தெரியும்"

"இவ்விஷயத்திற்கு சம்பந்தமான கடிதங்கள் முதலிய வைகள் எல்லாவற்றையும் என்னிடம் ஒப்புவித்துவிடும்."

அவர் அவைகள் ஒருவரிடமிருப்பதாக அவர் விலா த்தைச் சொன்னார். அப்படியே அவைகளைச் சம்பாதித் தேன். பாலாம்பாள் கொடுத்தவைகளோடும், இவைகளையும், நன்றாய்ப் படித்துப்பார்த்து இவர்கள் சொன்னவைகளில் பொய்யொன்று மில்லையென்று கண்டுகொண்டேன். இ களை பப்ளிக் பிராசிகூடரிடம் ஒப்புவித்து விஷயங்களை ச த்தச்சொன்னேன். அவர் திருப்தியடைந்து உடனே கோ டில் ஆஜராய் கேஸை வாப்ஸ் வாங்கிக்கொண்டார்.

மூன்று வருஷங்கள் கழிந்தன. நான் ஒருவரைக்கண்டு திடுக்கிட்டு நின்றேன். நான் யோசித்து அவரை சுந்தரமெ ன்று கண்டேன்.

"கல்யாணமாயிற்றா! என்று கேட்டேன்.

"ஆம் இதோ என் மனைவியிருக்கிறாள்" என்றார்.

அவள் என்னைக்கண்டதும் வெட்கி தலை குனிந்து,

"உமக்கு ஆச்சரியமா யிருக்கிறதல்லவா?" என்றாள்.

"இல்லை. ஆச்சரியமென்ன? உன் ஆவேசமெப்படி யிருக்கிறது?"

"அது ஒழிந்தது. நான் மிகவும் சந்தோஷமாயிருக்கி றேன். கல்யாணமே செய்துகொண்டோம்."

"அவர் தலையை உடைத்த தினமே உன் ஆவேசம் உன்னைவிட்டு நீங்கிற்று."

"பேசாதேயும் அதைப்பற்றி என்று என் வாயைப் பொத்தினாள்.

நாடகம் முற்றிற்று.